3

OFFICE OF THE REGISTRAR
2-OCT 1939
MADRAS

ஓம்

ஞானசாகரம்

(அறிவுக்கடல்)

JNANASAGARAM

இது
முப்பத்து நான்கு ஆண்டுகளாக நடைபெறுந்
தனிச் செந்தமிழ் வெளியீடு
A BI-MONTHLY

திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௦, கார்த்திகை, மார்கழி.
திருமலர், ௧அ.] [இதழ், ௧௧, ௧௨.

பொருளடக்கம்

சிவஞானபோத ஆராய்ச்சி
(The Critique of Sivajnana Bodham)
சோமசுந்தர நாயகர் வரலாறு
(Life-Sketch of Somasundara Nayagar)
இளைஞர்க்கான இன்றமிழ்
(Tamil Reader for the Young)
நாகநாட்டரசி குமுதவல்லி
(Kumudavalli, a high class Tamil Novel)

ஆசிரியர்:
மறைமலையடிகள் என்னும்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,
SWAMI VEDACHALAM,
பொதுநிலைக்கழக குரு,
பல்லாவரம்
PALLAVARAM

பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள
திருமுருகன் அச்சுக்கூடத்திற்
T. M. PRESS
பதிப்பிக்கப்பட்டது.

25th September, 1939.

ஒரு திருமலர்க் கையொப்பம்] [நான்கு ரூபா நாலணா

All Rights Reserved.

ஓம்

பல்லாவரம், ஆசிரியர் மறைமலையடிகளின்
பொதுநிலைக்கழக 26=ஆம் ஆண்டு
நிறைவுவிழா நிகழ்ச்சி அறிக்கை

முன் தொடர்ச்சி

போரில் தோற்றுப் புறங்காட்டியோடும் அரசர்மேலும் அவர்தம் படைஞர் மேலும், அவரைவென்ற அரசர் அம்புகளை எவியதில்லையென்னும் வரலாறு,

"அழிபவர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாக்
கழிதறுகண்மை காதலித் துரைத்தன்று" என்னும் உரைப்பாவால் அறியப்படுகின்றது. தோற்று ஓடுவார்மேல் தாம் வாள்ஓச்சா அருள்மறம் மட்டுமேயன்றித், தம்மேற் பகைவர் வேல்கொண் டெறிந்தகாலத்துந் தமதுகண் இமையாது நிற்கும் அஞ்சா ஆண்மையும் பண்டைத்தமிழ்ப் படைஞர்பாற் சிறந்து விளங்குகின்றது.

இனிப், போரிற்சிறந்துநிற்கும் 'போர்வீர'மேயன்றி, 'ஈகைவீரம்' 'ஒழுக்க வீரம்' 'ஞாயவீரம்' 'ஞானவீரம்' என்பனவும் பழைய தமிழ்மக்கள்பாற் காணப்படுகின்றன. பழைய சோழவேந்தன் ஒருவன் தன்னை அடைக்கலம்புக்க ஒரு புறாவைக் காத்தற்பொருட்டுத் தன்னுடம்பின் சதையை அதற்கு ஈடாக அரிந்தரிந்து கொடுத்ததே ஈகைவீரம்; கணவனையிழந்த கலன்கழிமகளிர் ஆடவர் பிறர்தம்மைக்கண்டு விரும்பாமைப் பொருட்டுத்தாமே தமது கூந்தலைக்களைந்து விட்டசெயல் ஒழுக்கவீரம்; ஆரியப்படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் தான் ஆராயாது கோவலனைக் கொலைசெய்வித்த பிழையினை அறிந்ததுந் தன்னுயிரை மாய்த்துக்கொண்டது ஞாயவீரம்; அறுபத்துமூன்று நாயன்மாருஞ் சிவபிரானிடத்தும் அவனடியாரிடத்தும் வைத்த பேரன்புகாரணமாகத் தம் மனைவியை ஈந்ததுந் தம்மகவினை அரிந்ததுந் தங்கண்ணை இடந்ததுந் தம்முயிரை அளித்ததும் போல்வன ஞானவீரம் என்று அறிதல்வேண்டும்.

இத்துணைச்சிறந்த வீரமெல்லாம் பழந்தமிழ்மக்கள் உடையராயது எதனுலென்று சிறிது உற்றுநோக்குவோமாயின், அவர்களை ஈன்ற பழைய தமிழ்த் தாய்மார்களின் மனமொழி மெய் நிலைகளே அவற்றிற்கு எதுவாய் இருந்தமை புலனாகும். "பந்திக்குமுந்து படைக்குப்பிந்து" எனக் கற்பித்துத் தம் பிள்ளைகளை வெறுஞ் சோற்றுருட்களாக்கிவிட்ட இக்காலத்துத் தாய்மார்களின் மனநிலை, அஞ்ஞான்றைத் தாய்மார்களுக் கிருந்ததாயின், மேற்கூறிய பலதுறைகளிலும் வீரர்களாய் நம் ஆடவரும் மகளிரும் அழியாப்புகழ்படைத் திருத்தல்கூடுமோ? "தொட்டிலை ஆட்டுவதே உலகத்தை ஆட்டுவது" என்னும் ஆங்கிலப் பழமொழிக்கு எற்பத், தாய்மார்கள் தஞ்சிறுவர்க்கு அவர் சிறுவராயிருக்குங் காலந் தொட்டே எவ்வளவுக்கு வீரத்தைப்புகட்டுகின்றனரோ அவ்வளவுக்கு அவர் பற்பலதுறைகளிலும் வீரராய்த்துலங்குவர்.

நந்தமிழ்மக்களின் பழம்பெருமையை நாம் ஆராய்ந்துணரவுணர நமக்குப் புதுப்பெருமை உண்டாகும். பழம்பெருமையை உணராதவர்க்குப் புதுப்பெருமை யுண்டாதல் அரிதினும் அரிது. தமிழரின் அடிப்பட்டபெருமை அவர் கால்வழியில் வருவார்க்குப் பிறப்பிலேயே அமைந்திருக்கின்றது. இதற்கு நம் ஆசிரியர் மறைமலையடிகளாரே சான்று.

நமதரிய செந்தமிழ்மொழி எல்லாவளனும் ஒருங்குநிறைந்தது. அதன்கண் வடமொழிச்சொற்களை மிகுதியாய்ச்சேர்ப்பது ஓர் அழகிய மங்கையின் உடம்பெங்கும் பொட்டுவைத்து அவ்வழகினை அருவருப்புடைய தாக்குவதை யொக்கும். நெற்றிப்பொட்டுப்போல் ஒன்றிரண்டுசேர்ப்பது குற்றமாகாது.

என்று அழகிதாகப் பேசியபின், மறைமலையடிகள் செய்யுந் தமிழ்த் தொண்டு சிவத்தொண்டைவியந்து ஒரு வாழ்த்துச்செய்யுள் கூறி அமர்ந்தார்.

அதன்பிற் சிறப்புத்தலைவர் பாரதியார் எழுந்து ஆரிய நாகரிகத்தைப்பற்றிய விரிவுரைமேற் பல அரியகருத்துகளை மொழிந்தனர். அவற்றுட்சிலவருமாறு:- நாகரிகம் என்னுஞ் சொல்லுக்குக் கண்ணோட்டம் என்பதே பழைய தமிழ்இலக்கியங்களிற் கண்டபொருள்; அது,

னங்கண்டீர்? வடமொழிப்புராணங்கள் உரைப்பக்கண்டாமெனின்; வடமொழியார் அவர் வடமொழிபேசினார் என்ப; தமிழ்மொழியார் அவர் தமிழ்பேசினரென்ப. உண்மைகாண்பவர் அவர்வழங்கியது தமிழேயன்றி வடமொழி அன்றென முடிவுகூறுவர். ஏனெனில், அதனை ஒருசிறிது விளக்குதும். வடமொழி வழங்கிய ஆரியர் இவ்விந்திய நாட்டுட் புகுமுன்னரே, இதன் வடக்கேயுள்ள பனி (இமய) மலை தொடுத்துத் தெற்கேயுள்ள குமரிவரையிலுங், கிழக்கே வங்கநாட்டிலிருந்து மேற்கே பெலுசித்தானம் வரையிலும் பேசப்பட்ட மொழி தமிழேயாகும். இது, தமிழ்வழங்கிய மாந்தரைத் 'தஸ்யுக்கள்' என்றழைத்து அவருடன் போராடிய பண்டை ஆரியர் பாடிய இருக்கு வேதப்பாட்டுகளால் நன்கு புலனாகின்றது. இதன் விரிவை 'மாணிக்கவாசகர் காலம்,' 'பண்டைத்தமிழர் ஆரியர்,' 'முற்காலபிற்காலத் தமிழ்ப்புலவர்,' 'வேளாளர் நாகரிகம்' முதலான எம்முடைய பிறநூல்களிற் கண்டுகொள்க.

இன்னும், இவ்விந்தியதேயத்தின் வடமேற் கெல்லைக்குள் உள்ள பஞ்சாப்பு மாகாணத்தின்கண் இருக்கும் **அரப்பா, மொகிஞ்சதரோ** என்னும் இரண்டு இடங்களில் முன்னொருகால் நாகரிகத்தில் தலைசிறந்து விளங்கிய இரண்டு பெரிய நகரங்கள் அழிந்துபட்ட குறிகள் தோன்றக்கண்டு, நம் ஆங்கில அரசின் **பழமையாராய்ச்சிக் கழகத்தார்** அவ்விடங்களை அகழ்ந்துபார்க்க, அங்கிருந்த நகரங்களின் சிறந்தகட்டிடங்களும், அவற்றின்கண் இருந்த பண்டங்கள் கலங்கள் கோயில்கள் அக்கோயில்களிலிருந்த பல சிவலிங்கவடிவங்கள் அக்கோயிற் சுவர்களிற் பொறிக்கப்பட்ட ஓவிய எழுத்துக்கள் முதலிய பலவும் புலப்படலாயின. இவையவ்வளவும் ஐயாயிர ஆண்டுகளுக்கு முன் உயிர்வாழ்ந்த தமிழ்மக்களுக்கு உரியவைகளென்றும்; அத்தமிழ்மக்கள், இரும்பைப் பயன்படுத்தத்தெரிந்த மக்களின் பழங்காலத்திற்கும் முன்னே செம்பையும் வெண்கலத்தை

யுமே பயன்படுத்தத்தெரிந்த அத்துணைப்பழைய காலத்தே யிருந்தவரென்றும்; அப் பண்டைத் தமிழ்மக்கள் வணங்கிய சிவலிங்கவடிவங்கள் அவ்விடங்களில் ஏராளமாய்ப் புதைபட்டிருந்ததனை உற்று நோக்குங்கால் அவர்க்குரிய சைவசமயமானது உலகத்தின்கண் மிகத்தொன்றுதொட்ட காலத்தேயிருந்து இன்றுகாறும் அழியாது நிலவுந் தனிப்பெருஞ்சிறப்புவாய்ந்தது என்னும் உண்மைநன்கு விளங்கா நிற்கின்றதென்றும் அக்கழகத்தலைவரான **சர் ஜான்மார்ஷல்** என்னும் ஆங்கிலத்துரைமகனார் நுண்ணிதின் ஆராய்ந்து விளக்கி யெழுதியிருக்கின்றார்.* மறுக்கல் ஏலாத மெய்ச்சான்றுகள்கொண்டு இவ்வாங்கிலத் துரைமகனார் நடுநின்று நுவலும் மெய்யுரையாற் சைவசமயமும் அதனைத் தழுவிய தமிழ்மக்களும், இவ்விந்திய நாட்டுக்குப் புறம்பேயிருந்து ஆரியர் இதனுள் வந்து நுழைதற்கு முன்னரேயே, இதன் மேற்கெல்லைவரையிற் பரவியிருந்ததுமன்றி, அப் பழந்தமிழ்மக்கள் அப்பண்டைநாளிலேயே நாடுநகரங்கள் வகுத்துஞ் சிவலிங்கவடிவங்கள் நிறுவிய சிவபிரான் றிருக்கோயில்கள் பற்பல அமைத்தும், நாகரிகத்தில் மிகச் சிறந்தாராய்த் திகழ்ந்திருந்தனரென்னும் வாய்மையும் நன்கு புலனாகின்றதன்றோ?

இன்னும், இற்றைக்கு எண்பத்துமூன்று ஆண்டுகளுக்கு முன்னமே, தமிழையுந் தமிழோடினமான ஏனைப் பதின்மூன்று மொழிகளையும் ஆழ்ந்து மிகநுண்ணிதாய் ஆராய்ந்து முடிபுகண்ட **கால்டுவெல்** என்னும் ஆங்கில ஆசிரியர், இவ்விந்திய நடுநாடுகளிற் 'கோண்டர்' என்பார் பேசுமொழியும், ஒரிசா நாட்டையடுத்த மலைநாடுகளிற் 'கொண்டர்' என்பார் வழங்கும் மொழியும், வங்காள தேயத்தில் ராஜமால் மலைகளில் உறையும் 'மாலர்' என்பார் பேசும் மொழியும், சூடியாநாகபுரத்திலும் அதனை

---

* See Sir John Marshall's "Mohenjo-daro and the Indus Civilization," Vol. 1.

யடுத்த நாடுகளிலும் உள்ள 'ஓராஓனர்' என்பார் வழங்கும் மொழியும், இவ்விந்திய நாட்டின் வடமேற்கேயுள்ள பெலுசித்தானத்தில் உயிர்வாழும் 'பிராகுவியர்' என்பார் பேசும் மொழியும், இமயமலைச்சாரலிலும் பிறவடநாடுகளிலும் வழங்கும் பல்வேறு மொழிகளும் பண்டைத்தமிழ் மொழியின் திரிபுகளாய் இருத்தல்கண்டு, மிகப்பழைய காலத்தே இவ்விந்தியதேயம் முழுவதூஉம் பரவியிருந்தவர்கள் தமிழ்மக்களே யாவரென்றும், அவர் வழங்கியவை தமிழுந் தமிழின்றிரிபான மொழிகளுமே யாகுமென்றும் முடித்துச் சொல்லியிருக்கின்றார்.*

இன்னும், அப்பழங்காலத்தே மேல்நாடு சென்று நாகரிகத்தைப் பரவச்செய்த **சுமேரியர், பாபிலோனியர்** முதலான மக்கட்குழுவினருந் தமிழ்மக்களே யாவரென்றும், இவர்கள் ஆரியர் வருதற்கு முன்னமே பஞ்சாப்பு சிந்து பெலுசித்தான மாகாணங்களைத் தமக்கு உறைவிடமாய்க் கொண்டிருந்து அங்கிருந்து மேல்நாடுகளுக்குக் காலினுங் கலத்தினுஞ் சென்று வாணிகம் நடாத்தியும் அவருள் ஒரோவொரு கூட்டத்தார் அந்நாடுகளிற் பற்பல இடங்களிற் குடியாக வைகியும் வாழ்ந்துவந்தனரென்றும், அங்ஙனம் அவர்கள் மேனாட்டவருடன் வாணிகம் நடாத்தியஞான்று தாங் கொண்டுசென்ற தமிழ்ஓவிய எழுத்துகளே பின்னர்ப் பாபிலோனிய தேயத்தில் முளையெழுத்துகளின் வடிவத்தை (Cuneiform shape) எய்தினவென்றும் 'ஹால்' (Dr. H. R. Hall) என்னும் ஆசிரியர் தமக்கு முன்னமே பரந்தாழ்ந்து ஆராய்ந்து வரைந்திருத்தலை 'மார்ஷல்' துரைமகனாரே தமது நூலுள் நன்கெடுத்துக் காட்டியிருக்கின்றார்.

இன்னும் இங்ஙனமே இஞ்ஞான்றை ஆராய்ச்சியாளர் பலரும் நடுநின்றாராய்ந்துரைக்கும் உரையெல்லாம், ஆரியர்

---

* See "Dr. Caldwell's Comparative Grammar of the Dravidian Languages" 1 st edition, 1856, page, 72.

இவ்விந்திய நாட்டுட் புகுமுன்னர்த் தமிழ்மக்களே இவ் விந்தியதேயம் முழுதும் இதனையடுத்துள்ள பெலுசித்தா னத்தும் நிறைந்திருந்து நாகரிகத்தில் மிக்கு விளங்கின ரென்னும் உண்மையினை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ள விளக்குகின்றன.

இத்துணைச்சிறந்த பண்டைத் தமிழ்மக்கள்பாற் றோன் றிய சான்றோர்களே, கடவுள் உயிர் மலம் என்னும் முப் பொருட்டன்மைகளையும் உள்ளவா றாராய்ந் துணர்ந்து, அவை தம்மை உலகமெங்கணும் பரவச்செய்து வந்தன ரென்பது, பழந்தமிழ் முனிவராகிய திருமூலர்,

"தமிழ்மண்டலம் ஐந்துந் தாவிய ஞானம்
உமிழ்வதுபோல உலகந் திரிவார்,
அவிழும் மனமும் எம்ஆதி யறிவுந்
தமிழ்மண்டலம் ஐந்துந் தத்துவம் ஆமே" (கசூசசூ) [என்றும்,
"சதாசிவந் தத்துவம் முத்தமிழ்வேதம்" (அசூ) என்

றுந் தமது திருமந்திர மெய்ந்நூலின்கண் விளம்பிய வாற் றாலுந் தெற்றென விளங்காநிற்கும்.

இவையல்லாமலும், பண்டையாரியர் இறந்துபட்ட தம் முன்னோர்க்கு உயிர்க்கொலை வேள்விகள் வேட்டு ஊனுங் கள்ளும் அருந்தி வெறியாட்டு அயர்வதிலேயே முனைத்து நின்றனரன்றி ஊனுங் கள்ளும் மறுத்த அருள் ஒழுக்கத்தில் உளம் ஒருங்கி நின்று, இறைவனியல்பும் உயிர்களினியல்பும் உயிர்களைப்பிணித்த மும்மலவியல்பும் ஆழ்ந்தறிந்து, தம்மைத் தூய்மைசெய்து இறைவன் றிரு வடிக்கட் கனிந்துருகும் மெய்யன்பினராய் நின்றவர் அல் லர். இருக்கு எசுர் சாமம் அதர்வம் முதலான நான்கு வேதங்களிலும் ஆரியராற் பாடப்பட்ட பதிகங்களில் ஆரி யர் வணங்கிய சிறுதெய்வ வணக்கமும் வெறியாட்டு வேள் வியுமல்லால், வேறு சிறந்த பொருளைச் சிறிதுங்காண்டல் இயலாது; மற்று, அவர்களுக்கு மெய்யறிவுச் சுடர்கொளீஇ அவர்களைத் திருத்துதற்பொருட்டுப், பண்டைத் தமிழ்ச்

சான்றோர் சிலர் அவ்வேதங்களின் இடையிடையே யியற்றிச் சேர்த்திருக்குஞ் சிற்சில பதிகங்களின் மட்டுமே இறைமுதற்பொருளாகிய உருத்திரரின் வணக்கமும் மற்றுஞ் சில உயர்ந்த கருத்துகளுங் காணப்படுகின்றன. இதனால், வேதகால ஆரியர் ஒரு தெய்வவணக்கமும் அருளொழுக்கமும் மெய்யுணர்வும் ஒரு சிறிதும் உணராப் பேதைமாக்களாதல் தெளியப்படும். இப்பெற்றியரான இவர்பானின்றுஞ் சிவஞானபோதச் செம்பொருள் போந்ததெனக் கூறுவாருரையினும் மடமைமிக்கது பிறிதில்லையென்க.

இனி, வேதகாலத்திற்குப்பின், வெறியாட்டு வேள்விகள் வேட்கும் வகையினை வறிதே விரித்துச் "சதபதபிராமணம்," ஐதரேயபிராமணம்" முதலான பிராமணங்கள் இயற்றப்பட்ட காலத்திருந்த ஆரியரும், ஊனுங் கள்ளும் விடாராய், ஆண்மக்களையுங் கொலைசெய்து அவரது இறைச்சியினையும் அயின்ற வன்னெஞ்சக் கொடியராகக் காணப்படுதலால், அவர்பானின்றுஞ் சிவஞானபோதச் செம்பொருணூல் போந்ததெனக் கரைவாரினுங் கயவர் பிறர் இலர்.

இனி, வேதகால பிராமணகாலங்கட்குப் பிற்பட்ட உபநிடத காலத்திருந்த ஆரியமுனிவர்களோ, தமிழ்ச்சான்றோரின் அறவுரைகேட்டுப் பழைய வெறியாட்டு வேள்விகளை அறவே கைவிட்டவர்கள்; அவ்வேள்விகளையும் அவற்றிற்போந்த சிறுதெய்வவணக்கத்தையும் அவ்வணக்கவுரை மலிந்த அவ்வேதநூல் பிராமண நூல்களையும் மிகவே பழிப்பவர்கள். இது முண்டகோப நிடதத்தின்கட் கண்டு கொள்க. மேலும், இவ்வுபநிடதகாலத்து ஆரியமுனிவர்கள், அஜாதசத்துரு, ஜனகன், அசுபதிகைகேயன் முதலான மெய்யுணர்வுமிக்க தமிழ்வேந்தர்களால் மெய்யுணர்வு தெருட்டப்பட்ட வரலாறுகள் பிருகதாரணியம், கௌஷீதகி, சாந்தோக்கியம் முதலான பழைய உபநிடதங்களில்

நன்கெடுத்துக் கூறப்பட்டிருத்தலால், உபநிடதகாலத்தாரி யரினின்று சிவஞானபோதச் செம்பொருள் போந்ததெனக் கிளத்தலும் இயலாதென்க.

அற்றேல், உபநிடதகாலத்தாரியர் சிவஞானபோதச் செம்பொருள் காணமாட்டாதவரே யாயினும், அவர்க்கு மெய்யறிவு தெருட்டிய தமிழ்வேந்தர் பெருமக்களே தாம் அறிந்த வடமொழியிற் சிவஞானபோதத்தை யியற்றிவைத் தனராக, அதனை வடக்கிருந்துகொணர்ந்த ஒரு தமிழ் முனிவரே அதனை மெய்கண்டதேவர்க்கு அறிவுறுத்துச் செல்லப், பின்னரதனை மெய்கண்டதேவர் தமிழ்மொழி யில் மொழிபெயர்த்தாரென உரையாமோவெனின்; உரை யாமன்றே; என்னே? அங்ஙனம் உரைத்தற்கு மெய்கண்ட தேவரருளிச்செய்த சிவஞானபோதநூலிலாதல், அதன் முகத்துவைக்கப்பட்ட சிறப்புப்பாயிரச் செய்யுளிலாதல் ஏதொருசான்றுங் காணுமையினென்பது. இது முன்னுங் காட்டினும்.

என்றிதுகாறுங் காட்டியவாற்ருல், "நந்தி முனிகணத் தளித்த உயர் சிவஞானபோதம்" என்ற மாத்திரையானே, அது வடமொழியில் இயற்றப்பட்டதோர் அறிவுநூலாகத் தான் இருக்கவேண்டும் என்றும், வடநாட்டில் அஞ்ஞான் றிருந்த மாந்தரனைவரும் வடமொழிபேசிய ஆரியரேயாவர் என்றுங் கரைவாருரை பொருந்தாமை இனிது விளங்கா நிற்கும். அந்நாளில் வடநாடெங்கணுமிருந்தவர் தமிழ்மக் களே யாவரென்பதூஉம், அவர் அப்பழங்காலத்தும் வழங் கியது தமிழ்மொழியே யாமென்பதூஉம் ஆராய்ச்சிவல்ல நடுநிலையாளர் இஞ்ஞான்று ஆய்ந்துநிறுவியிருக்கும் அரும் பேருண்மைகளே யாமென்று கடைப்பிடிக்க.

சிவஞானபோதத்தின்கட் காணப்படுங் குறிப்புகள் கொண்டு, அந்நூல் மெய்கண்டதேவராலேயே முதன் முதல் தமிழில் இயற்றப்பட்ட வகையினை மேல்எடுத்து விளக்கினும். தங்காலத்துக்கு முன்னிருந்த வடமொழி

தென்மொழி அறிவுநூற்பொருள்கள் பெரும்பாலன ஒரு துறைப்பட்டு நில்லாவாய் முன்னொடு பின் பெரிதுமுரணி அளவைமுறை பிறழ்ந்து, கடவுள் இல்லையெனக் கரைவனவும், கடவுள் அல்லாதவற்றைக் கடவுள்எனக் கட்டிச் சொல்வனவும், உயிர் என்று ஒருமுதல் இல்லை உணர்வுகளின் தொகுதியே அதுவாமெனக் கிளப்பனவும், உணர்வுகள் அழிய உயிர் இலவாமேனும் உயிரினாற்செய்யப்பட்ட வினைகளே ஓர் உருவுகொண்டு மறித்துமறித்தும் உயிர்களைத் தோற்றுவித்துப் பிறவிகளில் உய்க்குமென நுவல்வனவும், உலகமும் உலகத்திற்கு முதலான மாயையும் இல்பொருள்களே யாமெனப்பகர்வனவும், உயிர்களுக்கு உலகியற்பொருள்களும் அவற்றிற்கு முதலான மாயையுமே அறியாமையினைத் தருவனவாமெனக் கூறுவனவும், அறியாமையென்பது ஒளியின் எதிர்மறையான இருள்போல் அறிவின் எதிர்மறையாவதல்லது அஃதோர் உள்பொருளாகாதென உரைப்பனவும், இம்மையில் நுகருமின்பத்தைத் தவிர மறுமைக்கட்பெறும் இன்பமொன் றில்லையெனக் கிளப்பனவும், இப்பிறவியொழிந்தால் இனிப்பிறவியொன் றில்லையென இசைப்பனவும், ஈகை அறம் தவம் திருவுருவ வழிபாடு முதலியனவெல்லாம் மடவோர்க் குரியவென இயம்புவனவும் ஆகி மக்கட்குத் திரிபுணர்ச்சியினைப் பயந்து, அவரது பிறவியினைப் பாழாக்குவனவாய் இருத்தல்கண்டே, ஆசிரியர் மெய்கண்டதேவர், அவர்மேல் வைத்த பேரிரக்கத்தால், அந்நூற்பொருள்களின் இகலறுத்து, முப்பொருள் உண்மைகளை அளவைநூன்முறையில் முன்பின் றொடர்புபடவைத்துத் தெள்ளித்தெளித்துச் சிவஞானபோதச் செம்பொருணூலைச் செந்தமிழ்த் தெய்வமொழிக்கண்ணே இயற்றியருளினாரென்று கடைப்பிடித் துணர்ந்துகொள்க.

இவ்வாறு மெய்கண்டதேவ நாயனாரால் இயற்றிவைக்கப்பட்ட சிவஞானபோதத்தின் ஒப்புயர்வில்லாத் தனிப்

பெருஞ்சிறப்பைக்கண்ட வடமொழிப்பற்றுடைய எவரோ ஒருவர், அதன்கண்உள்ள சூத்திரங்கள் பன்னிரண்டை மட்டும் வடமொழியில் மொழிபெயர்த்து வைத்திட்டார். அங்ஙனம் வடமொழியில் மொழிபெயர்த்து வைப்பினுந், தாம் மொழிபெயர்த்த சூத்திரங்கள் பன்னிரண்டுஞ் சிவஞானபோதத்தின்கண் உள்ள வாய்மையினை மறையாது விளம்பிவிடல்வேண்டித், தாம் மொழிபெயர்த்த பன்னிரண்டாஞ் சூத்திரத்திறுதியில், "இங்ஙனமாகச் சிவஞானபோதத்திற் சைவசித்தாந்தப் பொருண்முடிபை அறிந்துகொள்க"* என்று அம்மொழிபெயர்ப்புக்காரர் உண்மையைத்திறந்துஞ் சொல்லிவிட்டார். மெய்கண்டதேவர் அருளிச்செய்த பன்னிரண்டாஞ் சூத்திரம், "ஆலயந்தானும் அரன்எனத்தொழுமே" எனக்கூறிமுடிக்க, வடமொழிப் பன்னிரண்டாஞ் சூத்திரமோ அதற்குமேலும், "இங்ஙனமாகச் சிவஞானபோதத்திற் சைவசித்தாந்தப் பொருண்முடிபை அறிந்துகொள்க" என வேறொன்று சேர்த்துக் கூறிமுடிக்கின்றது; இப்பெற்றியினை உற்றுநோக்குங்கால், அவ்வடமொழிச் சூத்திரங்கள் பன்னிரண்டுந் தமிழ்ச் சிவஞானபோதச் சூத்திரங்கள் பன்னிரண்டன் மொழிபெயர்ப்பாதல் பொள்ளெனப் புலனாகாநிற்கும்.

என்றிதுகாறும் ஆராய்ந்துரைத்த வாற்றால், தமது பிள்ளைமைக் காலத்திலேயே தம் ஆசிரியன்பாற் சைவசித்தாந்த முடிபொருளுணர்ந்த மெய்கண்டதேவர், தாங்கண்ட அம் முடிபொருளுக்குமாறாக வடமொழி தென்மொழிப் போலிச்சமயநூல்கள் முப்பொருட்டன்மைகளை முன்னொடுபின் மாறுகோளுறப் புரட்டிக்கூறுதல் கண்டு, உலகத்திற்கு மெய்ப்பொருள் தேற்றவானெழுந்த அருட்பெருக்காற் சிவஞானபோதநூலை இயற்றியருளினாரல்லது, அத்தகையதொருநூல் வடமொழியிலிருப்பக்கண்டு அத

* "ஏவம் வித்தியாச்சிவஞாநபோதே சைவார்த்த நிர்ணயம்"

யெல்லாஞ் 'சூதர்' 'வியாசர்' முதலான முனிவர்களே இயற்றினார்க ளெனவும் பொய்யுரை பகர்ந்தனர்.

அதுமட்டுமோ, ஆழ்வார்கள் காலத்துக்கு முன்னும் ஆழ்வார்கள் காலத்திலும் எல்லாஞ் சிவபிரானை வழிபடுவாருந் திருமாலை வழிபடுவாரும் வழிபாடு ஆற்றுங்காலங்களில் தம் நெற்றியிலும் உடம்பிலுந் திருநீற்றையே பூசிவந்தனர். இவ்வுண்மை,

"கரிய மேனிமிசை வெளியநீறு சிறிதே இடும்
பெரிய கோலத் தடங்கண்ணன்" எனவும்,
"நீறு செவ்வே இடக் காணின்
நெடுமாலடியார் என்று ஓடும்" ("எறியபித்திேனாடு" என்னும் செய்யுள்) எனவும் நம்மாழ்வார் தாம் பாடியபாடல்களிற் கூறுமாற்றால் நன்கு விளங்காநிற்கும். இன்னுந் தமிழ்நூல்களின் மட்டுமேயன்றி, வடமொழியிற் சிறந்த அறிவுநூல்களாக வைத்துப் பாராட்டப்படும் 'அதர்வசிரசு', 'அதர்வசிகை', 'கைவல்யம்', 'காலாக்நிருத்ரம்', 'சுவேதாசுவதரம்', 'பஸ்மஜாபாலம்', 'ருத்ராக்ஷஜாபாலம்', 'ப்ருஹஜ்ஜாபாலம்' முதலான உபநிடதங்களுந் திருநீறு, உருத்திராக்கம் அணிதலையே புகழ்ந்தெடுத்துப் போற்றுகின்றன. அதுவேயுமன்றி, 'ராமரஹஸ்யோபநிஷத்' இராமர் தமது உடலமெங்குந் திருநீறு பூசியிருத்தலையும், 'ஸாண்டில்யோபநிஷத்' தத்தாத்திரேயர் அங்ஙனமே தமது திருமேனி முழுதுந் திருநீறு அணிந்திருத்தலையுஞ் சிறந்தெடுத்துக் கூறுகின்றன.

இவ்வாறாக வடமொழி தென்மொழிப் பழைய நூல்களும், வைணவ ஆழ்வார்கள் பாடிய பாட்டுகளும் எல்லாந், திருநீற்றுப் பூச்சினையே சைவ வைணவப் பெரியார் அனைவரும் மேற்கொண்டிருந்த வரலாற்றினை விளக்கமாய் எடுத்துக் கூறாநிற்கவும், ஆழ்வார்கட்குப் பின்வந்த இராமாநுசர் முதலான வைணவ ஆசிரியர்கள் அவற்றிற்கு மாறாக, நெற்றியில் மண்பூசும் ஒரு புதிய வழக்கத்தை உண்டாக்கித், தெய்வ வழிபாட்டின் மட்டுமேயன்றிப் பழக்க வழக்கங்களிலும் வேற்றுமையின்றி ஒரு தொகுதியினராயிருந்த நந் தமிழ் மக்களைத் தெய்வ வழிபாட்டில் வேறாக்கி ஒருவரை யொருவர் பகைத்துப் போராடுமாறு செய்துவைத்ததுமல்லாமல், அவர்களில் ஒருகுழுவினர் நெற்றியில் மண்பூசி வேறு தனியராய் நின்று கலாம் விளைக்குமாறுஞ் செய்துவிட்டனர். நெற்றிமண் பூசுவாரிலும் ஒரு கூட்டத்தினர் நடுவிற் செம்மண்ணும் அதன் இருபுறத்தும் வெள்ளை

மண்ணும் பூசாநிற்க, மற்றொரு கூட்டத்தினர் நடுவில் மஞ்சள் மண்ணும் பக்கங்களில் வெள்ளை மண்ணுங் குழைத்து இடுகின்றனர்! இன்னும், வைணவரில் ஒரு பெரும் பகுதியினர் நெற்றியிற் காலிழுத்த நாமந் தீட்டிக்கொண்டு தம்மைத் 'தென்கலையார்' என்று சொல்லிக்கொள்ள, மற்றொரு பகுதியினர் கால்இன்றி வளைத்த நாமந் தீட்டிக்கொண்டு தம்மை 'வடகலையார்' என்று வழங்கிக் கொள்கின்றனர்! அதுவேயுமன்றி, இத்தென்கலை வடகலைக் கூட்டத்தினர் தத்தங் கொள்கையே உண்மையெனப் பகர்ந்து தமக்குட் பெரிதும் இகலித் தீராப் பெரும்போர் புரிந்தும் வருகின்றனர்! இங்ஙனமெல்லாஞ் சைவசமயத்தொடு மாறுபட்டும், அங்ஙனம் அதனொடு மாறுபட்டாலுந், தமக்குள்ளாவது ஓர் ஒற்றுமையுடையராய் வாழாமல் தமக்குள்ளேயே பலவேறு வகையினராய்ப் பிளவுபட்டுக் கலாம் நிகழ்த்துவாரான இப்பல்வேறு வைணவக் குழுவினருந், தாந் தாம் புதிய புதியவாய்ப் படைத்த கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் நிலைநிறுத்துவான்புகுந்து, அவைகளுக்கேற்ற பொய்யுரைகளையும் பொய்க்கதைகளையும் வரவர மிகுதியாய்ப் படைத்து வடமொழியிற் பலநூல்களை இயற்றியுஞ் சிலவற்றை வடமொழிப் பழைய நூல்களில் நுழைத்தும் பெரியதொரு குழப்பத்தையுந் தலைதடுமாற்றத்தையும் உண்டாக்கலாயினர். தென்றமிழ் ஆரிய நூற் பழங்கொள்கைகளையும் பண்டைக்கால நன்மக்களின் பழக்கவழக்கங்களையும் உண்மையான் ஆராய்ந்துணர்ந்த சைவசமயப் பெரியார்கள், பிற்காலத்து வைணவர்கள் செய்யுஞ் சமயப் புரட்டுகளைக் கண்டு அருவருத்து, அவையிற்றைச் சிறிதுசிறிதா எடுத்து வெளிப்படுத்தி உலகில் உண்மையை விளக்கத் துவங்கவே, சைவசமயத்திற்கும் வைணவத்திற்கும் வேற்றுமையும் பகைமையும் விளையலாயின வென்று அறிந்துகொள்ளுதல் வேண்டும். இச்சமயப்பூசலில் வைணவர்கள் சைவர்களைப் பகைத்தாற்போற், சைவர்கள் வைணவர்களைப் பகைத்திலாமை இருவர்தம் பழக்கவழக்கங்களையுஞ் சிறிது நோக்கினாலும், நேரே நன்கறியலாம்.

ஆகவே, வடமொழியில் வைணவர்களாற் புதியவாய்ப்படைத்து நுழைக்கப்பட்ட புராணப் புரட்டுரைகளை எடுத்துக்காட்டிப், பிறப்பு இறப்புஇல்லா முழுமுதற் கடவுளிலக்கணங்களை உலகிற்கு விளக்கிக் காட்டுதலே தமக்குரிய இன்றியமையாக் கடமையாக நினைந்து நாயக

ரவர்கள் தமது இருபத்தேழாம் ஆண்டிற் சிவாதிக்யரத்நாவளி முதற்பாகத்தை இயற்றி வெளியிடலானார்கள்.

இந்நூலுக்கு முன்னும் இராமாநுஜமதசபேடிகை எனப் பெயரிய ஒருநூல் நாயகரவர்களால் இயற்றப்பட்டு வெளிவந்தமை, 'சிவாதிக்யரத்நாவளி' முதற்பாகத்தில் அதனை அவர்கள் குறித்திருப் பதனால் அறியப்படுகின்றது. ஆயினும், அந்நூல் எமக்குக் கிடைத் திலாமையின், அதனைப்பற்றி எதுஞ் சொல்லுதல் இயலவில்லை.

இனிச், 'சிவாதிக்யரத்நாவளி' முதற்பாகம் நாயகரவர்களது புத் திளமைக் காலத்திற் பெரிதாராய்ந்தெழுதப்பட்ட அரிய மறப்புரை நூலாக விளங்குதலால், அதன்கட் பொதிந்த அரும்பொருள்கள் சிலவற்றை ஈண்டெடுத்துச் சுருக்கிக்காட்டுதும்; அவைகொண்டு நாயகரவர்களின் அரும்பெரும் புலமையும் ஆராய்ச்சித் திறனும் அவர்கள் சைவசமய விளக்கத்திற்கு ஆற்றிய பெருந்தொண்டின் விழுப்பமும் எவரும் எளிதிலுணர்ந்து பயன்பெறலாமாகலின்:

சென்னையிலிருந்த பொன்னப்ப பிள்ளை யென்னும் பெரியார் ஒருவர், அக்காலத்திருந்த வைணவர் சிலர் சிவபிரானை இழித்துப் பேசிய இழிப்புரைகளைக் கேட்டு மனம்பொறாராய் 'மூடமதி கண்ட னம்' எனப்பெயரிய ஒரு மறுப்புநூல் எழுதி வெளியிட்டன ரென் றும், அதுகண்ட 'நாகபட்டினம் இராமாநுஜசித்தாந்த சபையார்' தூண்டுதலின்மேல் ஒரு வைணவர் 'நன்மதி விளக்கம்' எனப்பெயர் தந்து அதற்கோர் எதிர்மறுப்பு வெளியிட்டனரென்றும், அவ்வெதிர் மறுப்புக்குப் பெரு மறுப்பாகவே நாயகரவர்கள் சிவாதிக்யரத்நா வளி இயற்றி வெளியிடலாயிற்றென்றும் நாயகரவர்களே இந்நூற் றுவக்கத்தில் இந்நூல் வரலாறு தெரிவித்திருக்கின்றார்கள்.

க. வேதாந்த சூத்திரத்தில் விலக்குண்ட பாசுபத பாஞ்ச ராத்திர மதங்கள்.

வேதாந்த சூத்திரத்தில் "பத்யுரசாமஞ்ஜஸ்யாத்" என்னுஞ் சொற்றொடரால் இறைவனை நிமித்த காரணன் எனக்கூறும் பாசு பதமதத்தை வியாசர் மறுத்துக்கூறுதலின், பாசுபதமுஞ் சிவாகமங் களும் ஒப்புக்கொள்ளற்பாலன அல்ல என்று சங்கராசாரியார் அதற்கு உரை கூறியிருத்தலை அவ்வைணவர் எடுத்துக் காட்டினர்.

அதற்கு நாயகர் கூறும் மறுப்பு: இறைவன் உலகின் வேறாய் நின்று அதனைப் படைப்பான் எனப் பகர்வாரை வியாசர் மறுத்

தனரேயன்றிச், சிவபிரானையுஞ் சிவாகமங்களையும் அதன்கண் எள்ளளவுங் குறைத்துப் பேசிற்றிலர். அங்ஙனமாகவுஞ், சங்கராசாரியார் கடவுளும் உலகமும் ஒன்றேயென்னுந் தமது மாயாவாதக் கொள்கையை அச்சூத்திரத்தில் நுழைத்தல் வேண்டிப் பாசுபத மதத்தை அங்கே கொணர்ந்து அதனை அவர் மறுத்தாற்போலவே, 2-ஆம் அத்தியாயத்து 2-ஆம்பாதத்து ௪௪-ஆஞ் சூத்திரவுரையில் வைணவமதத்தையுங் கொணர்ந்து மறுத்திருத்தலின், சங்கராசாரியாருரை, சைவர் வைணவரிருவர்க்கும் உடம்பாடாகாததென்பது அறியற்பாற்று.

மேலுங், கடவுளை நிமித்த காரணராகக் கொள்வார் எவராயினும் அவரெல்லாரையும் வியாசர் ஒருங்கே மறுத்திருக்கின்றனர். சைவர்களிலிருந்து புதிதுதோன்றிய 'பாசுபதர்' என்னும் ஒருசாரார் கடவுளை நிமித்த காரணராகமட்டும் வைத்துரைப்பது பொருந்தாதாகலின், அவரை மறுத்தற்குப் "பத்யுரசாமஞ்ஜஸ்யாத்" என்னுஞ் சூத்திரம் எழுந்ததெனக் கூறினவர்கள் நீலகண்ட சிவாசாரியார் சங்கராசாரியார் முதலான உரைகாரரேயாவர். அவர் கூறிய அவ்வுரை கொண்டு, சைவசித்தாந்தமுஞ் சிவாகமங்களும் வேதாந்தமான உபநிடதங்களுக்கு மாறாகும் எனக் கரைவது பொருந்தாது. இன்னுஞ், சங்கராசாரியார்க்கு முன்னே 'வேதாந்த சூத்திரத்'திற்கு உரை வகுத்தவரான நீலகண்ட சிவாசாரியாரே, "யாம் வேத சிவாகமங்களுக்கு வேற்றுமை கண்டிலம்; வேதமுஞ் சிவாகமம் எனப்படும்" என ௩அ-ஆஞ்சூத்திரவுரையில் நன்கெடுத்துக் கூறினர்.

இனி, வேதங்களிலுஞ் சிவாகமங்களிலுங் கூறப்பட்ட பொருள்கள்: பதி பசு பாசம் என்னும் முப்பொருள் இலக்கணங்களும், பஞ்சப்பிரம மந்திரங்களும், ஆறு அத்துவாக்களினியல்புகளும், சிவவழிபாட்டிலக்கணங்களும், சிவபிரான் திருக்கோயில் இலக்கணங்களும், அத்திருக்கோயிலிற் செய்யப்படுந் திருவிழாச் சிறப்புகளும் ஆம் என்பதனை நாயகரவர்கள் விளக்குவான் புகுந்து, முதலில் வேதவுரைகளை எடுத்துக் காட்டுகின்றார்கள்:

"இரண்டுகாலும் நான்குகாலும் உள்ளவைகள் பசுவெனப்படும்"
"அப்பசுக்களுக்குப் பதியாவான் உருத்திர மூர்த்தியே யாகும்"

இருக்குவேதம், க0, கஉக, ௩.

"பதியாகிய சிவபிரானை அறிந்தவர்கள் எல்லாப் பாவங்களினின்றும் நீங்கி, எல்லாக்கவலைகளும் ஒழிந்து, பிறப்பு இறப்புக்களைக் கடந்து வீடுபேறெய்துவர்." சுவேதாசுவதரோபநிடதம், க, கக.

"சிவஞானத்தை எய்தின புலவர்கள் குடும்பபாசத்தைக் கொளுத்துவர்" கைவல்யோபநிடதம், கக.

இனி, எசுர் ஆரணியகத்தில் அடங்கியுளதான நாராயணபிரசிநசதமந்திரத்தில் 'சத்யோஜாதம்' முதலான சதாசிவமூர்த்தியின் ஐந்துமுகங்களை நோக்கி வழிபடும்வணக்கங் காணப்படுதலின் பஞ்சப்பிரம மந்திரங்கள் வேதத்தினும் உளவாதல் தெளியப்படும்.

அங்ஙனமே, ஆறத்துவாக்களுக்குப் பதியாகிய உருத்திரரே! என வேதம் இறைவனை விளித்தலின், ஆறத்துவாக்களும் ஆண்டுக் கூறப்பட்டமையும் இனிது விளங்காநிற்கும்.

இனி, இருக்குவேத வழியதான போதாயந கற்பசூத்திரத்தில் முப்புரம் எரித்த இறைவன் வழிபாடு முதலியன நுவலப்படுதலின், சிவவழிபாடுஞ் சிவபிரான் திருக்கோயில் அத்திருக்கோயிற் றிருவிழா முதலியனவும்வேதத்திற் குறிப்பிக்கப்பட்டனவேயாதல்பெறப்படும்.

இவ்வாறு வேதங்களிற் சுருக்கமாக வைத்துரைக்கப்பட்ட சைவ சமயப்பொருள்கள் ஆறுஞ் சிவாகமங்களில் விரிவாக விளக்கிச்சொல்லப்படுதலின், வேதமுஞ் சிவாகமமும் இவ்வாற்றுல் ஒன்றேயாதல் பெறப்படும்.

இனிக், கூர்மபுராணத்திற் சிவபிரானுந் திருமாலும் மயக்கநூல்களை உண்டாக்கினர்களென்பது சொல்லப்பட்டமையின், சிவபிரான் அருளிச்செய்த சிவாகமங்கள் கொள்ளற்பாலன அல்லவெனின்; அக் கூர்மபுராணமே, பாசுபத விரதத்தைத் தெரிவிக்கும் ஆகமமந்திரங்கள் வேதத்தினின்றும் பிழிந்தெடுத்த சாறுமென்றும், வீடுபேற்றை விரும்பினவர்கள் அவற்றை ஓதற்பாலராவரென்றுங் கூறுதலின், அப்புராணத்தால் விலக்கப்பட்ட மயக்கநூல்கள் சிவாகமங்கள் அல்லாமை தெற்றெனவிளங்காநிற்கும். அற்றேல், அதனுல் விலக்கப்பட்ட மயக்கநூல்கள் யாவையோவெனின்; பிணச்சாம்பல், மக்களின் எலும்பு தலையோடு முதலியவைகளை உடல்மேல் தாங்குதல் வேண்டுமெனக்கற்பிக்கும் 'வாமபாசுபதம்' என்னும் மதத்தையும், ஆசிரியன் மனைவியைப் புணர்தல் முதலான கொடிய செயல்கள் குற்றம் ஆகாவெனக்கிளக்கும் 'சௌமமதத்'தையும், மண்டையோடு கைக்கொளல்

கட்குடித்தல் முதலிய தீயசெயல்களைச் செய்யுமாறு நவலும் 'லகுலீச பைரவ மதங்'களையும் பற்றிய நூல்களே மயக்கநூல்களென அதனால் விலக்கப்பட்டமை பகுத்தறிந்து கொள்ளற்பாற்று. அற்றாயின், இத்தகைய தீயநூல்களை இறைவனே அருளிச்செய்தானெனக் கரைந்தது என் எனின்; தீயராய அசுரர்களைமயக்கி அழித்தற்பொருட்டு இறைவனே அவற்றை அருளினனென்க.

அங்ஙனமே, அது, 'பாஞ்சராத்ர'மும் அரக்கர்களை மயக்குதற்பொருட்டுச் செய்யப்பட்ட நூலாகலின் அதுவுங் கொள்ளற்பாற்றன்று எனக் கூறுதல் காண்க. 'மஹிம்நாஸ்தவத்'திற் புஷ்பதந்த முனிவரால் தழுவப்பட்டது, சங்கு சக்கிரங்களைச் சூடேஎற்றித் தோள்களிற் பொறிக்கும் புதிய வைணவமல்லாததும், சைவசமயத்துக்கு மாறாகாமல் திருமாலை உமையம்மையின் வடிவமாகவைத்து வழிபடுவதும் ஆன பழைய வைணவமேயாகும். சங்கு சக்கிரங்களைச் சூடேற்றிச் சுடும் புதியவைணவம் இராமாநுசரால் உண்டாக்கப்பட்டதும், வேதங்களுக்குமுற்றும் முரணுவதுமாகும்.

௨. வேத ஆகம விளக்கம்

இனி, வேதங்களாவன: இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என நான்காதலும், அவற்றுள் இருக்கு ௨௧, எசுர் ௧0௯, சாமம் ௧000, அதர்வணம் ௯ சாகைகள் உடையவாதலும், அவை 'அற்பசுருதிவாக்கியம்', 'பிரபலசுருதிவாக்கியம்' என இருதிறப்படுதலும், அவற்றுள் முன்னைய வேள்வியாற்றுதல் முதலான வினைகளையும், பின்னைய பதி பசு பாச ஞானங்களையும் அறிவுறுப்பனவாதலும், வேதம் என்னுஞ் சொல் அறிதற்கருவியெனப் பொருள் தருதலும், வேதப்பொருளை உணர்தற்குக் கருவியாவன சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி என ஆறாகுதலும், இவற்றின் விளக்கங்களுங் காட்டப்படுகின்றன.

அதன்பின், சிவாகமங்கள் 'காமிகம்' முதல் 'வாதுளம்' ஈறாக இருபத்தெட்டாதலும், இவை 'மந்திரம்', 'தந்திரம்', 'சித்தாந்தம்' என முப்பகுதியவாதலும், இவை யொவ்வொன்றுஞ் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பொருளைக் கூறுவனவாதலும், ஆகமம் என்னுஞ் சொற் பதி பசு பாச இயல்புகளை யுணர்த்துவதென்றேனும் உயிர்களுக்கு அறியாமை தீர்த்து மெய்யுணர்வு பிறப்பித்து வீடுபேற்றினை நல்குவிப்பதென்றேனும் பொருள் படுவதாதலும்,

இவ்விருபத்தெட்டாகமங்களின் வழித்தோன்றிய 'உபாகமங்கள்' 'விசுவகன்மம்' முதல் ௨0௭ ஆதலும், இவையிற்றின் விரிவுகளும் நுவலப்படுகின்றன.

இனிச், சிவாகமங்களின் சிறப்பும்பயனும், 'இரத்தினத்திரயம்,' 'ஸ்காந்தம்,' 'வாயுசங்கிதை', 'ஆலஸ்யமான்மியம்', 'அதர்வசிரசு', 'சூதசங்கிதை', 'சங்கரசங்கிதை', 'சைவபுராணம்' முதலான நூல் மேற்கோள்கொண்டு நிறுவப்படுகின்றன. சிவாகமங்கள் சுருக்கமான வேதவுரைகளுக்கு விரிந்த விருத்தியுரைபோல் விளங்கலானும், வேதங்களில் நுவலப்பட்ட காயத்திரிமந்திர உருவேற்றுமியல், "சாலிங்க ஸ்தாவரலிங்கங்கள்" நிலைபெறுத்தி வழிபாடாற்று முறைகள், எரியோம்பும் வகைகள், திருக்கோயில் அமைக்கும் முறைகள் போல்வன பலவுஞ் சிவாகமங்களாலன்றி வேதங்களால் உணர்தல் இயலாமையானும், வேதப்பொருளை மெய்யாகத் தெளிந்து கோடற்குச் சிவாகமப்பயிற்சி இன்றியமையாது வேண்டற்பாலதாயிருத்தல் காண்க.

நீலகண்டசிவாசாரியார் வேதாந்தசூத்திரத்திற்குத் தாம் வகுத்த பேருரையில் இறைவன்றன் முற்றறிவு இயற்கையுணர்வு தன்வயத்தனாதல் முதலான ஆறு இயல்புகளையும், உயிர்கள் எய்துதற்குரிய முக்காலவுணர்ச்சி அணிமாமுதலானபேறு அமைதிமுதலான குணங்களையுஞ் சிவாகமமேற்கோள்கள் கொண்டே விளக்கியிருத்தலும், பாஸ்கராசாரியார் 'லலிதாஸஹ்ஸரநாமத்'திற்குத் தாம் இயற்றிய விருத்தியுரையிலுஞ் சிவாகமவுரைகளை எடுத்துக்காட்டி அம்மையின் பெயர்ப்பொருளை விளக்கியிருத்தலுஞ் சிவாகமங்கள் வேதத்தினும் பார்க்கச் சிறப்புப்பயனும் மிகுதியும் உடையவாதல் தெளியப்படும். எனவே, சங்கராசாரியார் தமது வேதாந்தசூத்திரவுரையிற் சிவாகமங்களை இழித்துப்பேசியதும், அதனை வைணவரொருவர் தமக்குத்துணையாக எடுத்துக்காட்டியதும் பொருத்தமில் செயல்களாமென்றுணர்ந்துகொள்க.

இனிச், சங்கராசாரியார் சைவசமயத்தை மறுத்தாரெனக் கரைவாரது கூற்றைக் களைதற்கு நாயகரவர்கள் "நீலகண்டவிஜயத்" திலிருந்து ஒருநிகழ்ச்சியினை எடுத்துக்காட்டுகின்றார்:

மாயாவாதவேதாந்தத்தைப் பரவச்செய்வாரான சங்கராசாரியார் ஒருகாற் சித்தாந்த ஆசிரியரான நீலகண்ட சிவாசாரியாரைக் காணப் போயினர். கண்டு, தாம் வேதாந்தசூத்திரத்திற்கு எழுதிய உரைப்பொருள்களை எடுத்துக்கூறிக்கொண்டே வந்தனர். அவைகளைக் கேட்ட நீலகண்டர் தாம் வேதாந்தசூத்திரத்திற்கு எழுதிய உரைப்

பொருள்களையும் எடுத்துச்சொல்லித், தாம் உரைத்தவுரையே சூத திரக்கருத்தை நேரே இனிது விளக்குதலுஞ், சங்கராசாரியார் இயற் றியவுரை சூத்திரப்பொருளை நேரே விளக்காமையோடு அதன் கருத் துக்குமாறுவன கூறுதலும் எடுத்துக்காட்டினர். அவ்வாறு நீலகண் டர் நிகழ்த்திய தடைகளுக்கு விடைசொல்லல் இயலாமல் வாய் அவிந்த சங்கரர் மனம்புழுங்கி நரசிங்கமூர்த்தியை அலறி அழைக்க, உடனே நரசிங்கர் அஞ்சத்தக்ககொடிய வடிவத்துடன்தோன்றி நீல கண்டரைக் கொல்லுதற்குச் செல்லாநின்றனர். அதுகண்ட நீலகண் டர், சரபப்பறவையின் உருவங்கொண்ட வீரபத்திரரை நினைந்து அழைத்து, அந்நினைவில் உறைத்துநிற்க, உடனே சரபப்பறவையா னதுதோன்றி அந்நரசிங்கத்தைத் தன் நகங்களால் இருகூறாக்கிக் கொன்றது. அதனைக்கண்டு திகில்கொண்ட சங்கரர் தாஞ்செய்த பிழையினைப் பொறுக்கும்படி வேண்டி நீலகண்டர் திருவடிகளில் வீழ்ந்துவணங்கினர். நீலகண்டர் அவரைமன்னித்து, அவர்க்குச் சிவ தீக்கைசெய்து சிவபிரானைப்பாடுக என்று கட்டளையிடச், சங்கரர் 'சிவானந்தலகரி', 'சௌந்தரியலகரி', 'சிவபுஜங்கம்' முதலான நூல் களை இயற்றிச் சிவபெருமானையும் அம்மையையும் உளங்குழைந்து வழுத்தியதுடன், அந்நூல்களில் திருஞானசம்பந்தப்பெருமான், கண் ணப்பர், சிறுத்தொண்டர், இயற்பகையார், சண்டேசுரர் முதலான சிவனடியார் செய்த சிவத்தொண்டின் அருமை பெருமைகளையும் வியந்தெடுத்துச் சொல்லினர்.

இங்ஙனமாகலின், சங்கரர் சைவசித்தாந்தத்தை மறுத்தனரென வைணவர்கூறும்உரை அடாதவுரையாமென்க.

இன்னும், மாணிக்கவாசகப்பெருமான் திருவாசகச் செந்தமிழ் மாமறையில்,

"பிரமன் அரியென் றிருவருந்தம் பேதைமையாற்
பரம மியாம்பர மென்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழலுருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்க மாடாமோ"

என்றருளிச்செய்த திருப்பாட்டில் திருமாலை இகழ்ந்து பேசினரென' அவ் வைணவர் குறை கூறினர்.

திருமால், சிவபிரான் றிருவடியைத் தேடி யலுத்த நிகழ்ச்சி பழைய வடநூல்களில் நுவலப்பட்டிருத்தலின், அதனையே மாணிக்க வாசகர் எடுத்துக்கூறினர். அது குறையாதல் யாங்ஙனம்? அவ்

அக்கையின் தெளிவான தோலோ நீலநரம்புகளின் மெல்லிய சுவடு களைப் புலப்படக்காட்டியது. இடுப்பின்கீழ் உடுக்கப்பட்டு முழங்கால் வரையிற் றொங்கும் மேலாடையானது பெரிய பொற் சரிகைக் குச்சு உடையதாயிருந்தது; இதற்குக் கீழே உடுக்கப்பட்டிருந்த சிறுநிறமுள்ள நீண்ட பட்டாடைமேல் இஃது அணியப்பட்டிருந்தமையால் இஃது அவ்வுடுப்பின் அழகை மிகவுஞ் சிறப்பித்துக் காட்டுவதாயிற்று. மெல்லிய வெண் சல்லாவினுற் செய்யப்பட்ட முக்காட்டு ஆடையானது அவள் முடிமேலிருந்து முதுகின்கீழ்த் தொங்கியது—அது சிலவேளை வீசிய சிறுகாற்றிலே பறந்தது—சிலவேளை குதிரை உடம்பின்மேல் அலை அலையாய் அழகுடன் மிதந்துகிடந்தது.

இளம்பெண்கள் இருவருந் தம் இளம்பெருமாட்டியின் உடையினும் விலை மிகக் குறைந்ததே உடுத்திருந்தார்களாயினும், அவ்வுடை அழகிற்குறையாதாய் நாகரிகமும் நேர்த்தியும் வாய்ந்ததாயிருந்தது. குமுதவல்லியும் அவள் தோழிமாருஞ் சைவ சமயத்திற் சேர்ந்தவர்களாயிருந்தமையால், ஏனை வடநாட்டுப் பெண்களின் வழக்கம்போல் தமது முகங்களை முழுதும் முக்காட்டினுல் மறைத்துக்கொள்ள வேண்டுமென்னும் ஏற்பாடு உடையவர்களாய் இல்லைஎன்பதை இதனைப் பயில்வோர் நினைவில் வைக்கவேண்டும்.

அவ்வழகிய பெருமாட்டியும் நல்ல தோற்றமுள்ள அவள் பாங்கிமார் இருவரும் ஆக மூவரும் நன்றாகச் சேணம் இடப்பட்ட குதிரைகளின்மேல் அமர்ந்து, தமக்குப் பின்றுணையாய்ப் படைதாங்கி வந்த நீலகிரி நாட்டுமக்கள் பன்னிருவரினின்றும் மிக வேறாய் விளங்கிய தோற்றமானது நிரம்பவும் மனத்திற்கு இனியதாயிருந்தது. சாவடியை விட்டுப் புறப்பட்ட பிறகு, முதலிற் சில நாழிகை வழி வரையிற் குறிப்பிடத்தக்கது ஏதும் நிகழவில்லை; ஆனுற், கடைசியாக நாக நாட்டரசியும் அவள் பாங்கிமாரும் ஐந்து நாழிகை நேரம் இளைப்பாறவும், அவர்கள் குதிரைகளை இளைப்பாற்றவும், இப்போது வழித்துணையாக வந்தவர்கள் அவர்களைப் பிரிந்துபோகவும் வேண்டிய ஓரிடம் வந்து சேர்ந்தது. குமுதவல்லி இப்போது தன் பாங்கிமாரொடு மட்டும் பயணம் போவதா, அல்லது வேறொரு துணையைத் தேடிக்கொள்வதா என்று தீர்மானிக்க வேண்டியவளானுள். நாம் முன்னமே மொழிந்த காரணங்களைக்கொண்டு அவள் முந்திய ஏற்பாட்டின்படி நடக்க எண்ணங்கொண்டாள்: ஆனுல், இந்தத் தங்குமிடத்தில் வந்த ஒரு செய்தியினுல் அவள் தான் கொண்ட இவ்வெண்ணத்தை மாற்ற வேண்டியவளானுள். இச்செய்தி நல்லானைப் பற்றியதன்று; மற்று இஃது அக்கொள்ளைக்காரனைவிடத் திகில் கொள்ளத்தக்க ஒருபகைவனைப் பற்றியதாகும். சுருங்கச் சொல்லுங்கால், அங்கே அடுத்துள்ள இடத்தில் வழிதப்பித்திரியும் ஒரு புலியானது

தென்பட்டது. சுந்தராம்பாளும் ஞானம்பாளும் இச்செய்தியைக்கேட்டுத் துயரத்தோடு திடுக்கிட்டார்கள்; குமுதவல்லியுந் தான் அச்சமில்லாதவளாய் இருக்கவில்லை. ஆகவே, படைக்கலம் பூண்ட இரண்டு ஆண்மக்களை வழித்துணை கொள்ளும்படி தீர்மானஞ் செய்யப்பட்டது; இந்த ஏற்பாடானது பிறகு முறையே கைக்கொள்ளப்பட்டது.

திரும்பவுங் குமுதவல்லி தன் பாங்கிமாரோடும், வழித்துணையாகக் கொள்ளப்பட்ட இரண்டு வலிய நீலகிரி நாட்டாருடனும் பயணம் புறப்பட்டபோது ஏறக்குறையப் பிற்பகல் இருபத்திரண்டுநாழிகை யாயிற்று. இவ்வாண்மக்கள் இருவரும் உடம்பெங்கும் படைகள் தாங்கி வலிய குதிரைமேல் ஏறியிருந்தார்கள்: அக்கொடிய விலங்கு கண்ணுக்கு எதிர்ப்பட்டால் உறையினின்றுங் கைத்துப்பாக்கிகளை இழுப்பதற்கு அவர்கள் தங் கைகளைச் சீராக வைத்திருந்தார்கள். அவர்கள் போன வழியானது அந்நாட்டின் அழகிய ஓரிடத்தின் ஊடே சென்றது. அங்கே பழங்களைச் சுமை சுமையாய்த் தாங்கிய மரங்களும், பழக்குலைகள் நிறைந்து பொறை மிகுந்த கொழுமையுள்ள கொடிமுந்திரிகளும் வழிகளுக்கு நிழலைத்தந்து இடுக்கு வழிகளுக்குத் திரைமறைப்புப்போல் இருந்தன; இன்னும் அங்கே பசுமைசென்ற வரம்புகளின் பின்னே, அகன்ற பெரிய இடங்கள் பூசனிப்பழங்களாலுங் கொம்மட்டிப்பழங்களாலும் மூடப்பட்டிருந்தன. இது பலவகைப்பழங்களுந் தாமே வளர்ந்து செழிக்குங் காடாயிருந்தது!

கடைசியாகத் தங்கிய இடத்தினின்றும் அவர்கள் புறப்பட்டு வந்த பிறகு இரண்டரைநாழிகை கழிந்தது; இச்சமயத்திற் சிறிது தொலைவிலிருந்து தாழ்ந்த உறுமல் ஒலியொன்று தொடர்பாய் வரக்கேட்டாற்போற் குமுதவல்லிக்குப்பட்டது; உடனே கடிவாளத்தைப் பிடித்துத் தன்குதிரையை நிறுத்திக் கொள்ளவே, சிலஅடி பின்னேயிருந்த அவள் பாங்கிமாரும் வழித்துணைவரும் ஒரு நொடியிற் கிட்டவந்து சேர்ந்தார்கள். சுந்தராம்பாளும் ஞானம்பாளும் அவ்வாறே தீக்குறியான அவ்வோசையைக் கேட்டார்கள். அவர்கள் முகங்கள் திகிலால் வெளுப்பு நிறம் அடைந்தன: ஆனல், அந்த நீலகிரி நாட்டார் இருவரும் விரைவில் அஞ்சாமொழிகள் சொல்லி, அப்பெண்மக்களைத் தமக்கு நடுவே நிறுத்திக்கொள்ளும் வகையில் தாம் நின்று கொண்டார்கள். அவர்கள் கைத்துப்பாக்கிகள் அவர்கள் கைகளில் ஏற்கெனவே எடுக்கப்பட்டிருந்தன; அவர்களின் சுருசுருப்பான கூரிய கண்களானவை சுற்றிலுந் தம் பார்வையைச் செலுத்தின.

சில நொடிப்பொழுது வரையில் ஏதும் அரவம் இல்லாமல் இருந்தது; ஆனல், திடீரென்று ஊளைபோலவும் உறுமுதல் போலவும் அஞ்சத்தக்க ஓர் ஓசை உண்டாயிற்று. அதன்பிறகு மரங்களின் இடையே

சர சர வென்றும் நெறு நெறு வென்றும் ஓர் ஓசை உடனே தொடர்ந்து வந்தது; கொடிமுந்திரி மறைப்பினின்றும் ஒரு பெரும் புலி கிட்ட இருந்த நீலகிரி நாட்டான்மேற் பாய்ந்தது. உடனே அவ்வாண்மகன் கையிலிருந்த இரண்டு கைத்துப்பாக்கிகளும் வெடி தீர்ந்தமை கேட்டது. சுந்தராம்பாள் ஞானம்பாள் இதழ்களிலிருந்து கீச்சென்று ஓர் ஒலி உண்டாயிற்று; குமுதவல்லியிடத்திருந்துகூடத் திகிலொடுகூடிய ஓர் ஒலி உண்டாயிற்று; இவர்கள் ஏறியிருந்த குதிரைகளோ அடக்கமுடியாதனவாயின. பொல்லாதகாலத்தாற் குதிரைமீதிருந்த ஒருவன் அதனினின்று புலியினாற் கீழே இழுக்கப்பட்டான்: அவனுதவிக்காக அவன் தோழன் கிட்டே ஓடினான்; ஆனால், அவ்விலங்கோ தன் பகைவரை ஒருவர்பின்னொருவராக வெல்வதற்குத் தீர்மானித்தாற்போல், தன் இரண்டாம் பகைவன்மேல் திகிலுறும்படி ஒரு குதியிற் பாய்ந்தது.

இந்தக்காட்சியானது பார்ப்பதற்கு மிகவுங் கொடுமையாயும் வெருவத் தக்கதாயும் இருந்தது. திரும்பவுங் கைத்துப்பாக்கிகளின் அதிர்வெடி கேட்டது: அக்கொடிய விலங்கானது காயப்படுத்தப்பட்டது; ஆனாலுங் கொல்லப்படவில்லை. மற்று, அது தான் பட்ட காயத்தினால் வெறிபிடித்துத் திகிலான சுருசுருப்பு உடையதாயிற்று. தன் குதிரையிலிருந்து இடியேறுண்டு தள்ளப்பட்டாற்போல் இரண்டாம் ஆளுங் கீழே இழுத்துப் போடப்பட்டான்; அப்போது குருதி ஒழுகும் வெறிகொண்ட குதிரைகள் இரண்டு ஊர்வோன் இல்லாதனவாய்க் காற்றினால் இறக்கை வாய்ந்தனபோற் பறந்து சென்றமை காணப்பட்டது. அதே நேரத்திற் குமுதவல்லியும் அவள் பாங்கிமாரும் ஏறியிருந்த குதிரைகளும் அச்சமுற்று அடங்காதனவாய்ப் பலமுகமாய் விரைந்து ஓடின. இங்ஙனம் எல்லாம் பெருந்தடுமாற்றமாய் இருப்பதற்கு நடுவே, கடிகாரத்தில் நிமிடங்காட்டும் முள் நிமிடங்களை அடுத்தடுத்துக் காட்டுவதுபோல ஒவ்வொன்றும் ஒன்றன்பின்னொன்றாய்க் கடுகிவரும் இப்பொழுது மறுபடியுந் துப்பாக்கிகளின் வெடிகள் கேட்டன. அந்தப் புலியானது சாகுந்துன்பத்தில் ஊளைக்குரலொடு நிலத்தேகிடந்து புரண்டது; மறுபடியும் மற்றொரு குண்டு அவ்விலங்கின் மண்டைக்குள் நெறுநெறுவென்று தொளைத்துச் செல்லும்படி அவ்வளவு திட்டமாய்க் குறிவைத்துச் சுடப்பட்டது; அடுத்தாற்போல் மூன்றுபேர் குதிரைமேல் அவ்விடத்திற்கு விரைந்துவந்தார்கள்.

அதற்குட் குமுதவல்லி தன் குதிரையை முற்றுந் தன்வயத்தில் அடக்கிக்கொள்வதானாள்; அந்தக் கொடிய சண்டை நடந்த இடத்திற்கு நெடுந்தொலைவிலே அவள் இப்போது இருந்தாலும், இடர் ஒழிந்தது என்பதற்கு அறிகுறியாக முழக்கமிட்டுக் கூவுவோர் ஓசையைக்கேட்டனள். குதிரை ஊருந் திறத்தில் தந் தலைவியை எதிரவல்லவர்களான

சுந்தராம்பாள் ஞானம்பாள் இருவருந் தங் குதிரைகள் தம் உடைகள் கிழிந்து கீறுண்டு கிழியும்படி கொடிமுந்திரி அடர்ந்த இடங்களின் ஊடே விரைந்து சென்றாலும் அவற்றின்மேல் தமது இருக்கை கலையாதவண்ணம் அங்ஙனமே இருந்து கொண்டார்கள். அவர்கள் தங்கள் உயிரொடு தப்பிப்பிழைத்ததையும் இரண்டொரு கீறல்தவிர வேறு காயந் தம் உடம்பிற் படாமையையும் எண்ணிப்பார்க்கும்போது இஃது ஒரு பொருட்டாகவைத்துச் சொல்லற்பாலதன்று.

உற்றநேரத்தில் அவ்விடத்திற்குக் குதிரைமேல்வந்த மூவரில் தலைவனானோன், தன் கூடவந்தோர் இருவருக்குஞ் சுருக்கெனச் சில கற்பித்துவிட்டு, இதற்குள் தமது தடுமாற்றம் நீங்கித் தேறி அந்தப் பாட்டையிற் சிறிது தொலைவிலே ஒன்றுகூடி நின்ற குமுதவல்லியையும் அவள் பாங்கிமாரையும் எதிர்கொள்ளும்பொருட்டுக் குதிரையை முன்னே பாய்ச்சலிற் கொண்டுபோனான். அங்ஙனம் நயம்மிகுந்த வணக்கத்தோடுந் தேறுதல் மொழிகளோடும் அந்தப் பெண்மக்களை விரைந்து அணுகினவன் ஓர் அழகிய பௌத்த இளைஞனா யிருந்தான். நாகரிகமும் இனிய அழகும் வாய்ந்த இவ்விளைஞன் நீலலோசனனே யன்றிப் பிறர் அல்லரென்றும், இவனுடன் வந்தோர் இருவருங் கேசரிவீரனும் வியாக்கியவீரனுமாவரென்றும் இதனைப் பயில்வோர்க்கு உடனே தெரிவித்திடுகின்றோம்.

திகிலைத்தரும் அச்சண்டையின் முடிவு குமுதவல்லியினாலும் அவள் பாங்கிமாராலுங் காணப்படாவிடினும், அது முடிந்துபோயிற்றென்பதை அவர்கள் ஏற்கெனவே தெரிந்துகொண்டார்கள்; இப்போது அவர்கள் இப்பௌத்த இளைஞன் சொல்லிய சொற்களிலிருந்து கடைசியாக இவன் கையினாலேதான் அப்புலி இறந்துபட்டதென்று தெரிந்தார்கள். குமுதவல்லி அவனுக்குத் தன் நன்றி மொழிகளைப் பொழிந்தாள்; கலக்கமும் ஐயமுங் கலந்த நோக்கத்தோடுஞ் சொல்லசைவோடும் அவள் தன்பின் வழித்துணையாய் வந்த நீலகிரி நாட்டார் இருவர் வினைப்பயனையும்பற்றி உசாவினாள்.

அதற்கு நீலலோசனன், "இரங்கத்தக்க அவ்வாட்கள்மேற் பரபரப்பாக என் பார்வையைச் செலுத்திப்பார்த்தவரையில், நங்கைமீர், அவ்விருவரும் பிழைத்திருக்கின்றார்கள் என்று உங்கட்கு உறுதியுரை சொல்லக்கூடியவனானேன்: ஆனாலும், அவர்கள் மிகவும் இடரான வகையிற் சின்னபின்னப் படுத்தப்பட்டிருக்கின்றார்களென அஞ்சுகின்றேன். என்கூட வந்தவர்கள் இருவரும் அவர்களுக்குத் தம்மாற் கூடியமட்டும் உதவி செய்துகொண் டிருக்கின்றார்கள்; அவர்கள் காயங்களினின்றுஞ் செந்நீர் ஒழுகுவதை நீங்கள் பாராதிருக்கும்பொருட்டுந், திகிலான இந்

நிகழ்ச்சியின் முடிவைத் தெரிவிக்கும்பொருட்டும் யான் இங்ஙனம் முன்னே விரைந்து வந்தேன்.'' என்று மறுமொழி புகன்றான்.

உடனே குமுதவல்லி காயப்பட்ட அம்மாந்தரிடத்து இரக்கமுங் கவலையும் மிக உடையவளாய், "ஐயன்மீர், யானும் என் தோழிமாரும் ஏதேனும் உதவிசெய்யக்கூடுமோ' என்பதைச் சொல்லுங்கள். ஒருகால், உங்கள் ஆட்களைவிட யாங்கள் அக்காயங்களைத் திறம்படக் கட்டக் கூடுமே: ஏனென்றாற், பெண்பாலாராகிய எங்கட்கு அஃது உரிய தொழிலன்றோ!'' என்று கூறினாள்.

"நங்கைமீர், என்னுடன் வந்தவர்கள் போர் நிகழ்ந்த இடங்களில் இருந்து பழக்கம் ஏறினவர்கள்; காயங்களைக் கட்டுவது அவர்களுக்குப் புதிய தொழில் அன்று. நான் திரும்பிவரும் வரையில் இங்கே தானே தங்கியிருக்க அன்புகூருங்கள். கெடுதி நேர்ந்த இடத்திற்கு யான் கடுகத் திரும்பிப் போகின்றேன்; சில நொடிப்பொழுதிலெல்லாம் யான் உங்களிடம் மறுபடியும் வந்து, நீங்கள் இரக்கம் வைத்துள்ள அம்மாந்தரின் நிலைமையை அறிவிக்கின்றேன்.'' என்று நீலலோசனன் மறுமொழி கூறினான்.

மறுபடியும் பணிவொடு வணங்கி நீலலோசனன் தன்குதிரையைத் திருப்பிக் குமுதவல்லியையும் அவள் பாங்கிமாரையும் விட்டு அகன்று போயினான்.

அதன்பிறகு குமுதவல்லி, "சிறிதுநேரம் நாம் குதிரையை விட்டுக் கீழே இறங்குவோம். இரங்கத்தக்க அவ்வாட்கள் இருவரும் எல்லா வகையாலுஞ் செவ்வையாகப் பராமரிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் உறுதியாகத் தெரிந்துகொண்டால் அல்லாமல் நாம் பயணந் தொடங்கலாகாது. அதுவல்லாமலும் நங்குதிரைகள் எல்லாம் இன்னும் நடு நடுங்கிக்கொண் டிருக்கின்றன. இச் செழும்புல்லை அவைகள் மேயும் படிவிட்டால், அஃது அவ்வேழை யுயிர்களை ஆற்றுவிக்கும்.'' என்று நாகநாட்டரசி கூறினாள்.

அவ்வாறே, குமுதவல்லி சுந்தராம்பாள் ஞானம்பாள் மூவருங் குதிரையைவிட்டு இறங்கினார்கள்: அவர்களின் குதிரைகள் பாட்டையோரமாய்த் திரியும்படி விடப்பட்டன; ஏனெனில், நுண்ணறிவும் நம்பிக்கையும் உள்ள அக்குதிரைகள் ஒவ்வொன்றுந் தந் தலைவி அழைக்கும் போது உடனே திரும்பிவரும் வழக்கம் உடையன. குமுதவல்லி தான் ஒரு கரைமேல் உட்கார்ந்துகொண்டு தன் றோழிப் பெண்களும் அவ்வாறே இளைப்பாறுகவென்று கைக்குறி காட்டினாள்.

"நல்ல காலமாயிற்று, அப்பௌத்த துரைமகனும் அவர் ஆட்களும் அந்நேரத்தில் வரலானது!'' என்று நாகநாட்டரசி மொழிந்தாள்.

"எவ்வளவு அழகான இளைஞர் அவர்!" என்றாள் சுந்தராம்பாள்.

"அவர் பார்வையில் ஆண்மைமிக்கவரே—என்றாலும் இளமையும் அழகும் வாய்ந்தவர்!" என்று கூடச் சொன்னாள் ஞானம்பாள்.

"பேசாதிருமின், சிறுமிகாள்! அவரது நல்ல தோற்றத்தைவிட அவரது ஆண்மையை எண்ணிப்பாருங்கள்; நாம் இப்போது தப்பிப் பிழைத்ததற்காகச் சிவபெருமானுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம் என்பதையும் எண்ணிப்பாருங்கள்." என்று சிறிது கடுமையாகக் குமுதவல்லி பேசினாள்.

சிறிதுநேரம் பேசாமல் இருந்தார்கள். அப்போது குமுதவல்லி தன்னைப்படைத்த கடவுளுக்குத் தனக்குள்ளே வழிபாடுசெலுத்தினாள்; மற்ற இருபெண்களும் அவள் உள்ளத்தில் நிகழ்வதை அறிந்து தாமும் அவ்வாறே செய்தார்கள்.

இப்போது நீலலோசனன் திரும்பிக் குமுதவல்லியும் அவள் பாங்கிமாரும் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தான்; வந்தவன் சொன்னதாவது: "நங்கைமீர், உங்கள் வழித்துணைவர் அடைந்த காயங்கள் கொடியனவாயிருந்தாலும் உயிர்க்கு ஏதம் அச்சமில்லையென்று மகிழ்ச்சியொடு தெரிவிக்கின்றேன். இந்தப் பாட்டையில் வந்து சேரும் ஒரு சிறு வழியாகவன்றோ யானும் என் ஆட்களும் நல்ல நேரத்தில் அவ்விடம் வந்துசேர்ந்தோம். அதோ தோன்றும் மரங்களால் மூடப்பட்டு அவற்றின் நடுவே ஒரு சிறு குடிசை இருக்கின்றது. காயப்பட்ட ஆட்களை அங்கே கொண்டுபோக வேண்டுமென்பது என் கருத்து; அவர்களை மிகவும் அன்பாய்ப் பார்ப்பதற்குவேண்டிய கருவிகளை நிரம்பத் தந்து அவர்கள் அடைந்த காயங்களால் அவர்கள் சிறிதும் அழிவு உறாமற் செய்தன்றி அவர்களைவிட்டு வரமாட்டேன் என்று உறுதியாய் நம்பி ஆறுதல் அடைமின்கள்!"

"பெருமானே, தாங்கள் உண்மையாகக் காட்டிவருகின்ற அன்புடைமைக்கு ஆயிரம்வணக்கம்!" என்று சொல்லி, "அவ்வாடவர்க்கு வேண்டுவனவெல்லாந் தொகுத்துத்தருவதுஞ், சிறிதுகாலம் என்னிடம் ஊழியஞ்செய்கையில் அவர்கள் அடைந்த துன்பங்களுக்குப் போதுமான அளவு ஈடு கொடுத்து உதவுவதும் என்னுடைய கடமை அல்லவோ? எனக்காகத் தாங்கள் ஐயம் பகிர்ந்து கொடுக்க ஒருப்படுவீர்களா?" என்று குமுதவல்லிகேட்டாள்; அங்ஙனங் கேட்கையிலேயே, தனது பணப்பையினின்றும் பல பொன் நாணயங்களை எடுத்து, அவற்றை நாண் இனிமைகலந்த புன்முறுவலொடு நீலலோசனனிடம் நீட்டினாள்.

அந்நங்கையை முன்பின் முழுதும் அறியாதவனாயிருக்குந் தான், அவள் அடைந்த செலவுகளுக்காகத் தான் பொருள் செலுத்துவதாயிருக்கும் இதனைப்பற்றி வற்புறுத்துதல் தனக்குமென்னடையுந் தகுதி

யும் ஆகாவெனப் பௌத்த இளைஞன் உடனே கண்டுகொண்டான்: ஆகவே, அப் பொன்னாணயங்களைத் தான் வாங்கிக்கொண்டபோது, "காயப்பட்ட அவ்வேலையாட்கள் இருவரையும்பற்றி யான் முதலிற் கொண்ட நோக்கத்தையும் நிறைவேற்றுதலிற் சிறிதும் குறையேன்; எனவே, அவர்கள் பெற்றுக்கொள்ளும் ஈடு இரட்டை நன்கொடையாகும்.'' என்று கூறினன்.

இங்ஙனஞ் சொல்லிவிட்டு அங்கிருந்து மறுபடியும் அவன் குதிரைமேற்போக எழுந்தான்; அப்போது அவனுக்கு ஓர் எண்ணந்தோன்றவே, "நங்கைமீர், இப்போது நீங்கள் வழித்துணை இன்றியிருத்தலால், யானும் என் ஆட்களும் எங்களால்இயன்றவளவு செய்துவரக்கூடிய காவலையும் பாதுகாப்பையுந் தாங்கள் ஏற்றுக்கொள்ள அருள் செய்வீர்களா? நாங்கள் நீலகிரியை நோக்கிப் பயணஞ்செல்பவர்களாய் நேர்ந்தோம்: காயப்பட்ட ஆடவரில் ஒருவன் சிறிதுமுன்னே சொன்ன சிலவற்றிலிருந்து, நீங்கள் செல்லவேண்டிய இடமும் அதுவேயெனத் தெரிந்தேன்.'' என்று கூறினன்.

குமுதவல்லி ஏது விடை சொல்வதென்று சிறிது நேரந் தடைப்பட்டாள்: ஆனல், தன்றோழிமார்களைக் கண்நோக்கவே, அவர்கள் உருக்கமுடன் வேண்டிக்கொள்ளுங் குறிப்போடு தன்னை உற்றுப்பார்த்தது கொண்டு இன்னது சொல்வதென்று விரைவில் தீர்மானித்தாள்.

"ஐயனே, அஞ்சத்தக்க இந்நிகழ்ச்சியிலிருந்து யான் அடைந்த பழக்கமானது, தாங்கள் இவ்வளவு இரக்கத்தோடு செய்யும் உதவியை மறுத்தல் எனக்கு மடமையாய்முடியுமென்றும், நடுநடுங்கும் என் பணிப்பெண்களாகிய இவர்களது நிலைமையை எண்ணிப்பாராக் கொடுமையாய் முடியுமென்றும் எனக்குக் காட்டுகின்றது. ஆகையால், இவ்வுதவியை யான் நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்கின்றேன்.'' என்று விடை பகர்ந்தாள்.

தேவமாதின் அழகு வாய்ந்த அப்பெண்மணியின் தீர்மானத்தைத் தான்பெற்றுக்கொண்டபொழுது இளைய நீலலோசனன் தன் நெஞ்சத்துள் துணுக்கென ஒருமகிழ்ச்சி கொண்டான்: இங்ஙனம் எழுந்த உள்ளப் பெயர்ச்சியினைத் தகுதியான பணிவுடன் அடக்கிக் கொண்டவனாய், "நங்கைமீர், அம்மக்களை அக்குடிசைக்கு எடுத்துக்கொண்டுபோக உதவி செய்யும்பொருட்டு இப்போது விரைந்துபோகின்றேன். கட்டாயமாய் வேண்டிய அளவுக்குமேல் ஒரு நொடிப்பொழுதேனும் யான் அங்கு நீட்டித்திரேன் என்று உறுதியாய் நம்பியிருங்கள்.'' என்று கூறினன்.

மறுபடியும் அப்பௌத்த இளைஞன் கிளர்ச்சி மிகுந்த தன் குதிரைமேல் ஏறிப்போயினன்; அவன் காதுக்கெட்டும்வரையிற் கடந்துசென்ற

பின், "அவ்வளவு உருக்கத்துடன் தரப்பட்ட வழித்துணையை நாம் ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு செய்யக்கடவதொன்றில்லை." என்று குமுதவல்லி மொழிந்தாள்.

ஒரோவொருகால், தன் நினைவுகளின் கன்னிமைத் தூயதன்மையோடும், நெடுந்தொலைவில் இல்லா மேற்கணவாய் மலைகளின்மேல் எந்நேரமுந் தங்கியிருக்கும் பனிபோல் தூயதான தன்னுயிரின் இயற்கைக் கற்புடைமையோடும், அவ்விளங்கன்னிப்பெண், நீலலோசனனைப் பற்றி இன்னும் ஏதோ மிகுதியாய்க் காணவேண்டும் ஒருநினைவிலே மெய்யாகவே வெறுப்புறாத ஓர் உள்ளுறை எண்ணந் தன்னுள்ளே கொள்ளப்பெற்றாள். ஏனெனில், ஆண்பாலாருள் அழகால் மிக்கவரென்றும் பெண்பாலாருள் அழகால் மிக்கவரென்றும் நன்குமதிக்கப்படும் இளையோர் இருவர், ஒருவர் ஒருவர்மாட்டு ஏதோ சிறிதேனும் ஒரு பற்று உண்டாகப்பெறாமல் இங்ஙனந் தற்செயலாய் ஒருங்கு கூட்டப்படுதல் இயலாததேயாம்.

நீலலோசனன் திரும்பி வரும்முன் ஏறக்குறைய இரண்டரை நாழிகை கழிந்தன; இப்பொழுது அவன் ஆட்கள் இருவரும் அவன் பின்னே வந்தார்கள். அந்தப்பெருமாட்டியோடும் அவள் தோழிப்பெண்களோடுஞ் சேர்ந்து பயணம்போகும்படி ஏற்பாடுசெய்யப்பட்டதென்று முன்னமே அவன் அவர்கட்குத் தெரிவித்தான். இச்செய்தியை வியாக்கிரவீரன் மகிழ்வொடு கேட்டான்; ஏனென்றாற், பெண்பாலார் கூட்டத்திற் சேர்ந்திருப்பது அவனுக்கு இனியது: மற்றுக் கேசரிவீரனோ இதனைக்கேட்டதுந் தன் முகத்தின்மேல் துயரக்குறிப்பு உடையவனானன். தன் இளம்பெருமான் பொய்ந்நெஞ்சுள்ள மற்றொரு மோகினிப் பேயின் கையில் அகப்பட்டால் என்செய்வதென்று அஞ்சினான்: என்றாலும், இப்படிப்பட்ட நிலைமையில் தடுத்துச்சொல்வதற்கு அவன் அவ்வளவு இரக்கம் அற்றவன் அல்லன். அஞ்சத்தக்க இடரினின்றுந், திகிலான மனக்கலக்கத்தினின்றும் இப்பொழுதுதான் தப்பிய ஆண்துணை யில்லாப் பெண்கள் மூவருந் தாங்கள் இழந்துபோன வழித்துணைக்கு மாறாக வேறொரு வழித்துணையை உறுதிப்படுத்திக்கொள்ள ஆவல் உள்ளவராய் இருக்கக்கூடுமென்றும், மக்கள் உறவின் முறைக்கும் மக்கள் இயல்பின் முறைக்கும் இணங்க அவர்கள் அங்ஙனந் துணைநாடுதற்கு உரிமையுள்ளவர்களேயென்றும் அவன் இயற்கையாகவே உணர்ந்தான். ஆனால், நீலலோசனனும் அவன் ஆட்களுங் குமுதவல்லியும் அவள் பாங்கிமாரும் இருந்த இடம் வந்து சேர்ந்தபோது, கேசரிவீரன் ஐயுற்றுப்பார்த்த பார்வை வரவரத் தெளிவடைந்தது; ஏனெனில், ஏதோ சொல்லமுடியாத இனிமையுங், களங்கமற்ற நெஞ்சக்குறிப்பும், ஒரு கவர்ச்சியும், அன்புங் குமுதவல்லியின் முகத்திலே காணப்பட்டமை

யால், எளிதில் நம்பாமையும் முன்னறிவும் உள்ள கேசரிவீரனுங்கூட அத் தெய்வமுகத்திலே எழுதப்பட்ட சான்றுக்கு இணங்காதவனுய் இருக்கக்கூடவில்லை. காமக்கொதிப்புங் காமவிழைவும்உள்ள கருவிழியாளான மீனும்பாளையுந், தூய்மையுங் கள்ளமின்மையும் ஆகிய ஒளியினுற் சூழப்பட்ட நீலவிழியாளான குமுதவல்லியையும், அவன் தன் மனத்துள்ளே விரைந்து ஒப்பிட்டுப்பார்த்தபோது, இவளைப்பற்றி அவன் உயர்ந்ததொரு நல்லெண்ணங் கொள்ளாமல் இருக்கக்கூடவில்லை. இன்னும், இவள் பாங்கிமார் இருவரிடத்துங் கரவில்லாத வெளிப்படையான திறந்த உள்ளத்தையும், நாணமுடன் தாழ்மைநிறைந்த ஒழுக்கத்தையுங் கண்டபோது, தன் இளம்பெருமான் இவர்கள் புதுஉறவைப் பெற்றதற்காக வருந்துதல் ஒழிந்தான். மற்று, இத்தனை இனிமைவாய்ந்த இவர்கள், வழித்துணையாவது பாதுகாப்பாவது இல்லாமல் தனியே ஏக விடுதலாகாமையை நினைத்தபோது தன்னுள்ளே ஒருமகிழ்ச்சியும் மனநிறைவும் உண்டாகப்பெற்றுன்.

நீலலோசனன் குமுதவல்லியின் பக்கத்தே குதிரை ஊர்ந்து சென்றுன். கேசரிவீரன் சுந்தராம்பாளுக்குத் துணையாய் ஏகினுன், வியாக்கிரவீரன் ஞானும்பாளுடன் தன்னை இணைப்படுத்திக்கொண்டான். மீனும்பாள் குமுதவல்லி என்னும் இருவரின் இயற்கை மாறுபாட்டைப் பற்றிக் கேசரிவீரன் உள்ளத்தில் தோன்றியதுபோலவே, நீலலோசனனுள்ளத்திலுந் தோன்றுவ தாயிற்று. தன்நெஞ்சங் குமுதவல்லியினிடத்து விழைவுகூரத்தக்கதாக விளங்கிய இனிய அழகின் வயப்படவேண்டுவதாயிருக்க, ஒருநொடிப்பொழுதேனுந் தான் மீனும்பாள் அழகினுல் மயக்கப்பட்டது என்னை என்று அவன் வியப்படைந்தான். அவன் மீனும்பாளைக் கண்டபோது குமுதவல்லியை இதற்குமுன் என்றும் பார்த்ததில்லை என்பதும், பெண்பாலாரில் அத்துணை நிகாற்ற வடிவம் ஒன்று உலகின்கண் உள்ளதெனக் கருதியதே இல்லை என்பதும் உண்மையே; ஆனுல், இந்த எண்ணமுங்கூட, அவன் தான் சிறிது நேரமாயினுங் கரியவிழிமீனும்பாளின் காமங்கனிந்த மிக்க அழகினுக்கு வணங்கியதனுல், தன்நெஞ்சமானது இப்போது தோழமை கொண்ட நங்கையின் தூய கன்னிமை அழகினுக்கே செலுத்துதற்கு உரிய வணக்கம் என்னுந் தூயமணத்திற்கு இடம்பெறத் தகுதி வாயாததாயிற்று என்னும் ஓர் உணர்ச்சியினின்றும் அவனை மாற்றுதாயிற்று.

பொதுவான பலதிறச் செய்திகளைப்பற்றிப் பேசியபிறகு, குமுதவல்லி, "ஐயன்மீர், இந்தப்பக்கத்தில் வழிதப்பித் திரியுங் காட்டுவிலங்கு ஒன்றுமட்டுமே அஞ்சத்தக்க தாகாதென்று சொல்லக்கேட்டேன்." என்றுள்.

"நங்கைமீர், உண்மையே? வேறு யாது இடர் உங்களுக்கு இவ் அச்சத்தை உண்டுபண்ணியது?" என்று நீலலோசனன் வினவினான்.

"திகிலை உண்டாக்கும் நல்லானைத்தவிர வேறொன்றும் அன்று." எனக் குமுதவல்லி விடைபகர்ந்தாள்.

அதற்கு நீலலோசனன் "ஆ!" என்று உரத்துக்கூவினான்; இங்ஙனங் கூவிய ஓசை புதுமையாகத்தோன்றினதனால், ஓர் இமைப் பொழுது குமுதவல்லி அவனை உற்றுப்பாராமல் இருக்கக்கூடவில்லை. அழகிய அவ்விளம்பெண் கொண்ட திகிலை மிகுதிப்படுத்துதற்கு அஞ்சி உடனே அவன் "ஆம், அப்படிப்பட்டது ஒன்று யானுங் கேள்விப்பட்டேன்: ஆனாலும், நங்கைமீர், அஞ்சாதேயுங்கள்!" என்று கூறினான்.

"என் மட்டில், அதைப்பற்றி யான் சிறிதும் அஞ்சவில்லை; ஆகையால், நான் என் தோழிப்பெண்கள் மனத்திலுங் கலவரத்தை உண்டு பண்ணுதிருந்துவிடுகின்றேன்." என்று குமுதவல்லி தொடர்ந்து பேசினாள்.

"நங்கைமீர், நீங்கள் செய்வது நல்லது. தீமையும் இடரும் வரும் முன் பாதிவழியிற் சென்றே அவற்றை எதிர்கொள்ள ஓடாமல், அவை வரும்போது எதிர்வதே தக்கது. நாளைக்கு நாம் நீலகிரியில் இருப்போம்; அங்கே போய்விட்டோமானால் அச்சஞ் சிறிதும் இல்லை." என்று நீல லோசனன் மறுமொழி புகன்றான்.

மலையநாட்டின் தலைநகரான நீலகிரிக்குத் தான் இன்னநோக்கத்தின்பொருட்டுப் போகவேண்டியுளது என்பதைப்பற்றி நீலலோசனனாவது குமுதவல்லியாவது சிறிதாயினும் ஒருவரோடொருவர் மறந்தும் பேசவில்லை. அவர்கள் ஒருவரைப்பற்றியொருவர் உசாவியதில் வெறும் பெயர் மட்டுந்தான் சொல்லிக்கொண்டார்கள். இவ்வளவிலுங்கூடச் சிலவற்றைச்சொல்லாமல் அடக்கி விட்டார்கள். நீலலோசனன் தான் அரசிளைஞன் என்பதைத் தெரிவித்திலன். குமுதவல்லியுந் தான் அரசி என்பதைத் தெரிவித்திலள். சில வகைகளால் இருவரும் இங்ஙனம் அடக்கமாய் இருந்தனர்; ஏனென்றால், இதனைப் பயில்வோர் ஏற்கெனவே தெரிந்தபடி இவ்விருவரும் மறைவாகப் பயணஞ் செய்யும் படிக்குந், தாம் மறைவாகச்செல்வது சிறிதுந் தெரியாதபடிக்கும் வற்புறுத்தப்பட்டார்கள்.

இப்போது மாலை இரண்டரை நாழிகை வேளை ஆயிற்று. தன்னிடத்திலிருந்து நீலகிரி நகரம் ஏறக்குறைய இருபத்தைந்து கல் தொலைவு அல்லது ஒருநாட்பயணத்தி லுள்ளதும், அவ்விராப்பொழுதிற்குத் தாந் தங்கவேண்டியதுமான ஓர் ஊர் இவ்வழிப்போக்கர் பார்வைக்குத் தென்படலாயிற்று. நீலலோசனனுங் குமுதவல்லியுந் தத்தம் துணைவர்க்குச் சிறிதுமுன்னே குதிரை ஊர்ந்து சென்றார்கள். அப்

போது ஒன்று நேர்ந்தது. இது பார்வைக்குப் புல்லியதொன்றாய்த் தோன்றினாலும், இதனால் விளைந்தவை முதன்மையானவைகள். பாட்டை ஓரத்தில் மனமிரங்கத்தக்க முதியோன் ஒருவனும் அவனைப் போலவே ஏழைமைவாய்ந்த முதியோள் ஒருத்தியும் உட்கார்ந்திருந்தனர்; இவர்கள் இருவரும் முடவர்கள்; இருவரும் உறுப்பு அற்றவர்கள்; இருவரும் ஐயம் ஏற்பார்க்குரிய கந்தைத்துணி கட்டியிருந்தார்கள். நீலலோசனனுங் குமுதவல்லியும் முன்சென்றபோது இவ்விருவரும் ஐயங் கேட்பதற்கு நொண்டி எதிரே வந்தனர். இவர்களின் இரக்கமான நிலைமையைப் பார்த்தபோது நம் இளைய தலைவனுந் தலைவியுமான இருவர்க்கும் ஒருங்கே இரக்கம் உண்டாயிற்று; ஆகவே, இருவருந் தமது பணப்பையை இழுத்தார்கள். குமுதவல்லி ஒரு பொன்நாணயத்தை முடத்தி கையில் வைத்தாள்; நீலலோசனனும் அவ்வாறே தளர்ந்த அம்முதியோனுக்கு உதவிபுரிந்தான். ஆனால், அவ்வமயத்தில் நீலலோசனன் குதிரையானது ஏதோ பதறி அசைந்தது; இதனால் அவன் பணப்பையினுள்ளேயிருந்த சிலபொருள் நிலத்தே தவறிவிழுந்தன. நன்றியறிவுள்ள அம்முதிய முடவர்கள் அவற்றைப் பொறுக்கியெடுத்து உடையவனிடஞ் சேர்ப்பிக்க விரைந்தனர். ஆனால், அங்ஙனங் கீழேவிழுந்த பொன் நாணய வெள்ளி நாணயங்களுக்கு இடையிலே, பாம்பின் மினுக்கொளி போலக் குமுதவல்லியின் கண்களைத் திடீரெனக் கவர்ந்தது ஒன்று கிடந்தது. அஃது ஒரு கணையாழி! ஆம், ஒரு வகையான வேலைப்பாடு அமைந்ததாய் ஒரே சிவப்புக்கல் பதிக்கப்பட்ட ஒரு பொன் மோதிரம்! நீலலோசனன் மிகவிரைந்து அம்மோதிரத்தையும் அந்நாணயங்களையும் எடுத்துத் தன் பணப்பையினுள்ளே வைப்பானாயினன்; குமுதவல்லி கலக்கமுற்ற தன் பார்வையை அப்புறந் திருப்பிக்கொண்டாள்; அவள் நெஞ்சமோ நோய்ப்படுத்தும் உணர்வால் தாக்குண்டது!

அவள் உள்ளத்திற் பொல்லாத எண்ணங்கள் பல மின்னலெனத் தோன்றின. நல்லானைப்பற்றி அந்தச்சாவடிக்காரன் தனக்குச் சொல்லிய ஒவ்வொன்றையும் அவள் நினைவுகூர்ந்தாள். அவன் இளைஞன்; அந்தச் சாவடிக்காரனுக்கு மகனென்று சொல்லும்படி அவ்வளவு இளைஞன்! அவனுக்குக் கரியதலைமயிரும் மீசையும் இருந்தன. அவன் உயரமாய் ஒல்லியாயிருந்தான்; குமுதவல்லியுந் தான் தன் அறைக்குள் முகமறைப்பிட்டு வந்தவனைக் கீழ்க்கண்ணாற் பார்த்த பார்வையிலும் அவன் அப்படியே இருந்தானென நினைத்தாள். அவ்வகைகளெல்லாம் நீலலோசனனிடம் ஒத்திருந்தன! அதுவல்லாமலும், நல்லான் பலவகையான கோலங்களும் பூண்பவன்; ஒருகால் துருக்கனைப்போலவும் மற்றொருகால் மலைநாடனைப்போலவும் உடை அணிபவன்; ஏனென்றால், தன் பொல்லாத நோக்கங்களை முடிப்பதற்கு அவன் செய்து பாராத

சூழ்ச்சி இல்லை. சுருங்கச்சொல்லுமிடத்துக், குமுதவல்லி, தன் பக்கத்தே குதிரைமேல் வருபவன் கள்வர்கூட்டத்தலைவனான கொடிய நல்லானையன்றிப் பிறர்அல்லர் என்னுந் திகிலும் வருத்தமும் மிக்கதோர் உறுதிஎண்ணங் கொள்ளப்பெற்றாள்!

இரவலரிடம் நிகழ்ந்த இச் சிறு நிகழ்ச்சிக்குப்பின் அவளும் நீலலோசனனும் வழிச்செல்கையிற், சிறிது நேரம் அவள் முகம் அப்புறமாகவே திரும்பி இருந்தது. இந்த நேரத்திற்குள் அவள் தன் முகச்சாயலை அமைதிப்படுத்திக்கொண்டாள்; தன்னையுந் தானே தேற்றிக்கொண்டாள். இனி, எப்படி நடந்துகொள்வதென்றுந் தன்னுள் தீர்மானித்துக்கொண்டாள்; ஏனெனில், உடனே ஏதும் பொல்லாங்கு நேரசதென்று கண்டறிந்தாள். அந்தச் சிறுபட்டிக்காடு இப்போது அருகாமையில் வந்துவிட்டது; தன் தோழனும் அவன் துணைவருந் தனக்குந் தன்பாங்கிமார்க்கும் விரைவில் தீங்கு செய்யக் கருதியிருந்தனர்களாயின், ஊருக்கு நெடுந்தொலைவில் தனிமையாயிருந்த வெளிகளிலேயே அவ்வாறு செய்திருப்பார்களன்றோ?

அவள் கலக்கமில்லாத குரலிலே, "ஐயன்மீர், வாருங்கள், நாம் குதிரையை முடுக்கி முன் விடுவோம்!" என்றுரைத்தாள். அதற்கு நீலலோசனன், "நங்கைமீர், தங்கள் விருப்பப்படியே." என்று நேசநயம் மிக்க மகிழ்ந்த குரலிற் கூறினான்; ஏனென்றாற், குமுதவல்லி இப்போது தன்னைப்பற்றிக்கொண்ட திகிலான எண்ணத்தை அவன் சிறிதும் அறியான்.

சிறிதுநேரத்திலெல்லாம் அச்சிறிய ஊரிற்போய்ச்சேர்ந்தனர். அவ்வூரில் தட்டுக்கெட்ட ஒரு சாவடியும் ஆறு ஏழைக்குடிசைகளுஞ், சிறிது விலகியிருந்த ஒரு நல்ல வீடும் இருந்தன. அந்த வீட்டுக்கு உரியவன், அடுத்திருந்த ஒரு பஞ்சாலைக்கு உடையவனான ஒரு பணக்கார வணிகன் ஆவன். அந்த விடுதியண்டை போனவுடனே, குமுதவல்லி அந்த நல்ல வீட்டுக்கு உடையவர் தனக்குந் தன்தோழிப்பெண்கட்கும் விடுதி தந்து உதவுவரா என்றுகேட்டாள். அந்நேரத்தில் அப்பஞ்சாலைத் தலைவன் அவ்விடுதிக்கு எதிரிலே நின்றுகொண்டிருந்தான்; குமுதவல்லி குறிப்பிட்ட வீட்டுக்காரன் தானே என்று அவன் அறிவித்ததன்மேல், நீலலோசனன் அந்நங்கைக்கும் அவள் தோழிமார்க்கும் உதவியாகத், தானே அவனைப் பரிந்துகேட்டான். அந்த வீட்டுக்காரன் வெடுவெடுப்பான குணமுங் கையிறுக்கமும் உடையவன். விடைகூற அவன் சிறிது தாழ்த்தான்; நீலலோசனன் அவன் இயற்கை இன்னதெனஉணர்ந்து, அவன் காதண்டைபோய், "இந்த நங்கைக்கும் அவர் தோழிமார்க்குஞ் செய்யும் உதவியிற் பிசுனத்தனம் பண்ணுதீர்; அதற்காக நீர்பெற்றுக்

கொள்ளும் நன்கொடை மிகுதியாகவேயிருக்கும்.'' என்று மெதுவாகச் சொன்னான்.

இங்ஙனஞ் சொல்லவே எல்லா ஏற்பாடும் ஆயிற்று; குமுதவல்லி கேட்டபடியெல்லாஞ் செய்ய அவ்வீட்டுக்காரன் மிக அன்போடு இணங்கினான். இன்னுந் தன் மனத்துள் நிகழ்வது இன்னதென்று சிறிதும் புலப்படுத்தாமற், பெருமுயற்சியொடு வெளிக்கு இன்சொல்லும் நன்னடையுங் காட்டிக் குமுதவல்லியானவள் நீலலோசனனிடம் விடைபெற்றுக்கொண்டாள். அங்ஙனம் விடைபெறும் பொழுது, அவன் சொல்லியபடியே மறுநாட்காலையில் ஒன்று சேர்ந்து பயணம்போவதாக இணங்கி மறுமொழி கூறினாள். அவ்வாறே அவள்பாங்கிமாருஞ் சிறிது நேரத்திற் சென்று தாம் எண்ணிய விடையைக் கேசரிவீரனிடத்தும் வியாக்கிர வீரனிடத்தும் பெற்றுக்கொண்டார்கள். பௌத்தர்மூவருந் துப்புக்கெட்ட அச்சாவடியிலே விடுதிகொள்ளச் செல்கையிற், குமுதவல்லியும் அவள் பாங்கிமாரும் அவ்வணிகன் பின்னே அவன் வீட்டுக்குப் போகும் ஓர் இடுக்குவழியே சென்றார்கள்.

சிறிதுநேரத்திலெல்லாம் அவ்வீட்டண்டை போய்ச் சேர்ந்தார்கள். உடனே குமுதவல்லி, "பெண்காள், என் பிறகே வாருங்கள்! உங்கள் உயிர்பிழைக்க ஓடிவாருங்கள், ஓடிவாருங்கள்!'' என்று உரத்துக்கூவித் தன்குதிரையை விரைந்து பறக்க முடுக்கினாள்.

அவள் வாயிலிருந்து பிறந்த புதுமையான சொற்களாலும், வகை தெரியாமல் அவள் செல்லும் மிக்க விரைவினாலும் மனந் திகைத்துத் திகில் கொண்டார்களாயினுஞ், சுந்தராம்பாள் ஞானம்பாள் இருவருந் தம்மை யறியாமலே அவள் செய்தபடியேசெய்து தாமும் பின்றொடர்ந்தார்கள்.

அந்த முதியவணிகனோ அவர்களைப் பின்னேபார்த்துக்கொண்டு, இமையாக்கண்களோடுந் திறந்தவாயோடும் ஒன்றும் பேசாமல் வியப்புற்று நின்றான்; அவர்கள் தன்பார்வைக்கு எட்டாமல் மறைந்துபோன பின்னுஞ் சிறிதுநேரம் அவன் அவ்வாறே நின்றான்.

எட்டாம் அதிகாரம்.

மலையநாட்டுவிதவை.

தன் தோழிப்பெண்கள் இருவரும் பின்னேவரக் குமுதவல்லி விரைந்து ஓடினாள்; மூவரும் மிக்க விரைவொடு செல்லும்படி தங் குதிரைகளை முடுக்கினார்கள்; அந்தச் சிறுவழியே அவர்கள் கடுகிச் சென்ற போது அருகே யாராவது இருந்து பார்த்தால், அப்பெருமாட்டியும் அவள் தோழிப்பெண்களுங் குதிரையேற்றத்திற் காட்டிய திறமையை அவர் வியவாமல் இருக்கமுடியாது. நாகநாட்டரசி தாம் பெரியதோர் இரண்டகத்தில் அகப்பட்டுக்கொண்டதாக எண்ணிய இடத்தினின்றும் பறந்துவந்து, இன்னவழியாய்த்தான் தாம் போவதென்றுஞ் சிறிதும் எண்ணாமலே அவர்கள் போயினார்கள்; மற்றொரு சிறுவழி வந்து குறுக்கிடும் ஓர் இடத்தண்டை வந்தபிறகு, தம்மைப் பின்றொடர்ந்து வருவார் உண்டானால், அவர்கள் தம்மை வந்து பிடித்துக்கொள்வதற்கு இடம் இல்லாதபடி, குமுதவல்லி வேண்டுமென்றே மறைவானவழி ஒன்றில் திரும்பிப்போனாள். கடைசியாக, அன்றுபகல் நல்ல ஊழியஞ் செய்த அக்குதிரைகளானவை தமக்குண்டான வருத்தத்தை இனிது புலப்படுத்திக் காட்டவே, குமுதவல்லி தன் குதிரைக்கடிவாளத்தை இழுத்துப் பிடித்தாள்; அதைப்போலவே அவள் பாங்கிமாருஞ் செய்தார்கள். சில பொழுதிற் குதிரையின் நடையானது இன்னுங் குறைந்து மெது நடையாயிற்று; விரைந்தோடிவந்தமையால் முன்னே தெரிவிக்கக் கூடாத செய்திகளைக் குமுதவல்லி இப்போது சொல்லுதற்கு ஒழிவு பெற்றாள்; அவள் பாங்கிமாரோ அவற்றை எப்போது அவள் சொல்வாள் என்று உள்ளப்பதைப்போடு எதிர்பார்த்திருந்தார்கள்.

"பெண்காள், நான் இங்ஙனஞ் சடுதியில் வரலானதைப்பற்றி நீங்கள் திகைப்புந் திகிலும் அடைந்தீர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், நீங்கள் தப்பிப்பிழைத்த இடரைப்பற்றிச் சிறிதும் அறியமாட்டீர்கள். திடுக்கிடுஞ் செய்திஒன்றைக் கேட்கக் கருத்தாயிருங்கள். முதன்முதற் பேர்ஆண்மைத் தொழிலொடு கூடிய நடையுடையவன்போற் காணப்பட்டவனும், உங்களால் அவ்வளவு வியந்து சொல்லப்பட்ட நல்லழகு வாய்ந்தவனும், நம்பிக்கையை வருவித்தற்கு உரிய சொல்லுஞ் செயலுங் காட்டினவனும் ஆன அந்த இளைஞன், சிறிது நல்ல நிலைமையிலுள்ள பௌத்தபெருமான்போல் உடைஅணிந்திருந்த அந்த இளைஞன், சுருங்கச்சொல்லுங்கால், வெருக்கொளத்தக்க நல்லானைத் தவிர வேறு பிறன் அல்லன்!" என்று குமுதவல்லி மொழிந்தாள்.

சுந்தராம்பாளும் ஞானம்பாளுந் தாம் அடைந்த வியப்பைப்பற்றி ஒருசொற்கூடப் பேச வலியற்றவர்களானார்கள்; ஏக்கத்தினாலுந் திகிலினாலும் பேச்சு இழந்து இருந்தார்கள்.

"ஆம், பலநாழிகைகளாக வழித்துணை கொண்டு நாம் வழிமேற் போந்த அவ்விளைஞனே நேற்றிரவு நம் அறையினுள்ளே முகம் மறைத்துவந்து என்மோதிரத்தைக் கைப்பற்றிப் போனவன்!" என்று பின்னுந் தொடர்ந்து பேசினாள் குமுதவல்லி.

"ஆ! தெய்வமே! நேசப்பெருமாட்டி, இதனை நீங்கள் எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" என்று சுந்தராம்பாள் இப்போது பேசும் உணர்ச்சி வந்து வினவினாள்.

அதற்குக் குமுதவல்லி தாம் இரண்டு இரவலர்களைக் கண்டதையும், பௌத்த இளைஞன் தன்பணப்பையினுள்ளிருந்தவற்றிற் சிலவற்றைத் தற்செயலாய்க் கீழ்வீழ்த்திவிட்ட செய்தியையுந் தன் தோழிமார்க்கு நினைப்பூட்டினாள்.

அப்போதுதான் நான் என்மோதிரத்தைக் கண்டுகொண்டேன்; மாதர்காள், உடனே யான் வியப்புந் திகிலுங் கொண்டேன் என்பதை நீங்களே எளிதில் எண்ணிக்கொள்ளலாம். நான் மோதிரத்தைக் கீழ்க் கண்ணாற் பார்த்ததுபற்றி, நல்லான் ஐயங்கொள்ளாமல் இருக்கும் பொருட்டு என் முகத்தை விரைவில் அப்புறமாகத் திருப்பிக்கொண்டேன்; அவனது பிந்திய நடவடிக்கையினால்—அது முன்போலவே செவ்வையாய் இருந்தது—யான் அதனைப் பார்க்கவில்லையென்று நம்பி அவன் தன்னுள் மகிழ்ந்துகொண்டான் என்பதைத் தீர அறிந்தேன்." என்று குமுதவல்லி தொடர்ந்து உரைத்தாள்.

"அவ்வளவு இளம்பருவம் வாய்ந்தவன் அவ்வளவு பெருங்குற்றத்தைச் செய்தானென்று நினைக்க மனந் திடுக்கிடுகின்றதே!" என்றாள் சுந்தராம்பாள்.

"நாம் அவன் ஆட்களின் வழித்துணையால் அச்சமின்றி யிருந்தோமென்று கருதினேமே!" என்று கூறினாள் ஞானம்பாள்.

"அந்த மோதிரத்தைப்பற்றிய நிகழ்ச்சிக்கு முன்னே நடந்த ஒரு சிறுசெயல் உண்டு; அஃது ஒருநொடிநேரம் எனக்குப் புதுமையாகப் பட்டது. அந்தப் பாசாங்குக்காரப் பௌத்தனுடன் யான் பேசிக்கொண்டிருந்தபோது, நல்லானைப்பற்றி ஏதோ ஒன்று சொன்னேன்; அப்போது அவன் புதியதொருவகையாய் ஓர் ஓசையிடவே, யான் அவனை உற்றுப்பார்க்க வேண்டியதாயிற்று. அவன் பேர்பெற்ற கள்வர்தலைவனாகத்தான் இருக்கக்கூடுமென்று அப்போது யான் சிறிதும் ஐயங் கொள்ளவில்லை. ஆ! அவன் என்னைப் பொய்த்துணை காட்டி ஏமாற்றப் பார்த்தான் என்பதை இப்போது நினைவுகூர்கின்றேன்! நல்லானைக்

குறித்து என்னை அஞ்சவேண்டாமென்று கற்பித்தான்; என் பெண்களே; இன்றுபகலில் நமது பயணத்தில் அச்சமுறுத்தும் அக்கொள்ளைக் காரனைப்பற்றி நீங்கள் திகில் கொள்ளத்தக்க எதனையும் உங்களுக்கு யான் சொல்லாம விருந்துவிட்டேன் என்பதை யான் அவனுக்குத் தெரிவித்தபோது அவன் யான் செய்தது நல்லதென்று இசைந்தும் பேசினான். இனி அவ்வுண்மையை உங்களுக்கு மறைத்துவைக்க வேண்டியதில்லை; அவ்வுண்மை யாதெனிற்; சென்ற இரவு நாம் உறங்கியதும், எனது மோதிரக்கொள்ளை நடந்தேறியதுமான அந்தச் சாவடிக்கு உரியவனால் யான் பலவகையாலும் முன்னறிவிக்கப்பட்டிருக்கின்றேன். ஆம், அதுமட்டுமன்று; நல்லானுடைய உருவ அடையாளங்களைப் பற்றியும் போதுமான அளவுக்குத் தெரிந்துகொண்டேன்; அதனால் அவன் தற்செயலாகக் கீழேவீழ்த்திய மோதிரத்தைக் கீழ்க் கண்ணுற்பார்த்த அப்பொழுதே, அவன்றான் என்பக்கத்திற் குதிரை மேல் வந்தவனென்று தெளிய உணரலானேன்.'' என்று குமுதவல்லி மொழிந்தாள்.

''நேசப்பெருமாட்டி, நீங்கள் ஏன் இந்தச் செய்தியை அந்தப் பஞ்சாலைக்காரனுக்குச் சொல்லாமல் இருந்துவிட்டீர்கள்?'' என்று சுந்தராம்பாள் வினவினாள். ''அவன் தன்னுடைய ஆட்களை ஒன்றுசேர்த்துத், தன்குற்றங்களுக்கு உரிய ஒறுப்பினைப் பெறுங் குற்றவாளியாகக் கொடிய நல்லானைச் சிறை வைத்திருப்பானே.''

''ஆ, சுந்தராம்பாள்! சடுதியிற் பறந்தோடின என்னைப் பின்பற்றி வந்தநேரத்தில், நம்மைச் சூழ்ந்திருந்த இடர்களை எல்லாம் இன்னும் நீ உணர்ந்தாயில்லையே. அந்த வணிகன் நல்லானுக்கு ஆள் என்பதில் ஐயமே இல்லை; அல்லது எப்படியோ அவனுடன் சேர்ந்து புனைசுருட்டுப் பண்ணுகிறவனா யிருக்கவேண்டும். அந்தச் சிறிய ஊரிலுள்ள சிறு விடுதியண்டை போனதும், அங்கே சிறிது தொலைவில் நாம் பார்த்த நேர்த்தியான கட்டிடத்திலே நாம் தங்குவதற்கு இடங் கிடைக்கக்கூடுமாவென்று யான் கேட்டதும், அப்போது அம் முதியவணிகன் தானே அவ்விடத்திற்கு உரியவன் என்று முன் நின்று அறிவித்ததும், அந்தப் போலிப் பௌத்தன் எனக்காக இடையீடின்றிப் பரிந்து பேசுவது போல் உடனே அவனிடஞ் சென்று கேட்டதும் எல்லாம் நீ உன்னித்திலையோ? இன்னும், அப்போது அம்முதிய வணிகன், துணையற்ற பெண்கள் மூவர்க்குத் தீங்கு இழைத்தலைப்பற்றி இரக்கங்கொண்டவனாய்ப் போலுஞ் சிறிது தடங்கிநிற்க, அதற்குள் நல்லான் தலை குனிந்து ஏதோ அவன் காதில் முணுமுணுத்ததும், அதனால் உடனே அவ்வணிகன் தான் நடந்து கொள்ளவேண்டிய வகை இன்னதென

"பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தகு
நாகரிகம் வேண்டுபவர்"

என்னுந் திருக்குறளால் நன்கு விளங்குகின்றது. ஆனல், இக்காலத்திலோ இச்சொற்கு இப்பொருள் இல்லை; நகரவாழ்க்கையொடு தொடர்புடைய ஒழுக லாற்றினையே நாகரிகம் என்கின்றனர். நகரம் என்பது பேரூர். மேல்நாட்ட வரும் பேரூரின் வாழ்க்கைத்தொடர்பினையே நாகரிகம் (Civilisation) என வழங்குகின்றனர். பெரும்பாலும் நகரவாழ்க்கையானது பகட்டான ஆடை யணிகலங்கள் அணிவதிலும், பல்சுவை உணவுகள் உண்பதிலும், சில்ந்த பல ஊர்திகள் ஊர்வதிலும், பலதுறைகளிற்புகுந்து பொருள்தேடுவதிலும் இன்னும் இவைபோன்ற செயல்களிலும் அடங்கியிருக்கின்றது. ஆனல் இத்தகைய நகர வாழ்க்கைக்கும் உண்மை நாகரிகத்திற்கும் ஏதொருதொடர்பு மில்லையென்பது அறிஞர்கருத்து. பண்டைத்தமிழாசிரியர் கொண்டபடி, உண்மை நாகரிகம் என்பது கண்ணோட்டம் அல்லது மக்கள் ஒருவரோடொருவர் ஒருமித்து வாழுங்குணமேயாகும். இயற்கையமைப்பிற் பலவகை வேறுபாடுகள் இருந்தா லும், அவைதம்மை மிகுதியாய்ப்பாராட்டாது ஒருமித்து வாழ்தலே மக்கட்குச் சிறந்த குணமாகும். அஃதல்லாதது சிறந்தகுண மாகாது. ஒரு சிறிய ஊரில் மக்களின் தொகையும் வகையுஞ் சிறியவாயிருக்குமாதலால் அங்கே மிகுதியான வேறுபாடு காணப்படுதல் இல்லை. மற்று, ஒரு பெரிய நகரத்திலோ மக்களின் தொகையும் வகையும் மிகப்பெரியவாயிருக்குமாதலால், அவற்றிற்கேற்ப அங்கு வேறுபாடுகளும் மிகுதியாயிருக்கும். அத்தகைய வேறுபாடுகளுக்கிடையே ஒருமித்துவாழும் உயர்குணத்திற்குங் கண்ணோட்டத்திற்குந்தாந் தொடர்புண் டென்பது அறியற்பாற்று. நேர்நின் ரெருவர் ஓர் உதவி கேட்குங்கால் அதனை மறாதுசெய்தலே கண்ணோட்டம் என்பதுங் கருத்திற்பதித்தல்வேண்டும். நாகரி கம் என்பதற்கு நேரான தமிழ்ச்சொல் "ஊராண்மை" என்பதேயாகும்; இச் சொல் திருக்குறளில் வந்திருக்கின்றது. என மேலுஞ் சில பேசியமர்ந்தார்கள்.

அதன்பிற் பிற்பகல் 4 மணிக்கு மீண்டும் அவை கூடிற்று. தேவாரதிரு வாசகப்பாக்களாற் கடவுள்வாழ்த்துப் பாடியவுடன், பொதுத்தலைவர் கேட்டுக் கொள்ள மீண்டுந் திருவாளர் S. சோமசுந்தரபாரதியார் அவர்களே சிறப்புத் தலைவராய் அமர்ந்தனர்.

தலைவர் வேண்டுகோட்படி திருவாளர் K. M. பாலசுப்பிரமணியம் அவர் கள், பி. ஏ., பி. எல், "இந்தி வேண்டாம்" என்பதுபற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். அதன் குறிப்புகள் சில வருமாறு:

தமிழறிஞர் கூட்டத்தில் இந்தி வேண்டாமென்பதன் கருத்துத், தமிழர் தமது தாய்மொழியைக்கற்றலே கட்டாயமானது என வற்புறுத்துதலே யாகும். முதல் அமைச்சர் இந்தியைக் கட்டாயபாடமாக வைக்கவேண்டுமென்று துவக் கத்திற் சொன்னபோது, கல்வியமைச்சர் இந்தியை அங்ஙனங் கட்டாயபாட மாகவைத்தல் ஆகாதென்று மறுத்தார்; பின்னர் முதலமைச்சரின் தூண்டு தலால், அதனைக் கட்டாயபாடமாக்கவும் இசைந்தார். இஃது அவரது மனச் சான்றுக்கு மாறானசெயலன்றோ?

முதலமைச்சர் முகமதியரிடையே இந்தியைக் கட்டாயபாடமாக வைக்க முயன்றபோது, அஃது அவர்களால் முற்றும் மறுக்கப்பட்டமையால், அவர் அதிற் றோல்வியடைந்தார்.

நமது நாட்டின்மொழி தமிழ். நம்மவர்களில் ஆயிரத்தில் ஒருவர்கூடத் தமிழ்கற்றவர்களாய் இல்லாத நிலைமையில், அவர் தந் தாய்மொழியைச் செவ் வனே கற்பிக்க முயலவேண்டுவதாயிருக்கத், தமிழர்க்கு வேண்டாத இந்தியை அவர்க்குக் கட்டாயபாடமாக வைப்பது எவ்வளவு பொருத்தமில் செயலாயிருக் கின்றது! இனித், தமிழர் எவரும் இந்தியைப்பயிலாமல் ஒழித்துத், தந்தாய் மொழியைக் கற்றலே செயற்பாலதென மேலுஞ் சில சொல்லியமர்ந்தார்.

அதன்பிற் றலைவர் பாரதியாரெழுந்து அமைச்சர்களின் முன்னெடு பின் முரணன செயல்களை எடுத்துக்காட்டித், தமிழ்கற்றாரும் மற்றாருஞ் செய்த பெருங்கிளர்ச்சியினால், எல்லாப்பாடங்களையுந் தமிழிலேயே கற்பித்தற்கு அமைச்சர்களே ஏற்பாடுசெய்து விட்டார்கள் என்றும், இது தமிழர்க்கு ஒரு பெருவெற்றி யென்றுங்கூறினர். இன்னும் அவர் கூறியவை:

தமிழர் தமிழைக்கற்றுத் தமிழராகவாழ்வதுதான் சிறப்பு; வேறு மொழியைக்கற்று வாழ்வதுசிறப்பாகாது. வெற்றுயிர் வாழ்க்கையின் பொருட்டு வேறு மொழியைமட்டுங்கற்று உயிர்பிழைத்தல், விலங்கின்வாழ்க்கையை ஒப்பதாகும். மேலும், வேற்றுமொழிப்பயிற்சி நம்மைத் தன்வழிப்படுத்தி, நம்மை நம் தமிழ் மக்களினின்றும் வேறு பிரித்துவிடும்.

வேற்றுமொழிக்குரிய ஆரியர்க்கு நாம் இடங்கொடுத்தமையினுலேயே தமிழர்க்குரிய கோயில்களில் தமிழர்க்கு ஏதோர் உரிமையும் இல்லாமற்போய் விட்டது. கோயில்கள் ஆரியர்க்கு உரியவைகள் அல்ல.

பார்ப்பானுக்கு ஒருரூபா கொடுத்தால் ஒருகோடி புண்ணியம் என்ற வேதாந்த பாடத்தைச் சொல்லித் தமிழர்களை இழிவுபடுத்திப் பேடிகளாக்கி விட்டார்கள்.

தமிழர் அல்லாத இந்துமக்கள் பெரும்பாலும் ஆரியவழியினராய் மாறி விட்டமையால், அவர்கள் ஆரியரின் சூழ்ச்சியை அறிவதில்லை. ஆனுற், தமிழர்களோ பண்டுதொட்டுத் தாம்வேறு ஆரியர்வேறு என்னும் உணர்ச்சி வாய்ந்தவர்களாய் ஆரியரின் சூழ்ச்சியை அறிந்திருத்தலால், ஆரியத்தின்பாற் பட்ட பார்ப்பனர் தமிழரின் சிறந்த நாகரிகத்திற்குக் காரணமான தமிழை வேரோடு அழித்தற்கு மடிகட்டிநிற்கின்றனர். (தொடரும்)

ஓம்

ஞானசாகரக் கையொப்ப நண்பர்க்கு

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் ஞானசாகர 18-ஆந் திருமலரின் 11, 12-இதழ்கள் இப்போது முடிவுபெறுகின்றன. இத்திருமலரில் முடிவுபெறுத "சிவஞானபோத ஆராய்ச்சி," "இளைஞர்க்கான இன்றமிழ்" "சோமசுந்தரநாயகர் வரலாறு" "குமுதவல்லி" முதலான நூல்கள், அடுத்துவரும் 19-ஆந் திருமலரில் தொடர்ந்துவரும். "இளைஞர்க்கான இன்றமிழ்," "சோமசுந்தரநாயகர் வரலாறு" என்னும் இரண்டுநூல்களும் 19-ஆந் திருமலரில் முடிவுபெறும். அவைமுடிந்தபின் "வெனீசு வணிகன்" என்னுஞ் சிறந்த ஆங்கில நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பும், "மனிதவசியம்" அல்லது "மனக்கவர்ச்சி" என்னும் நூலும் அதில் வெளிவரும்.

19-ஆந் திருமலரின் முதலிதழ் வழக்கம்போலக் கையொப்ப நண்பர்க்குத் தபாற்கூலி, கையொப்பத்தொகை நாலேகால் ரூபாவுக்கு வி. பி. பியில் அனுப்பப்படும். வி. பி. பியில் அனுப்புவதால் இந்தியாவிலுள்ள நண்பர் மேற்கொண்டு பதிவுக்காக மூன்றணுவும், இலங்கையிலுள்ள நண்பர் மேற்கொண்டு ஐந்தணுவுஞ் சேர்த்துச் செலுத்த வேண்டிவரும். நாலேகால் ரூபாவும் முற்கொண்டு அனுப்பி விடுவார்க்கு அம் மூன்றணு, ஐந்தணு மிச்சமாகும்.

மலாய்நாடு, தென்னுப்பிரிக்கா முதலான அயல்நாடுகளிலுள்ள நண்பர்க்கு நம்முடைய வெளியீடுகளையும் நூல்களையும் வி. பி. பியில் அனுப்புதல் கூடாமையால், அவர்கள் அவற்றின் விலையுந் தபாற்கூலியும் முன்னதாக அனுப்பியே அவைகளைப்பெறுதல் வேண்டும்.

ஞானசாகரம் ஒன்றே தனித்தமிழில் வெளிவரும் வெளியீடாதல் உணர்ந்தும், இதன்கண்வரும் அரும்பெரும் பொருள்கள் தனித்தனி நூல்களாக அமையும் நலத்தை நினைந்தும், இதன் இதழ்கள் இடையிடையே காலந்தாழ்த்து வருதலைப் பெரிதாகப் பாராது, 19-ஆந் திருமலரையும் அன்பர்கள் அன்பாக ஏற்றுப் பயன்பெறுவார்களாக!

ஞானசாகர ஆசிரியர்.

என்னும் நூல்களை ஆக்கியிருத்தல் கண்டு போலுஞ், சித்தாந்தநூல்கள் பதினான்கனையுந் தொகுத்துக்கூறும்,

"உந்தி களிறு உயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்=வந்தஅருட்
பண்பு வினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று"

என்னும் பழையவொரு வெண்பாச்செய்யுள், முதலிலே 'திருவுந்தியார்,' 'திருக்களிற்றுப்படியார்' என்னும் நூல்களையும், அவற்றின்பிற் சிவஞானசித்தியார் முதலான ஏனைப் பன்னிரண்டு நூல்களையும் அடைவே வைத்தோதுவதாயிற்று. என்றிதுகாறும் ஆராய்ந்துரைத்தவாற்றால், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இரண்டு நூல்களுமே, சைவசித்தாந்த நூல்கள் பதினான்கனுள் மிகப்பழையனவாய் நிற்றல் தெளியப்படுமென்பது.

சிவஞானபோதம்

இனிச், சைவசித்தாந்த நூல்களில் மேற்கிளந்த திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இருநூல்களும், பிறவித்துன்பத்தை நீக்கி உயிர்கள் இறைவன் றிருவடியைத் தலைக்கூடிப் பேரின்பப்பேற்றினை அடைதல்வேண்டுமெனவும், அங்ஙனம் அவை அதனை அடைதற்குரிய தவமுயற்சி இத்தகையதாதல் வேண்டுமெனவும் வற்புறுத்தி, அதனை அடைந்தார் நிலை இவ்வியல்பிற்றுமென விளக்குந் திறத்தவாகும்.

மற்று, இவையிரண்டற்கும் பின்னெழுந்த சிவஞான **போதமோ**, காணப்பட்ட இவ்வுலகினைக்கொண்டு காணப்படாத கடவுளொன் றுண்டெனவும், அதுதான் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களைப் புரிவதாமெனவும், அழித்தற்றொழிலை இயற்றுவதே ஏனை யிரண்டு தொழில்களையும் இயற்ற வல்லதாமெனவும், அம்முழுமுதலறிவுப் பொருடான் உலகுயிர்களிற் பிரிவற நிறைந்து நின்று அம்முத்தொழில்களை உயிர்களின் அறிவு விளக்க

இன்பப்பேற்றின் பொருட்டு நிகழ்த்தா நிற்குமெனவும், உடலின் வேறாக உயிர் என்பதொரு பொருள் உண்டென வும், அவ்வுயிர்தானும் ஒன்றாகாமற் பலவாய்ப் பலவேறு தன்மைகள் வாய்ந்தனவாய் என்றுந் தம்முதல் அழியாமல் இருக்குமெனவும், அவ்வுயிர்களெல்லாந் தொன்று தொட் டே ஆணவம் எனப்படும் ஓரிருளால் தம் விழைவறிவு செயல்கள் மறைக்கப்பட்டு நிற்றலின் அவ்விருள் நீக்கத் தின் பொருட்டு இறைவனாற் படைத்துக் கொடுக்கப்பட்ட இப் பல்வேறுடம்புகளைக் கருவியாய்க் கொண்டே அவ் விழைவறிவு செயல்கள் விளங்கப் பெற்று வருகின்றன வெனவும், உயிரின் சேர்க்கையாலன்றி ஐம்பொறியுணர்வு கள் இயங்காமைபோல இறைவன் சேர்க்கையாலன்றி உயிர் கட்கு விழைவறிவு செயல்கள் விளங்காவெனவும், மக்கள் தமது சிற்றறிவாற் சுட்டியறிவன வெல்லாம் 'அசத்து' என் னும் பெயர்க்குரியனவாயும் மனமொழிகளுக்கு எட்டா நிலையில் இறைவனதருள் வயமாய் நின்று உணரப்படும் ஒரு முழுமுதற்பொருள் 'சிவசத்து' என்னும் பெயர்க்குரியதா யும் நிற்குமெனவும், அங்ஙனஞ் சத்தாகிய சிவத்தின்எதிரே அசத்தாகிய பொருள்கள் விளங்க மாட்டாவாகலிற் சத்தாய் அவற்றுள் நிறைந்து நிற்குஞ் சிவம் அவையிற்றைத் தன்னின் வேறாய்க்காணாது, அசத்தாம் பொருள்கட்கு உணர்வு இன் மையின் அவைதாமுஞ் சிவத்தைக் காணாது, மற்று அசத்தை யுஞ் சத்தையுங் காண்டற்கியைந்த சத்தாந்தன்மையும் அசத் தாந்தன்மையுந் தங்கண் ஒருங்குடைய உயிர்களே (ஆன் மாக்களே) அவ்விரண்டனையும் உணருந் தன்மையவாக லின் அதுபற்றி அவை 'சதசத்து' என்று வழங்கப்படுமென வும், இவ்வியல்புகளெல்லாம் அறியமாட்டாது ஐம்புல அவாக்களால் ஈர்ப்புண்டு தானோர் அறிவுப்பொருளென்ப தூஉம் உணராது மயங்கிவருந்தும் உயிர்களுக்கு, அவ்வுயிர் களுள் உயிராய் மறைந்துநின்று அருள்புரிந்துவரும் முதல்வனே இரக்கமிகுதியாற் குருவடிவிற்போந்து அவ்

வியல்புகளை யுணர்த்த அதனான் மெய்யுணர்வு தோன்றப் பெற்று அவ்வுயிர்கள் இறைவன் றிருவடியினை ஒருங்கு தலைக்கூடுமெனவும், அறிவில் பொருள்களிற் பழகிய பழக்கத்தாற் றோன்றிய அறிவாலும் உயிர்கள் தமக்கெனவுள்ள சுட்டறிவாலும் இறைவனை அறிதல் செல்லாமையால் இறைவனது அருளறிவு ஒன்றுகொண்டே அவை இறைவனை யுணர்ந்து அவ்வுணர்ச்சி பின்னர் அறியாமையாற் பற்றப்படாமைப் பொருட்டு 'ஓம்சிவம்' எனும் ஐந்தெழுத்தை இடையறாது நினைவிற் பதித்தல் வேண்டுமெனவும், இறைவன் உயிர்களிற் பிரிவின்றி நிற்றல்போல உயிர்களும் இறைவனை விட்டுப் பிறிதொன்றனை நினையாத நிலையில் உறைத்துநிற்குமாயின் ஆணவம் மாயை வினையென்னும் மும்மலங்களால் அவை தீண்டப்பெறுவெனவும், பொருள்களைக் காணுங் கண்களுக்கு அவற்றோடுடனாய் நின்று தானுங்கண்டு அவை அவையிற்றைக் காணுமாறுஞ்செய்யும் உயிர்போல இறைவனும் உயிர்களோ டுடனாய்நின்று அவை மல மாயை வினைகளைக் காணுமாறுசெய்து தானும் அவற்றைக் காண்பனாகலின் இங்ஙனந் தன்னோடுடனாய் நின்று காட்டிக் காணும் இறைவன்றன் அருளுதவியினை நினைந்துநினைந் துருகும் உயிர் அவன்றிருவடியில் ஒன்றி ஒன்றறக்கலத்தல் ஒருதலையாமெனவும், இறைவன் றிருவடிப்போதுகளை உயிர்கள் சேரவொட்டாது தடைசெய்யும் மலமாயை வினைகளை மேற்காட்டிய முறையிற் கடைப்பிடியாய் நின்று பழகுமாற்றாற் சுவடறக் கழுவிச் சிவநேய முடையாருடன் கொண்ட இடையறாச் சேர்க்கையால் அவை மீண்டுந் தம்மைப் பற்றாமற்செய்து சிவம் விளங்கித்தோன்றுஞ் சிவனடியார் வடிவினையுந் திருக்கோயில்களையுஞ் சிவமேயெனக் கருதி வழிபடுதல் இன்றியமையாததாமெனவும் இனிது விளக்குந் தனிப்பெருமாட்சி வாய்ந்ததாகும்.

கடவுள் உயிர் மலம் மாயை வினை வீடுபேறு என்னும் ஆறன் இயல்புகளை அளவையியல் வழா ஆராய்ச்சிமுறை

யில் வைத்து நன்கு விளக்குந் தனி முதல் நூல் சிவஞான போதத்தைத் தவிர வேறேதும் எங்கும் எந்த மொழியிலும் இல்லை. உலகத்துள்ள நூல்களிற் சில, கடவுளியல்புகளிற் சிலவற்றை மட்டுமே எடுத்தியம்பும்; அச் சிலவற்றுள்ளும் ஒன்று மற்றொன்றனோடு ஒவ்வாமல் இகலும்; அதனால் அந் நூலறிவு கொண்டு இறைவன்றன் உண்மை யியல்புகளை யுள்ளவாறுணர்ந்து அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் இயலாதொழிகின்றன. வேறு சிலநூல்கள் உயிரினியல்புகளை அளந்தறியப் புகுந்து அவற்றின் உண்மை காண மாட்டாமல் அங்ஙனமே ஒன்றனோடொன்று மாறுபடுங் கொள்கைகளை விரித்து வெறியவாயின; அவைதம்மால் உயிரின் உண்மையுணர்தலும் இயலாதொழிகின்றது.

இனி, உயிர்கள் பிறவிகளெடுத் துழலுங் காரணத்தை வேறெந்தநூலுங் கண்டதில்லை; அதனால் ஆணவமலத்தைப் பற்றிய ஆராய்ச்சி சிவஞானபோதத்திற் றவிர உலகத்தின்கணுள்ள நூல்கள் வேறெதன்கண்ணுங்காணப்படுகின்றிலது.

இனி, இவ்வுலகத்திற்கும், இதன்கணுள்ள பொருள்கள் உடம்புகட்கும் முதற் கருவியாய் நிற்கும் மாயை யென்னும் முதற் பொருளின் றன்மையினை உள்ளவாறுணர்ந்துரைக்கும் நூலுஞ் சிவஞான போதத்தைத் தவிர வேறெதனையும் யாண்டுங் கண்டிலேம். இம் மாயையின் வழியே உயிர்கள்மாட்டு நிகழும் இருவினை நிகழ்ச்சிகளை முன் பின் முரணுறாமல் ஆராய்ந்து தெற்றெனத்தெரிக்கும் நூலும் இதனையொழிய வேறெதனையுங்காணேம்.

இனி, இவையேயன்றி, உயிர்கள் எய்துதற்குரிய முடிந்தநிலையான வீடுபேற்றின் மெய்ம்மையினை விளங்கத் தேற்றும் விழுமியநூலுஞ் சிவஞானபோதமே யல்லால் வேறேதும் எங்கும் எம்மொழியிலும் இல்லை.

இவ்வாறாக, மக்களுயிர்க் குறுதிபயக்கும் இவ்வறு வகைப்பொருளாராய்ச்சியும் ஒன்றன்பின் ஒன்றாக முறைப் படவைத்து, மெய்ம்மையுணரும் வேட்கைமிக்க நுண்

ணுணர்வினரெல்லாருங் கழிபேருவகை துளும்பித் தெரிந் தேற்க இவ்விழுமிய சிவஞானபோதநூல் உண்மையான் ஆராய்ந்து விளக்கும் வகைகளெல்லாம் பின்னே தொடர்ந்து வரும் விரிவுரையிற் காணப்படும். இத்துணை ஆராய்ச்சி களையுந் தன்னகத்தேகொண்ட இந்நூல் மிகப்பெரியதோர் அளவினதாய் இருக்கவேண்டுமென இதனைக் கண்டறியா தார் நினைப்பர். ஆனல், இதன் மிகச்சுருங்கிய அளவினைக் கண்டாரோ, ஆ! இத்துணை அரும்பெரும் பொருளும் ஒருங்கு தெரிக்கும் இச்சிறியநூல் அளவில் எத்துணைச் சிறிய தாயிருக்கின்றதென எண்ணி யெண்ணி வியப்புறு நிற்பர்! ஏனெனில், இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களால் அமைந் திருக்கின்றது; இப்பன்னிரண்டு சூத்திரங்களும் அறுபஃதடி களையுடையன; இவ்வறுபஃதடிகளிலும் இருநூற்றுப்பதி ணறு சொற்களேயுள்ளன. இனி, இப்பன்னிரண்டு சூத்திரப் பொருளை விளக்கும் வெண்பாக்களோ எண்பதேயாகும்; இவ்வெண்பதுவெண்பாக்களும்முந்நூற்றறுபஃதடிகளினல் ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆகத், தொண்ணூற் றிரண்டு பாக்களிலே, அல்லது நானூற்றிருபஃதடிகளிலே கடவுள் உயிர் மலம் மாயை வினை வீடுபேறு என்னும் அறுவகைப் பொருள்களின் ஆராய்ச்சிகள் அத்துணையும் அடக்கி, அங் ஙனம் அடக்கியவாற்ருற் பொருள்மயங்குதற்குச் சிறிதும் இடனின்றி, அவற்றை அங்கையங்கனியெனத் தெளிய விளக்கி, அவையிற்றின் உண்மையை முடித்துக்காட்டுவ தென்றால்,ஆ! அஃது ஒப்புயர்வில்லாத் தெய்வஅருள் நிரம் பப் பெற்றார்க்கன்றி ஏனையோர்க்கு எளிதின் வாய்க்குமோ? இத்துணைச்சுருங்கிய நூலிலே பரந்து விரிந்தாழ்ந்தபொருட் பரப்பத்துணையுஞ் செறிந்து துலங்கக்கண்டால், அஃதெ வர்க்குத்தான் வியப்பினை விளைவியாது!

பண்டைச்செந்தமிழ்நூல்களிலே அறம்பொருள்இன் பம் வீடு என்னும் உறுதிப்பொருள்களின் றன்மைகள் அவ் வளவுந் தெரிந்தெடுத்துக் குயிற்றிய மணிக்கலன் என வயங்

குந் தனிப்பெருமாட்சி வாய்ந்தநூல் திருக்குறள் ஒன்றே யாம். பின்றைச்செந்தமிழ் நூல்களில் அவ்வுறுதிப்பொருள் களை எய்துதற்குரிய உயிர்களினியல்பும், அவை அவையிற் றைப் பெறவொட்டாது தடைசெய்யும் ஆணவமலத்தின் இயல்பும், உயிர்கட்கு அறிவையும் முயற்சியையும் எழுப்பு தற்பயத்தவாம் மாயைவினைகளின் இயல்பும், உயிர்களுக்கு மாயையைக்கூட்டி அவ்வாற்றால் அறிவு முயற்சிகளைத் தோற்றுவித்துத் தனது பேரின்பத்தை நுகர்விப்பானுன முதல்வன் இயல்பும், வீடுபேற்றின் றன்மையும் வினுவிடை யுள்ளுறுத்து விளக்கித் திட்பநுட்பஞ்செறிந்து, திருக்குற ளினும் பார்க்கப் பன்மடங்கு சிறந்த மாட்சிமிக்கதாய் நிலவு வது சிவஞானபோதம் ஒன்றேயாம். திருக்குறள் பெரும் பாலும் மக்கள் ஒழுகலாறுகளையே விரித்துரைப்பது; கட வுள் உயிர் மலம் மாயை வினைகளையும் வீடுபேற்றையும் ஆராய்ச்சிமுறையானன்றி இயற்கை முறையான் வைத்துச் சுருக்கி நுவல்வது. திருக்குறட் பயிற்சிகொண்டு இறைவ னிருப்பும் இறைவன் பொதுவியல்புகளும் உணரலாகுமே யன்றி, அவன் றன்னை நினைந்துருக அவாவும் அன்பர் பொருட்டு இன்றியமையாது மேற்கொள்ளும் அருளுரு வச் சிறப்பியல்பினை உணர்தல் இயலாது; அங்ஙனமே, அத ஞல் ஏனை உயிர்களின் சிறப்பியல்புகளும், மல மாயை வினை வீடுபேறுகளின் உண்மைத் தன்மைகளும் வெள்ளிடை விலங்கலென விளங்கவறிந் துறுதிகூடுதல் இயலாது. மற்றுச், சிவஞானபோதநூலிலோ இவ்வியல்புகள் முற்றுமெடுத்துத் தெளித்து விளக்கப்பட்டிருக்கின்றன; திருக்குறளினும் மிகப்பெரிய ஆராய்ச்சிகளை அகத்தடக்கிய இவ்வறிவுப்பெரு நூல், அதனினும் அளவிற் பெரியதொன்றாக இருக்கற்பால தெனினும், இஃது அதனில் ஆறிலொருகூறான அளவின தாயிருத்தலே பெரியதோர் இறும்பூதினைப் பயவாநிற்கின் றது. திருக்குறள் ஆயிரத்துமுந்நூற்றுமுப்பது குறட்பாக் கள் அல்லது இரண்டாயிரத்து அறுநூற்றறுபஃ தடிகளால்

ஆக்கப்பட்டதொன்றாகும்; மற்றுச், சிவஞானபோதமோ தொண்ணூற்றிரண்டு பாக்கள் அல்லது நானூற்றிருபஃதடிகளான் மட்டுமே அமைக்கப்பட்டதொரு தனிச்சிறப்பு வாய்ந்த தாகும். சிவஞானபோதத்தைப்போற் சொற்சுருங்கியதொரு நூலும், அங்ஙனஞ் சுருங்கிய எல்லையிலே மிக விரிந்தாழ்ந்த பொருட்பரப்பெல்லாம் அகத்தடக்கிய தொரு நூலும் இந்நிலவுலகத்துள்ள எந்த மொழியிலும் இல்லையென்பது திண்ணம்.

இன்னுஞ் சொற்சுருங்க நூலியற்றுதல் அரிதேயாயினும், அங்ஙனம் இயற்றும்நூலிற் றான்கூறக்கருதிய அரும் பொருளெல்லாம் ஒருங்குசெறித்து அவற்றை நன்கினிது விளங்கவைத்தல் எவர்க்கும் அரிதரிது. வடமொழியிற் சொற்சுருங்க அமைக்கப்பட்ட 'சாங்கியம்,' 'யோகம்,' 'வைசேடிகம்,' 'நையாயிகம்,' 'மீமாஞ்சை,' 'வேதாந்தம்' முதலானநூல்கள் பலவுள. என்றாலும், அந்நூற்பொருள்கள் அந்நூற்சூத்திரயாப்புகளால் நன்கு விளங்குதலில்லை. அதனால், அவையிற்றுக்கு உரைகாணப்புகும் ஆசிரியர் தம்முள் ஒருவரோடொருவர் மிகஇகலி யிடும் பூசலுக்கும் ஓர் அளவேயில்லை. அங்ஙனஞ் சூத்திரப்பொருடுணிதற்குப் பெரும்பாலும் இடனும் வாயிலும் இன்றிச் சொற்சுருங்க இயற்றப்பட்ட வடமொழி நூல்களை யொப்பன தமிழ் மொழியில் ஒருசிலதாமும் இல்லை. தமிழ் இலக்கணஇலக்கிய அறிவுவாய்ந்தாரெவருந் 'திருக்குறள்,' 'சிவஞானபோதம்' என்னும் நூல்களுக்கு உரையுதவியில்லாமலே பொருடெரிந்துகோடல் இயலும். மற்று, மேற்கூறிய வடமொழிச் சுருக்கநூல்களோ, தம்மை யியற்றிய ஆசிரியரே தம்மாணாக்கர்க்குத் தம் பொருளை அறிவுறுக்க, அம்மாணாக்கர் அப்பொருளைத் தம்மாணாக்கர்க்கு அறிவுறுக்க, இங்ஙனமாக அவ்வாசிரியர்தம் மாணாக்கர் வழியில் வந்தார் வகுத்த உரையுளவாயின், தம்பொருளை உள்ளவாறறிவிக்குமே யன்றி, அங்ஙனம் அவ்வாசிரிய மாணாக்க மரபில்

வாராதிர்க்குத் தம் உண்மைப்பொருளைப் புலப்படுத்துஞ் சொல்லாற்றல் வாயாதன வாய்த் தம்மைப்பயில்வா ரெவர்க்குப் பெரியதொரு மறுக்கத்தினை விளைவிப்பனவாய் இருக்கின்றன. இத்தகைய இடர்ப்பாடு செந்தமிழ்நூல்களிற் காணப்படாதென்பதற்குத் திருக்குறளுஞ் சிவஞானபோதமுமே உறுபெருஞ்சான்றும். சிரியநூல்களில். திருக்குறள் சிவஞானபோதம் என்னும் இவ்விரண்டுமே தாங் கருதியபொருளைத் தம்மின் வேறானவோர் உரையுதவி வேண்டாது தக்கார்க்குத் தெற்றெனப் புலப்படுக்குஞ் சுருக்கநூல்களாய்த் தலைசிறந்து நிற்கின்றன. சுருங்கியவடிவிலுந் திருக்குறள் ஒரு கண்ணாடியையொப்பது; சிவஞானபோதமோ ஒரு புன்னுனிமேல் நிற்கும் ஒரு பனித்திவலையையொப்பது; கண்ணாடியும் பனித்திவலையுந் தாம் வடிவிற் சிறியனவாய் இருந்தே தம்மிற்பெரிய பலவடிவங்களைத் தம் மகத்தேகொண்டு அவைதம்மை விளங்கக் காட்டுமாயினும் பனித்திவலை அளவின்மிகச்சிறியது, கண்ணாடியோ பனித்திவலையினும் பன்மடங்குபெரியது ; அதுபோற் றிருச்குறளுஞ் சிவஞானபோதத்தினும் பன்மடங்கு பெரியதொரு சுருக்க நூலாகும். எனவே, அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருட் பரப்பெல்லாம் ஒருங்கு செறித்துத் 'திருக்குறள்' யாத்த தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரது அறிவாற்றலினுங், கடவுள் உயிர் மும்மலம் வீடுபேறு என்னும் அறிதற்கரிய நுண்பொருட் பரப்பெல்லாம் ஆராய்ந்து தன்னகத்தடக்கித் தெளிக்குஞ் 'சிவஞானபோதத்'தை யாத்த ஆசிரியர் மெய்கண்டதேவ நாயனாரது தெய்வ அருளறிவின் ஆற்றல் பன்மடங்கு சிறந்த தொன்றாய் வீறிவிளங்கல் நடுநின் றாராய்வார்க்கெல்லாம் நன்கு விளங்கற் பாலதேயாம். திருக்குறண்மாட்சியினை வியந்து,

"தினையளவு போதாச் சிறு புன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்—மனையளகு

பழைய நாட்களிலேயே பயிராக்கப்பட்டுள்ளன். இங்ஙனம் ஒரு தொகுப்பாக வைக்கப்பட்ட மாச்செறிவே 'தோப்பு' என வழங்கப்படலாயிற்று. தொகுப்பு என்னுஞ்சொல்லே தோப்பு எனத் திரிபுற்றது.

இப்பழைய கொட்டைமாமரங்கள் பருத்துயர்ந்து, பரிய பரிய கோடுகளையுங் கொம்புகளையும் வளார்களையும் அவற்றில் இலைகளையும் நாற்புறங்களிலும் பரப்பி அடர்ந்து வானளாவி நிற்குந் தோப்புகளின் காட்சியானது காண்பார் கண்களுக்கும் உள்ளத்திற்கும் மகிழ்ச்சியையும் ஆறுதலையுந் தருகின்றனவன்றோ? வெப்பம் மிகுந்த வேனிற்காலத்தில் ஊர்ப்புறத்தேசென்று, இத்தோப்புகளின் ஊடுநுழைந்து வெயிலேபடாத அம்மா நீழல்களில் வைகி இளைப்பாறுவதினும் மிக்கதோரின்பம் பிறிதுண்டோ? வேனிற்காலத்திற்கு முன்னுஞ்,சில இடங்களில் வேனிற்காலத் துவக்கத்தும் மாமரங்கள் பூவெடுத்தலால், அப்போது அப்பூக்களின் நறுமணத்தில் அளைந்து வந்து சில்லென்று வீசும் மெல்லிய தென்றற்காற்று நம் முடம்பின்மேற் படுங்கால் ஆ! அது நமக்கு எவ்வளவு இன்பத்தைத் தருகின்றது!

மற்றைப்பறவைகளைப்போல் எளிதிற் காணப்படுவதல்லாத குயிற்பறவைகள்வேனிற்காலத்தில்மாமரங்களில் அமர்ந்து கூவும் ஓசை கேட்கக் கேட்க இனியதா யிருக்கும்.பெரும்பாலும் மக்கள் வழங்காத ஊர்ப்புறத் தோப்புகளிலிருந்தே குயில்கள் கூவுதலால், தனித்த அவ்விடங்களிற்சென்று அவைகூவும் அவ் வின்னோசையைக் கேட்பது பின்னும் அவ்வினிமையை மிகுதிப்படுத்துகின்றது. ஆனாலுங், தங் காதலரைப்பிரிந்து, அவரது பிரிவை ஆற்றாது வருந்தும் மகளிர்க்குக் குயில்கூவும் ஓசை அவரது வருத்தத்தைப் பெருகுவிக்குமென்று நல்லிசைப்புலவர்கள் பாடியிருக்கின்றனர். அரசனும் புலவனுமான ஒல்லை

யூர் தந்த பூதப்பாண்டியன் என்பான் தான் பாடிய செய்யுள் ஒன்றில்,

"மாநனை கொழுதிய மணிநிற இருங்குயில்
பருநா விளியா னடுநின்று அல்கலும்
உரைப்ப போல ஊழ்கொள்பு கூவ,
இனச்சிதர் உகுத்த இலவத் தாங்கட்
சினைப்பூங் கோங்கின் நுண்டாது பகர்நர்
பவளச் செப்பிற் பொன்சொரிந் தன்ன
இகழுநர் இகழா இளநாள் அமையஞ்
செய்தோர் மன்ற குறியென நீநின்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப
வாராமையிற் புலந்த நெஞ்சமொடு
நோவல் குறுமகள்" (அகநானூறு, ௨௫)

எனத், தன் கொழுநனைப் பிரிந்த வேனிற்காலத்திற் குயிலிசைகேட்டு வருந்தும் ஒரு நங்கைக்கு அவடன்றோழி ஆறுதன்மொழி பகர்தலை எடுத்துக்காட்டியிருக்கின்றான்.

இனி, ஐப்பசித்திங்களிற் பூவெடுக்கும் ஒட்டுமா மரங்கள் பிஞ்சுபிடித்துக் காய்த்துச் சித்திரைத்திங்களிலேயிருந்து பழங்களைத் தருகின்றன. கார்த்திகைத்திங்களிற் பூத்துக் காய்க்கும் மரங்களோ வைகாசி அல்லது ஆனிமுதற் பழுத்து நறுஞ்சுவைக்கனிகளைத் தருகின்றன. இவ்வொட்டுமாமரங்கள் பூத்திருக்குங்கால் அவற்றிலிருந்து சிலநாட்கள்வரையில் வருங் குளிர்ந்தமணமானது உளத்திற்கு அமைதியான இன்பத்தை ஊட்டுகின்றது

ஒட்டுமாமரங்களின் தீஞ்சுவையினை அறிந்தவர்கள், வாழை பலா நாரத்தை மாதுளை விளா முதலான ஏனை எல்லா மரங்களின் கனிகளைவிட இவற்றையே மிகவும் விழைந்து பாராட்டுகின்றார்கள். உண்மையாகவே ஒட்டுமாங்கனிகளின் சுவை வேறெவ்வகைக் கனிகளுக்கும் இல்லை. ஆதலினாற்றான், குளிர்மிகுந்த ஐரோப்

பாதேயத்திலுள்ள வெள்ளைக்காரர்கள் மிகுந்த விலை கொடுத்து ஒட்டுமாங்கனிகளைத் தம்மூர்களுக்கு வருவிக்கின்றனர். சில காலங்களில் ஓர் ஒட்டுமாங்கனிக்குப் பதினைந்து ரூபாவரையில் விலைகொடுத்து வாங்குகிறார்கள் என்று கல்வியிற்சிறந்த ஒரு துரைமகன் எழுதியிருக்கின்றார். இவ்விந்திய நாட்டுக்கு மிகவுஞ் சேயவான தேயங்களுக்கு இவ்வொட்டுமாம்பழங்களைக் கொண்டு செல்லவேண்டுபவர்கள், சாடிகளில் தேனை நிரப்பி அத்தேனில் அப்பழங்களை அமிழ்த்திவைத்துக் கொண்டு போகின்றார்கள். இவ்விந்தியநாட்டிலுள்ள பெருஞ்செல்வர்களிற் சிலரும் ஒட்டுமாங்கனிகளிற் றமக்கு ஆராவேட்கை இருத்தலால், அவை கிடைப்பதில்லா மற்றைப் பருவ காலங்களிலும் அவற்றை யுண்டு இன்புறுதற் பொருட்டு, அங்ஙனமே அவற்றைத் தேன் நிறைத்த சாடிகளில் இட்டுவைத்துத், தாம் வேண்டுங்காலங்களில் எடுத்து அருந்துகின்றார்கள். முறைப்படியெடுத்துவைத்த தூய தேனில் எத்தகைய பச்சைப்பண்டங்களை இட்டு வைத்தாலும் அவை நெடுநாள்வரையிற் கெடாமல், இட்டக்கால் இருந்த பதப்படியேயிருக்குமென்று அங்ஙனஞ் செய்துபார்த்தவர்கள் சொல்லக்கேட்டிருக்கின்றேம்.

இனி, ஒட்டுமாம்பழங்களை விரும்பி அடுத்தடுத்து உண்பவர்கள் உடல்நலங் கெடாமைப்பொருட்டு, அவற்றை உண்டபின் காய்ச்சிய ஆவின்பாலைப் பருகுதல் வேண்டும். ஆனாலும், இவைதம்மைச் செரிக்கும் அளவறிந்து உட்கொள்பவர்கள் செழுமையான இரத்தம் ஊறப்பெற்று உடல்நல மனநலங்கள் வாய்ந்து திகழ்வர். அளவுக்குமேல் அவாவை அடக்காமல் அவையிற்றை உண்பவர்கள் வயிற்றுநோய் வயிற்றுக்கழிச்சலால் வருந்துவர். "அமிழ்தமேயானாலும் அளவறிந்துண்," "அளவுக்குமிஞ்சினல் அமிழ்தமும் நஞ்சாம்" என்னும் பழமொழிகள் நமதுடம்பின் நலத்திற்கு வேண்டுவவறிந்

துரைக்கும் உண்மைப் பொன்மொழிகளாகவே விளங்குகின்றன.

இனிக், கொட்டைமாமரங்கள் நார் உள்ளவைகளாயிருப்பினும் அவற்றிலுந் தீஞ்சுவைக்கனிகள் உண்டு. எனினும், ஒட்டுமாங்கனிகள் மிகுதியாய்க் கிடைக்கக் கூடியகாலம் வளர வளர, ஏழை யெளியவர்களைத்தவிர ஏனையோரெல்லாரும் ஒட்டுக் கனிகளையே மிகுதியும் வாங்கி அயில்கின்றனர். மேலும், ஒட்டுமாமரங்கள் வர வர நாடெங்கும் மிகுதியாய்ப் பயிர்செய்யப்பட்டுப் பெருகுதலால், இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் அவை மிகுந்த விலைக்கு விற்றதுபோலில்லாமல், இப்போதவை நயமான விலைக்குக் கிடைக்கின்றன. அதனாற், கொட்டைமாம்பழங்கள் இந்நாளில் மிகுதியாய் விற்கக் காணேம். என்றாலும், ஊறுகாய் செய்வதற்குப் பெரும்பாலுங் கொட்டைமாங்காய்களையே எல்லாரும் பயன்படுத்துகின்றனர். மாங்கொட்டைகளையும் இராக்காலக் குழம்புகளுக்குச் சைவர்கள் பயன்படுத்துகின்றார்கள். மாம்பருப்புகள் வயிற்றுளைச்சலைப் போக்குதற்குச் சிறந்தமருந்தாக எளியமக்களாற் பயன்படுத்தப் படுகின்றன.

இனி, யாங்கள் ஒட்டுமாம்பழங்களைப் பழங்களாகவே பயன்படுத்தியதுடன், அவற்றின் காய்களையும் பருப்புக்குழம்பு, வெல்லப்பாகு, தயிர்ப்பச்சடி முதலியவற்றிற் சேர்த்து அருந்திப்பார்த்ததில், அவை இவ்வகையிலுங் குழைவுஞ் சுவையும் மிக்கனவாய் இருத்தல்கண்டு உவப்புற்றேம். ஊறுகாய் இட்டாலும் ஒட்டுமாங்காய்கள் களிப்பாய் நாவுக்கு நன்சுவை விளைக்கின்றன. இங்ஙனம் பலவகையாலும் பயன்பட்டு நம்நாட்டவரை இன்புறுத்தும் மாமரங்களை நம்மனோர்க்கு வழங்கிய இறைவன் றிருவருளுக்கு நம்முடைய நன்றியையும் வணக்கத்தையுஞ் செலுத்துவாமாக!

உழைப்பும் விடாமுயற்சியும் உடைய அறிவாளிகள்சிலர் ஆங்காங்குத் தோன்றுவதனாலேயே மக்கள் வாழ்க்கை யானது மேன்மேல் அறிவும் இன்பமுந் தருந்தகைத்தாய் நடைபெறுகின்றது. அத்தன்மையரான அறிஞர் தோன் றாத மிகப்பழைய காலங்களில் நம்முன்னோர்கள் எங் ஙனம் உயிர்வாழ்ந்தனரென்பதைப் பழைய மக்கள்வர லாறு நுவலும்நூல்களில் (Anthropology) நாம் படித்துப் பார்ப்பமாயின்,நந் நெஞ்சங் கலங்காதிராது. நாடோறும் உண்ணுதற்குச் செவ்வையான உணவும் உடுக்கக் கூறை யும் இன்றி அவர்கள் பட்டபாடு நினைக்கநினைக்கப் பெருந் திகிலை உண்டுபண்ணுகின்றது. வயிற்றுக்கு உணவுதேடித் தந்து தமது உடலை ஓம்புவதே அவர்கட்கு அந்நாளில் ஓயாப் பெருமுயற்சியா யிருந்தது. இப்போதுள்ள யானை களைவிடப் பன்மடங்கு பெரியவான 'மாமதம்' (mammoth) என்னும் பெரிய யானைகள் அந்நாளில் மந்தை மந்தையாக இருந்தன. அவ்வியானைகளை யொப்பவே உருவிற் பெரியவான கல்யானைகளுங், கொடும்புலி களும், அரிமாக்களும், மலைப்பாம்புகளும், பெருமுதலை களும், பெருங்கழுகுகளுங், கொடும்பெருங் குரங்கு களுங், கடல்நீரின் மட்டுமன்றி நிலத்தின்மேலும் வந்துல வும் பெரிய பெரிய கடல்விலங்குகளுந் இம்மாநிலத்தே திரிந்தன. அவற்றிடையேயிருந்து உயிர்பிழைத்த பண் டைநாள் மக்கள் இருக்க இல்லம் அமைக்கத் தெரியாத வர்கள்; மலைக்குகைகளையும் மரப்பொந்துகளையும் மர உச்சிகளையுமே இருப்பிடமாய்க்கொண்டவர்கள். நெடுங் காலம் வரையில் தமதுடம்பைக் குளிரும் வெப்பமுந் தாக்காமல், தழைகளாலேனும் மரப்பட்டைகளாலேனும் விலங்கின் தோல்களாலேனும் மறைத்துக் கொள்ளும் வகை தெரியாதிருந்தவர்கள். இத்துணை இடர்ப்பாட்டிற் சிறு சிறு கூட்டத்தினரா யிருந்த அப்பண்டைமக்கள்,

தமக்குந் தம்மைச்சேர்ந்தார்க்கும் உணவுதேடும்பொருட்டுக் காடுகளிலும், மலைகளிலுங், கடலோரம் யாற்றோரங்களிலுஞ் சென்றக்கால், அக்கொடிய பெருவிலங்குகளால் அவர்கள் எவ்வளவு துன்புறுத்தப்பட் டிருக்கவேண்டும். அவற்றோடு போராடியதில் எத்தனைபேர் மடிந்திருக்க வேண்டும்! அவர்கள் எல்லாருமே அக்கொடுவிலங்குகளின் போராட்டத்தில் மாண்டு மடிந்துபோயிருந்தால், நாமெல்லாம் இங்கே தலைக்காட்டிப் பிறந்திருத்தல்கூடுமோ! அப்பழையபோராட்டத்தில் அவ்விலங்கினங்களுக்குத் தப்பிப்பிழைக்கும் வகை கண்டறியும் பொருட்டுத் தம் அறிவையும் விடாமுயற்சியையும் பயன்படுத்தி அவற்வைத் தப்பி யுயிர்வாழ்ந்த சிலராயினும் வழிவழித் தோன்றினமையா லன்றோ நாம் இஞ்ஞான்று நாகரிகத்திற் சிறந்து இன்பவாழ்க்கையில் வாழ்கின்றோம்?

அப்பண்டைமக்கட் சிறுகூட்டத்தில் ஒரு சிலர் ஏனையோரினுஞ் சிறிது அறிவுவிளக்கம் உடையராகித், தம்மோடு ஓயாப்போர் மலைந்த அக்கொடுவிலங்குகளைக் கொல்லுதற்குவலியதீக்கற்களிலிருந்து கத்திகளும் மழுப்படைகளும்அம்புகளுஞ்செய்யக் கற்றுக்கொண்ட காலந்தொட்டும்; அதன்பின் அப்படைகளைக்கொண்டு அவ்விலங்குகளைக் கொன்று அவைதம் இனங்கள் பின்னர் அச்சத்தால் தம்மையணுகாமல் அகன்றோடிவிடத் தாங் காடுகளிலும் மலைகளிலும் அச்சமின்றி யுலவி ஆங்காங்குள்ள காய்களையுங் கனிகளையுங் கிழங்குகளையும் வித்துக்களையும் இலைகளையும் மிகுதியாய்ப் பெற்றுண்டும், மரக்கோடுகள் பொந்துகளிற் கிடைத்த தேனையும் மலைச்சுனைகள் மலையருவிகள் கான்யாறுகள் மடுக்களிற் பெற்ற நீரையும் பருகியும் நாளுக்குநாள் உடல்நல மனநலங்களிற்சிறந்து அவரது கால்வழி பெருகத்துவங்கிய காலந்தொட்டும்; அதன்பிற் றம்மை யெதிர்த்துத் தம்மாற் கொல்லப்பட்ட விலங்கின் தசைகள் மலைப்பாறைகண்

மேற் கிடந்து வெயில் வெப்பத்தால் வெதுப்பப்பட்டுத் தின்னுதற் கேற்ற மணமுஞ் சுவையும் வாய்ந்தனவா தலைக் கண்டுகொண்ட அம்மக்களில் வேறு சிலர், வெயிலைப்போல் வெய்யவாய்ச் சுடும் நெருப்பு ஒன்று உண்டென்பதைத் தாந் தீக்கல்லிலிருந்து கத்தி மழு முத லான கருவிகள் அமைத்தக்காற் பறந்த தீப்பொறிகளால் அறிந்து, அக்கற்களை ஒன்றோடொன்று மோதியுண்டாக் கிய தீயிற் பிறகு அவ்விலங்கின் தசைகளை வதக்கிச் சுட்டுத் தின்னத் தெரிந்த காலந்தொட்டும்; பறவையினங் கள் தாங் குஞ்சுபொரிக்கும் பருவம் அண்முதலும், நார் களாலும் மரக்குச்சிகளாலும் மரப்பஞ்சுகளாலுங் கூடு கள் கட்டி அவற்றினுள்ளிருந்து முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து இனிதுவாழ்தலை உற்றுநோக்கிய அப்பழைய மக்களிற் பின்னுஞ்சிலர் தாமும் அப்பறவைகளைப்போல் மரக்கொம்புகள் வளார்கள் நார்கள் இலைகளாற் சிறு சிறு குடில்கள் அமைத்து அவற்றுட் டாமுந் தம்மக்களும், வெயில் மழை பனி பனிக்காற்று முதலியவைகளால் அலக்கணுறாமல் இனிது வாழத்தெரிந்த காலந்தொட்டும்; மழையில் நனையாமலுங் குளிரில் நடுங்காமலும் பறவை கள் விலங்குகள் உடம்பெங்கும் மயிர்ப்போர்வையால் நன்குமூடப்பட்டிருத்தலைக் கருதிப்பார்த்த அப்பண்டை மாந்தரிற் பின்னுஞ்சிலர் தாமுந் தாங்கொன்ற விலங்கு களின் தோலை உரித்தெடுத்து அவற்றின்மேலுள்ள மயி ரைச் சீவாமற் றம்மேல் அவைதம்மைப் போர்த்துக் கொள்ளத் தெரிந்த காலந்தொட்டும்; அப்பறவைகளும் அவ்விலங்குகளுந் தம்மெண்ணங்களைத் தமக்குட் சிற் சில ஒலிகளால் அறிவித்துக்கொள்ளுதலைப் பலகாலும் உற்றுநோக்கி வியந்த அம்மாந்தரில் மேலுஞ் சிலர்தாமும் அவைபோற் சிற்சில ஒலிகளை எழுப்பித் தங்கருத்தைத் தம்மனோர்க் கறிவிக்கத்துவங்கிய காலந்தொட்டும் நம் முதுமக்களின் வாழ்க்கையானது வரவர நாகரிகத்தில்

வளர்ந்தோங்கி வரலாயிற்றென்பதை நாங் கருத்திற் பதித்தல்வேண்டும்.

அங்ஙனம் நம்பண்டைமக்கள் தமதறிவைமேலுக்குமேற் பயன்படுத்தி உழைப்பும் விடாமுயற்சியும் உடையராய் நடந்திரா விட்டால், மக்கட் பூண்டென்பதேயொன்று சுவடில்லாமல் மாய்ந்து மறைந்துபோயிருக்குமென்பதை நாஞ்சொல்லுதலும் வேண்டுமோ? அவ்வாறு அவர்கள் இந்நிலவுலகிற் றோன்றிய காலம்முதற் சிறிதும் மடிந்திராமல் அறிவும் முயற்சியும் உடையராய் ஒழுகி வாழ்க்கைசெலுத்திவந்த இறந்தகால நிகழச்சியினை நாம் ஆராய்ந்து பார்க்கப்பார்க்க, நாம் உயிரோடிருக்கும் இந்நிகழ்காலத்தும், நமக்குப் பின் நம்மரபில் வருவார் உயிர் வாழும் எதிர்காலத்தும் எல்லாரும் நாளுக்குநாள் எவ்வளவு அறிவும் எவ்வளவு முயற்சியுமுடையராய் ஒழுகுதல் வேண்டுமென்பது விளங்காமற்போகுமோ?

இனி, அறிவும் உழைப்பும் முயற்சியும் என்னும் மூன்றனுள் அறிவை மேன்மேற் பெருக்கினாலல்லாமல், உழைப்பும் முயற்சியும் மிக்கபயனைத் தரா. நாடோறுங் காலையில் எழுந்து மாலைவரையில் உழுதொழிலைச் செய்வோனுஞ், சரக்குவண்டியிழுப்போனும், யாற்றிற் படகு செலுத்துவோனுங், காட்டில் விறகுவெட்டி விற்போனுந் தாம் வழக்கமாய் மேற்கொண்ட அவ்வுழைப்புக்குமேற் றமதறிவைப் பெருகச்செய்வதில் அவாவில்லாதவர்களாய் நாட்கழிப்பாராயின், அவரது செயல், நெற்குத்தும் பொறி, மாவரைக்கும் பொறி, நீர்இறைக்கும் பொறி, வண்டியீர்க்கும் பொறி முதலியவற்றின் அறிவில்லாச் செயலையே ஒப்பதாய்விடும். ஆகவே, கடுமையானதோர் உழைப்பிற் புகுந்திருக்கும்போதும் அதனை மேன்மேல் அறிவுடன்செய்து பயன்படுத்துவதோடு, அதுசெய்தநேரம் போக மிச்சமான நேரத்தை உயர்ந்த அறிவுடையோர் செய்த நூல்களைப்பயல்வதிலும் பயன்படுத்தல்வேண்டும்.

ஏனெனில், அறிவை மேன்மேற் பெருக்குவதற்கு ஏற்ற வழி, அறிவின் மிக்கார் இயற்றிய நூல்களை இடையறாது பயில்வதே யாகும். மணற்கேணியினைத் தோண்டத் தோண்ட நீர் ஊறுதல்போல ஆன்றோர் நூல்களைக் கற்கக் கற்க அறிவு எல்லையின்றி வளராநிற்கும்.

> "தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு"

என்றார் திருவள்ளுவரும். அங்ஙனமே, வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டிய செல்வப்பொருளை ஈட்டு தற்குப் பலதுறைகளிற் புகுந்து பல்வகை முயற்சிகள் செய்வோரும், அம் முயற்சியளவில் தமதறிவைக் கரை கோலி மட்டுப்படுத்திவிடாமல், அம்முயற்சி யவிந்த நேரங்களில் விழுமிய அறிவு நூல்களைத் தொடர்பாகக் கற்று அறிவை விரிவுசெய்தல் வேண்டும். அங்ஙனஞ் செய்யாக்கால், தமக்கு இரைவேண்டுங் காலத்துங் குஞ்சு பொரிக்குங்காலத்தும் மிக்க சுருசுருப்புடன் முயன்று, பின்னர் முயற்சி யற்று வாளா இருந்து கழியும் பறவை கள் முதலான சிற்றுயிர்களுக்கும் மக்கட்கும் வேற்றுமை இல்லையாய் விடும். இரைதேடித் தின்றபிற், சிற்சில காலங் களில் ஆணும் பெண்ணுமாய் மருவிச் சிறிது இன்புறும் அத்துணையே யன்றி, அதனின் மிக்க இன்பத்தைத் தொடர்பாக நுகர்தற்கேனும், அந் நுகர்ச்சியினைப்பயத்தற் கேற்ற அறிவினை மேன்மேற் றோற்றுவித்தற்கேனும் அச் சிற்றுயிர்கள் வல்லனஅல்ல. மக்களோ தமக்கு அரிதின் வாய்த்த பகுத்தறிவின் மாட்சிகொண்டு தமது வாழ்க் கையில் வருந் துன்பங்களை வரவரக் குறைத்து, நாளுக்கு நாள் தாந் தொடர்பாக இன்பந் துய்த்தற்கேற்ற வழி துறைகளைத் தம்மறிவு முயற்சியாற் கண்டடைந்து வரு கின்றனர். இவ்வாறு அறிவும் இன்பமும் நாளுக்குநாட் பெருகப்பெறும் மக்கள் வாழ்க்கைதான் நாகரிகவாழ்க் கை யென்றும், மற்று அவையிரண்டும் பெருகுதல் இல்

லாத மாக்களின் உயிர்வாழ்க்கையோ நாகரிகமில்லா வெற்றுயிர் வாழ்க்கையென்றும் வழங்கப்படும். தமக் குள்ள பகுத்தறிவினைப் பயன்படுத்துகின்றவர்களே மக் கள்; மற்று, அதனைப் பயன்படுத்தாதவர்களோ மாக்கள். இந்த உண்மை முறையில் வைத்து நம்நாட்டவர் வாழ்க் கை நிலையினையும் மேல்நாட்டவர் வாழ்க்கை நிலையினையும் ஒப்பிட்டுப் பார்க்குங்கால், மேல்நாட்டவர் நிலையே மிக வும் பாராட்டற்பாலதான விழுப்பமுடைத்தாய் விளங் காநிற்கின்றது. நீராவிப்பொறி, அச்சுப்பொறி, காவல் விளக்கு (Safety lamp), மின்செய்தி (Electric telegraph), கம்பியில் செய்தி (Wirless message) முதலான பலவியப்பு களையெல்லாம் அரும்பாடுபட்டுத் தாங் கண்டறிந்த தல் லாமலுங், தாங்கண்ட அவ்வியப்புகளைக் கோடி கோடி யாகப் பொருட்செலவு செய்து இம்மாநிலமெங்கும் பரப்பி, எல்லா மக்கள் இனமும் அவற்றின் பயனை யெய்தி, முன்னே தமக்கிருந்த பல்பெருந் துன்பங்களெல்லாம் நீங்கி இன்புற்று வாழுமாறு பேருதவி புரிந்துவரும் மேனாட் டறிஞரின் அறிவுமுயற்சி, எல்லாமாந்தரின் நன்றியறிவுக்கும் இடனாய்த் திகழ்கின்றதன்றோ?

அங்ஙனம் மேனாட்டறிஞர் கண்டறிந்து பரப்பிய பல்பெரும் பொறிகளில், நூல்நூற்கும் பொறியும் மிக்க தொரு பயனை உலகிற்குவிளைத்த வியத்தகுசிறப்புவாய்ந்த தாகும். இதனை ஓவாது அறிவுமுயன்று கண்டுபிடித்த மேலோர் **ஆர்க்குரையர்** (Arkwright) என்னும் பெய ரினராவர். இவர்க்கு முப்பதாண்டுகளுக்கு முன்னே யிருந்த வேறு இருவர் நூற்கும்பொறிகளை வருந்தி யமைத் தனராயினும், அவை முற்றுந் திருத்தமாக அமைக்கப் படாமையால் அவை தொழிற்படுத்தப்பட்டக்காற் செவ் வனே இயங்காமல் வீணாய்ப்போயின. மற்று, ஆர்க்குரை யரோ தமக்கு முன்னேயிருந்தார் கண்டுபிடித்தவை களில் இருந்த குறைபாடுகளை யெல்லாம்நீக்கி, மிகவுந்

திருத்தமானதொரு முறையிற் றமே புதுவதாக ஒரு 'நூற் பொறி'யினைச் செய்துமுடித்தார்.

ஆர்க்குரையர், பெரும்பாலும் எனைப்பெரியாரைப் போற், றாழ்ந்தகுடியிற்றோன்றியவர். இவர் கி.பி. 1732-ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் கண்ணதான 'பிரத்தன்' (Preston) என்னுந் துறைமுகப்பட்டினத்திற் பிறந்தார். இவர்தம்பெற்றோர்களோ மிகவும் ஏழைமையான நிலையிலிருந்தார்கள். அவர்கட்குப்பிறந்த பதின்மூன்று பிள்ளைகளுள் இவர் கடைசிப்பிள்ளை யாவர். இவர் பள்ளிக்கூடத்திற்சென்று கல்விபயின்றதேயில்லை; இவர் கற்றுக்கொண்டதெல்லாம் இவர் தாமாகவே முயன்று கற்றதொரு சிறுகல்வியாகும்; தமது முடிவுகாலம்வரையில் மிகவுந் தொல்லைப்பட்டே இவர் ஏதும் எழுதக்கூடியவராய் இருந்தனர். இவர் சிறுபிள்ளையா யிருந்தஞான்று, ஓர் அம்பட்டனிடத்தில் தொழில் கற்றுக்கொள்ளுமாறு விடப்பட்டார். அதனை நன்குகற்றறிந்தபின், 'பொலுத்தான்' என்றும் ஊரில் தாம் அத்தொழிலை நடத்துதற்குச் சென்று, நிலத்தின் கீழ் உள்ளதோர் அறையைக் குடிக்கூலிக்கெடுத்து, அதன்மேல் "நிலத்தின் கீழ் அம்பட்டனிடம் வாருங்கள், அவன் ஒரு பணத்திற்குச் சிரைக்கின்றான்" எனப் பலகையும் எழுதிக் கட்டிவிட்டார். அதனால், மற்றை அம்பட்டர்க்கு வருவாய் சுருங்கவே, அவர்களுந் தமது சிரைப்புக்கூலியை அந்த அளவுக்கே குறைக்கவேண்டியவரானார்கள். அதுகண்ட ஆர்க்குரையர் தமது தொழில்நன்குநடைபெறல்வேண்டி, "அரைப்பணற்திற்கு இங்கே திருத்தமான சிரைப்பு" எனப் பலகை எழுதிக் கட்டினார்.

இவ்வாறு சில ஆண்டுகள் கழித்தபின், அவர் அந்நிலவறையைவிட்டுத், தெருத்தெருவாய்த்திரிந்து மயிர் விற்பனைசெய்யுந் தொழிலை மேற்கொண்டார். அந்நாளில் மேல்நாட்டவர் தந் தலைக்குப் பொய்ம்மயிர் வைத்துப்

லாத மாக்களின் உயிர்வாழ்க்கையோ நாகரிகமில்லா வெற்றுயிர் வாழ்க்கையென்றும் வழங்கப்படும். தமக்குள்ள பகுத்தறிவினைப் பயன்படுத்துகின்றவர்களே **மக்கள்**; மற்று, அதனைப் பயன்படுத்தாதவர்களோ **மாக்கள்**. இந்த உண்மை முறையில் வைத்து நம்நாட்டவர் வாழ்க்கை நிலையினையும் மேல்நாட்டவர் வாழ்க்கை நிலையினையும் ஒப்பிட்டுப் பார்க்குங்கால், மேல்நாட்டவர் நிலையே மிகவும் பாராட்டற்பாலதான விழுப்பமுடைத்தாய் விளங்காநிற்கின்றது. நீராவிப்பொறி, அச்சுப்பொறி, காவல் விளக்கு (Safety lamp), மின்செய்தி (Electric telegraph), கம்பியில் செய்தி (Wirless message) முதலான பலவியப்புகளையெல்லாம் அரும்பாடுபட்டுத் தாங் கண்டறிந்த தல்லாமலுந், தாங்கண்ட அவ்வியப்புகளைக் கோடி கோடியாகப் பொருட்செலவு செய்து இம்மாநிலமெங்கும் பரப்பி, எல்லா மக்கள் இனமும் அவற்றின் பயனை யெய்தி, முன்னே தமக்கிருந்த பல்பெருந் துன்பங்களெல்லாம் நீங்கி இன்புற்று வாழுமாறு பேருதவி புரிந்துவரும் மேனாட் டறிஞரின் அறிவுமுயற்சி, எல்லாமாந்தரின் நன்றியறிவுக்கும் இடனாய்த் திகழ்கின்றதன்றோ?

அங்ஙனம் மேனாட்டறிஞர் கண்டறிந்து பரப்பிய பல்பெரும் பொறிகளில், நூல்நூற்கும் பொறியும் மிக்கதொரு பயனை உலகிற்குவிளைத்த வியத்தகுசிறப்புவாய்ந்ததாகும். இதனை ஓவாது அறிவுமுயன்று கண்டுபிடித்த மேலோர் **ஆர்க்குரையர்** (Arkwright) என்னும் பெயரினராவர். இவர்க்கு முப்பதாண்டுகளுக்கு முன்னேயிருந்த வேறு இருவர் நூற்கும்பொறிகளை வருந்தி யமைத்தனராயினும், அவை முற்றுந் திருத்தமாக அமைக்கப்படாமையால் அவை தொழிற்படுத்தப்பட்டக்காற் செவ்வனே இயங்காமல் வீணாய்ப்போயின. மற்று, ஆர்க்குரையரோ தமக்கு முன்னேயிருந்தார் கண்டுபிடித்தவைகளில் இருந்த குறைபாடுகளை யெல்லாம்நீக்கி, மிகவுந்

திருத்தமானதொரு முறையிற் றமே புதுவதாக ஒரு'நூற் பொறி'யினைச் செய்துமுடித்தார்.

ஆர்க்குரையர், பெரும்பாலும் ஏனைப்பெரியாரைப் போற், றாழ்ந்தகுடியிற்றோன்றியவர். இவர் கி.பி. 1732-ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் கண்ணதான 'பிரத்தன்' (Preston) என்னுந் துறைமுகப்பட்டினத்திற் பிறந்தார். இவர்தம்பெற்றோர்களோ மிகவும் ஏழைமையான நிலையி லிருந்தார்கள். அவர்கட்குப்பிறந்த பதின்மூன்று பிள்ளை களுள் இவர் கடைசிப்பிள்ளை யாவர். இவர் பள்ளிக் கூடத்திற்சென்று கல்விபயின்றதேயில்லை; இவர் கற்றுக் கொண்டதெல்லாம் இவர் தாமாகவே முயன்று கற்ற தொரு சிறுகல்வியாகும்; தமது முடிவுகாலம்வரையில் மிகவுந் தொல்லைப்பட்டே இவர் ஏதும் எழுதக்கூடிய வராய் இருந்தனர். இவர் சிறுபிள்ளையா யிருந்தஞான்று, ஓர் அம்பட்டனிடத்தில் தொழில் கற்றுக்கொள்ளுமாறு விடப்பட்டார். அதனை நன்குகற்றறிந்தபின், 'பொலுத் தான்' என்றும் ஊரில் தாம் அத்தொழிலை நடத்துதற்குச் சென்று, நிலத்தின் கீழ் உள்ளதோர் அறையைக் குடிக் கூலிக்கெடுத்து, அதன்மேல் "நிலத்தின் கீழ் அம்பட்ட னிடம் வாருங்கள், அவன் ஒரு பணத்திற்குச் சிரைக் கின்றான்" எனப் பலகையும் எழுதிக் கட்டிவிட்டார். அதனால், மற்றை அம்பட்டர்க்கு வருவாய் சுருங்கவே, அவர்களுந் தமது சிரைப்புக்கூலியை அந்த அளவுக்கே குறைக்கவேண்டியவரானார்கள். அதுகண்ட ஆர்க்குரை யர் தமதுதொழில்நன்குநடைபெறல்வேண்டி, "அரைப் பணத்திற்கு இங்கே திருத்தமான சிரைப்பு" எனப் பல கை எழுதிக் கட்டினார்.

இவ்வாறு சில ஆண்டுகள் கழித்தபின், அவர் அந் நிலவறையைவிட்டுத், தெருத்தெருவாய்த்திரிந்து மயிர் விற்பனைசெய்யுந் தொழிலை மேற்கொண்டார். அந்நாளில் மேல்நாட்டவர் தந் தலைக்குப் பொய்ம்மயிர் வைத்துப்

புனைந்துகொள்வது வழக்கம். அதனால், அஞ்ஞான்றை மயிர்வினைஞர் அத்தகைய பொய்ம்மயிர் முடிகள் செய்து விற்குந்தொழிலை மிகுதியாய் மேற்கொண்டிருந்தனர். ஆகவே, ஆர்க்குரையரும் அம்முடிகளின் பொருட்டுத் தலைமயிர் வாங்கி விற்றுவந்தார். இலங்காஊரிற் கூடுஞ் சந்தைகளில், தங் கூந்தலை நீளப்பின்னிவிடுதற்காகத் தலைமயிர் வாங்கவரும் மகளிர்க்கு இவர் மயிர்விற்பனை செய்ததில் நல்ல ஊதியத்தை அடைந்தார். அதுவல்லாமலும், இவர் ஒருசிறந்த மயிர்ச்சாயஞ் செய்து திறமையாக விற்றதிலிருந்தும் மிக்க ஊதியத்தைப்பெற்றார். இங்ஙனமெல்லாம் இத்துறையில் இவர் சுருசுருப்பாக முயன்றும், இவரது வாழ்நாட்செலவுக்குமேல் மிகுதியாய் வேறேதுங் கிடைத்திலது.

பின்னர்ச் சில ஆண்டுகளிலெல்லாம், பொய்ம்மயிர் புனையும் நடையும் மாறிவிடலாயிற்று. அதனாற், பொய்ம்மயிர்வினைஞரெல்லாரும் பெரிதும் இடருழக்கலானார்கள். ஆயினும், ஆர்க்குரையர் தமது முயற்சியை அத்துறையினின்றுந் திருப்பித், தமக்கு இயற்கையாய் வாய்ந்தபொறியமைக்கும்வழியிற்செலுத்தத்துவங்கினார். அஞ்ஞான்று, நூல்நூற்கும் பொறியொன்று அமைப்பதற்குப் பலர் பலவாறு முயன்றுகொண்டிருந்தனர். அது கண்ட ஆர்க்குரையர் தாமும் அத்துறையில் இறங்கினார். தாமாகவே கலையறிவிற் றேர்ச்சிபெற்ற மற்றைப்பெரியாரைப்போல், இவரும் முன்னமே தமக்குக் கிடைத்த ஒழிவுநேரங்களில், எப்பொழுதும் இயங்கவல்லதான ஒரு பொறியைப் புதிதுசெய்வதிற் றமது கருத்தைச் செலுத்திவந்தார்; அம்முயற்சியிலிருந்து நூற்கும் பொறியினை ஆக்குவது அவர்க்கு எளிதில் வந்து கைகூடிற்று.

அங்ஙனம் அதனை ஆக்கும் ஆராய்ச்சியிலேயே இவர் தமது கருத்தை முழுதும் ஈடுபடுத்தியிருந்தமையால், தமக்கு வழக்கமாயுள்ள தொழிலையும் பராமுகஞ்

செய்தனர்; அதனாற், சிறிது மிச்சம்பிடித்து வைத்திருந்த பணத்தையுந் தொலைத்துவிட்டனர்; கொடிய வறுமையும் இவரைவந்துபற்றி நலிவதாயிற்று. இத்தறுவாயில் இவர்க்கு மணமாகியிருந்தது. இவர்தம் மனைவி, இவர் தம்முடைய காலத்தையுங் காசையும் வேண்டுமென்றே பாழாக்குவதாகக்கருதி மனம்பொறுதவளாய், ஒருநாள் தனக்குத் திடுமெனத்தோன்றிய மிக்கசினத்தால், தனது குடும்பத்திற்குவந்த வறுமையின் காரணத்தைப் போக்குவாள்போல், இவர் உருவாக்கிவைத்திருந்த மூலப்பொறிகளையெல்லாம் வலிந்தெடுத்து உடைத்தெறிந்தாள். ஆர்க்குரையரோ தாம் மேற்கொண்டதோர் அருமுயற்சியில் விடாப்பிடியும் மனக்கிளர்ச்சியும் வாய்ந்தவர்; ஆகவே, இவர் தம் மனைவிசெய்த இவ்வடாச்செயலைக்கண்டு அள வுக்குமிஞ்சிய மனநோக்காடுடையராய்,உடனே அவளை விட்டுப் பிரிந்துபோயினர்.

பிறகு, அயலூர்களில் இவர் செல்கையில், 'வாரிங்கதன்' (Warrington) என்னும் ஊரில் நாழிகைவட்டில் (கடிகாரம்) செய்வாரான 'கே' எனப்பெயரிய ஒருவரோடு இவர் பழக்கமானார். அவர், இவர் ஆக்கிய 'ஓவா இயக்கப்பொறி'யின் சில பகுதிகளைச் செய்வதற்கு உதவி புரிந்தார். ஆர்க்குரையர் சிகழிகை விற்குந் தொழிலை அறவே கைவிட்டுத், தாஞ் சமைத்தற்குப் புகுந்த நூற்பொறியை முற்றுந் திருத்தமாகச் செய்துமுடித்தலிலேயே கருத்தொருப்பட்டு நின்றார். அதனை முடித்த பின், அதன் முதற்படியினை இவர் சொல்லிக் காட்டிய வண்ணமே 'கே' என்பவர் செவ்வனே செய்தமைத்தார். அங்ஙனம் அமைத்த அப்பொறியைப், பிரத்தன்மா நகரின் கண்ணதான இலக்கண அறச்சாலையின் கூடத்திற் கொண்டுபோய் வைத்தார். இவர் தமக்குள்ள வறுமையாற் கந்தையாய்ப் போன உடைகளை உடுத்திருத்தல் கண்ட அவ்வூரவர் சிலர் தாம் ஒருங்குசேர்ந்துதவிய

பொருளாற் புதிய உடைசெய்து அவரை உடுப்பித்தனர். அதன்பிறகே இவர் தமது பொறியினைக் காட்டுங் கூடத்திற்குச் சென்றனர். ஆனால், கையால் நூல் நூற்றுப் பிழைக்குந் தொழிலாளிகள் நிறைந்த அந் நகரத்தில் இவர் தமது நூற்பொறியைக் கொணர்ந்து காட்டுவது இடர் விளைப்பதொன்றாய்த் தோன்றியது. அவ்வறப்பள்ளிக்கூடத்துக்கு வெளியிலே அத்தொழிலாளிகள் இடையிடையே உறுமும் ஒலி கேட்டது. இதற்கு முன் ஒரு நூனூழிப்பொறி அமைத்த 'கே' என்பவரும், இராட்டினம் ஒன்றமைத்த எளிய 'ஆர்கிரிவரும்'தாம் ஆக்கிய அப் பொறிகளைப் பலர்க்குங் காட்டப்போன ஊர்களில் அவ் வூர்க் கலகக்காரரால், அவருடைய பொறிகள் உடைத்தெறியப்பட்டன. அந்நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்த ஆர்க்குரையர் இனி இவ்வூரிற் றங்குவது தொல்லைக் கிடமாகுமென அஞ்சித், தமது பொறியை யெடுத்துக்கொண்டு அத்தகைய துன்பத்திற்கு அஞ்சவேண்டுவதில்லாத 'நாட்டிங்காம்' என்னும் நகருக்குப் போயினர்.

அங்கே சில நாள் வைகித், தமக்குப் பொருளுதவி செய்து, தமது நூற்பொறியைப் பயன்படுத்தத் தக்காரை இவர் நாடுகையில், அந்நகரில் மிக்க புகழ்உடைய ஒரு தொழில் நிலையத்தின் தலைவரும் பொறிகள் அமைப்பதிற் றிறமைவாய்ந்தவரும் ஆன 'இசுருதர்' (Strutt) என்பார் தமக்கு நண்பராகப்பெற்றார். இசுருதர் இவர் ஆக்கிய நூற்பொறியின் அமைப்பினைக் கண்டு மிகவும் வியந்து, தம்மொடு கூட்டாகச் சேர்ந்து நூற்குந்தொழில் நடாத்தும்படி இவரோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதுமுதல் இவர்க்கு நல்லகாலம் பிறந்தது. 1769-ஆம் ஆண்டில் ஆர்க்குரையர் பெயரினாலேயே அந்நூற்பொறிக்குரிமை வாங்கப்பட்டது. அதே ஆண்டில் 'ஜேம்ஸ்வாட்' என்பவர் புதிதுகண்டமைத்த 'நீராவிப் பொறி'க்கு உரிமை வாங்கப்பட்ட நிகழ்ச்சியும் ஒத்துக்

கொண்டமை பெரிதும் இறும்பூது பயப்பதாயிருக்கின் றது. அதன்பின், அந்நாட்டிங்காம் ஊரிலேதான் முதன் முதல் ஒரு பஞ்சாலை நிறுவப்பட்டது.

இவ்வளவிலே ஆர்க்குரையரின் பாடு முடிந்த தென்று சொல்லுதற்கிடமில்லை. தாம் இயற்றிய நூற் பொறி இயங்குங்கால் அதில் இவர் இன்னும் பல சீர் திருத்தங்கள் செய்யவேண்டியவரானார். ஓயாமல் அதிற் பலமாறுதல்களுந் திருத்தங்களுஞ் செய்தபடியாகவே யிருந்தார். அங்ஙனமெல்லாம் இவர் அதனைச் செப்பஞ் செய்து கொண்டுவந்த பின்னர்த்தான் அது செவ்வனே யியங்கிப் பயன்றருவதாயிற்று. இவ்வாறு அது செவ்வ னே நடைபெறலானபின்னுஞ், சில ஆண்டுகள் வரையில் தன்னால் வருவாய்க்கிடமின்றி மனவயர்ச்சியினை உண் டாக்கியதன்றியும், அது தன் செலவுக்காக ஏராளமான பொருளையும் விழுங்கிவரலாயிற்று.

இவ்வாறு சில ஆண்டுகள் கடந்தபின், நன்மையுண் டாகி வருந் தறுவாயில், இலங்காமாகாணத்துக் கைந் நெசவுகாரர்கள், ஆர்க்குரையரது உரிமை நூற்பொறியை வலிந்துகைப்பற்றி உடைத்தெறிந்தனர். ஆர்க்குரையர் தொழிலாளிகட்குப் பகைஞர் என்றும் ஆங்காங்கு ஏசப் பட்டார். சோர்லிஎன்னும் ஊருக்கு அருகாமையில் இவர் அமைப்பித்த பஞ்சாலையினையும் அவ்வூர்க் கலகக் காரர்கள் இடித்தழித்தனர்; ஊர்காவற்காரர்களும் படை ஞரும் அதனைத்தடுக்க எவ்வளவோ முயன்றும் பயன் படவில்லை. ஆர்க்குரையரின் பஞ்சாலையிற் செய்யப்பட்டு வெளிவந்த சரக்குகள், ஏனையோர் கொணர்ந்து விற்ற சரக்குகள் எல்லாவற்றினும் மிகச்சிறந்தனவாயிருந்தும், இலங்கா ஊரார் அவைதம்மை வாங்காமல் மறுத்துவிட் டனர். அதன்மேலும், இவருடைய பொறிகளுக்கு உரி மை கொடுப்பதனையும் அவ்வூரவர் மறுத்துவிட்டதுடன், இவரை அறமன்றத்திற்கு இழுத்து நசுக்கிவிடவுந் துணிந்

தனர். செம்மையுள்ளம் வாய்ந்தாரனைவரும் அருவருக்கு மாறு இவரது உரிமையினையும் அவர்கள் கவிழ்த்துவிட்டனர். வழக்குமுடிந்து இவர் தம் எதிரிகள் தங்கியிருந்த உணவுவிடுதி யோரமாய்ச் செல்கையில், அவர்களுள் ஒருவன் இவரது செவியிற்கேட்கும்படி "கடைசியாக நாம் பழைய அம்பட்டனைத் தொலைத்துவிட்டோம்" என உரக்கச்சொல்லினன்; அதற்கிவர் பொறுமையாய், "அதைப்பற்றிக் கவலையில்லை; இன்னும் என்னிடஞ் சிரைக்குங்கத்தி மிச்சமாய் இருக்கின்றது; அதுகொண்டு நுங்களெல்லாரையுஞ் சிரைத்துவிடுவேன்" என மறு மொழிதந்தனர்.

பின்னர்ச் சிறிதுகாலத்தில் இவர் இலங்காவூர்முதற் பல இடங்களிற் புதிய பஞ்சாலைகள் அமைத்தனர். இசுருதருடன்கொண்ட கூட்டுத் தீர்ந்தபின் இருவருஞ் சேர்ந்து நடத்திய பஞ்சாலைகளும் இவருடைய கைக்கு வந்தன. இவருடைய பஞ்சாலைகளிலிருந்து போந்த சரக்குகள் தொகையிலுந் தன்மையிலும் விழுமியவா யிருந்தமையாற், சிறிதுகாலத்திலெல்லாம் நூல்வாணிகம் முழுதும் இவரது ஆட்சிக்கே உட்படலாயிற்று. ஏனை நூல் வணிகர் தொழில் முற்றும் இவரது ஆட்சிக்கீழ் வந்தமையால், இவரே சரக்குகளின் விலையை ஒருநிலையில் வைத்து உறுதிப்படுத்தினர்.

இவ்வாறாக ஆர்க்குரையர் தமக்குநேர்ந்த பல அல்லல்களின் இடையிலுஞ் சிறிதும் உளங்கலங்காதவராய்த், தாம் மேற்கொண்டதொரு சிறந்த முயற்சியிலேயே உறைத்துநின்றமையால், இவர் அவ்விடர்களை யெல்லாம் புறங்கண்டு, தமதரியமுயற்சியின் பயனை நன்கு பெறலானார். முதன்முதற் றாம்ஆக்கிய நூற்பொறிக்குப்பின் பதினெட்டாண்டுகள் கழித்துத், 'தெரிபி' மாகாணத்தினுள்ளாரால் இவர் பெரிதும் நன்குமதிக்கப்பட்டு, இவர் அவ்வூர்க்கு நாட்டாண்மைக்காரராகவும் ஏற்படுத்தப்

இருந்தது! பற்பல ஊர்களிலும் நகர்களிலும் உள்ள அன்பர்கள் தாந்தாமாகவே அடிகளின் அறுபதாம் ஆண்டு நிறைவை, அடிகள் தமது சிந்தனைக் கட்டுரைகள் என்னும் நூலின் "விளக்க உரைக் குறிப்புகளில்" எழுதியிருக்குந் தமது வரலாற்றுக் குறிப்பைக் கொண்டு தெரிந்துகொண்டு, விழாக் கொண்டாடலாயினர்கள்.

வாழ்த்துங் காணிக்கையும் அனுப்பியவர்கள்

பாசுனேரி "பொருள் வணிக இளைஞர் கழகத்"தின் தலைமை அமைச்சர் திரு. S. T. கண்ணப்பன் அவர்கள் அவ்வூர் அன்பர்கள்பாலிருந்து திரட்டி வாழ்த்துடன் அனுப்பிய தொகை ரூ 66-4-0. 23-10-1936.

பர்மாவில், கையான்பியான் என்னும் ஊரில் R. M. L. K. R. கடையிற் கணக்காளரா யிருக்குந் திரு. சொ. லிங்கேஸ்வரன் அவர்கள் வாழ்த்துடன் அனுப்பியது ரூ 5. 25-8-1936.

சைகோன் ஊரிலுள்ள திரு. S. P. K. A. காசி விசுவநாதன் அவர்கள் அவ்வூரன்பர்கள்பானின்றுந்திரட்டி வாழ்த்துடன் அனுப்பி வைத்த தொகை ரூ 31. 25-8-1936.

சிதம்பரம் R. C. T. H. உயர்தரக் கல்விச்சாலைத் தமிழாசிரியர் திரு. வி. மு. சோமசுந்தரம் பிள்ளை யவர்கள் அவ்வூர் அன்பர்கள்பானின்றுந்திரட்டி வாழ்த்துடன் அனுப்பிய தொகை ரூ 35. 26-8-1936.

இரங்கூனை அடுத்த கம்பைப் "பொருள் வணிகர் கல்விக்கழக" அமைச்சர்களான திரு. மு. சாத்தப்ப செட்டியாரவர்களும், திரு. மு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்களும் பர்மாவிலுள்ள அன்பர்கள்பாலிருந்து திரட்டி வாழ்த்துடன் அனுப்பி வைத்த தொகை ரூ 376-4-3. 27-10-1936.

தாது, ஆனி, ஆடி—"தாயகம்" ஆசிரியர் திரு. S. அருணாசலம், துறையூர், "வாழ்த்துப்பா," "கட்டுரை."

1936 சூன், 13உ அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தலைமைத் தமிழாசிரியர் திரு. S. சோமசுந்தர பாரதியார், M.A.,B.L. "வேண்டுகோட்கட்டுரை"

20-உ திரு. புண்ணிய மூர்த்தி முதலியார், திருச்சிராப்பள்ளி, "வேண்டுகோட் கட்டுரை"

27-உ திரு. செ. ரா. இராமசாமிப் பிள்ளை யவர்கள், 'தமிழகம்,' 'விடுதலை'யில் "வாழ்த்தும் கட்டுரையும்."

சூலை 9-உ திரு. மு. சாத்தப்ப செட்டியார் 'தனவணிக'னில் "வேண்டுகோட் கட்டுரை"

9-உ "தனவணிகன்" இதழின் வேண்டுகோட் கட்டுரை.

10-உ திரு. மு. சாத்தப்ப செட்டியார், "சுதந்தரன்" இதழிற் கட்டுரை.

13-உ திரு. P. சிதம்பரம் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்., எம். எல். சி., வக்கில், நாகர் கோயில், "வாழ்த்து"

14-உ திரு. தே. வீரராகவன் அவர்கள், தமிழாசிரியர், V. C. உயர்தரப் பள்ளிக்கூடம், ஓமலூர், 'வாழ்த்துப்பா"

14-உ வித்வான் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள், தமிழாசிரியர் அரவங்காடு உயர்தர போர்டு பள்ளிக்கூடம், "வாழ்த்து"

15-உ அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்களுந் தமிழ் மாணவர்களும், அவைகூடித் தீர்மானிதது விடுத்த "வாழ்த்து"

15-உ அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சியாளர் திரு. இராகவையங்கார், கம்பிவழி ' வாழ்த்து"

15-உ திரு. இலட்சுமணப் பிள்ளையவர்கள், பி. ஏ., இசையாசிரியர், திருவனந்தபுரம், கம்பிவழி "வாழ்த்து"

15-உ ஔவைத் தமிழ்க் கழகம், திருவோத்தூர், "வாழ்த்துப்பா"